சொல்லோவியம்

கலைஞர் மு. கருணாநிதி M. L. A.

நேரு நிபுஸ்மார்ட்
லஸ், மயிலாப்பூர்,
சென்னை-4.

விற்பனை உரிமை

ரத்தின பதிப்பகம்

29, சின்னசெட்டி தெரு, திருச்சி - 8.

முதல் பதிப்பு நவம்பர் 1958
பிரசுர உரிமை பெற்றது.

வெளியீடு :
“மக்களாட்சி”, குளித்தலை

விலை ரூபாய் 1-25

அச்சிட்டது : ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சி-8.

பதிப்புரை

கலைஞர் கருணாநிதி எம். எல். ஏ. அவர்களது கருத்துக் கோர்வையான சொற்பொழிவுகளே இந் நூல். ஒவ்வொரு சொற்பொழிவிலும் கற்கண்டின் கனிச்சுவையையும் — ஆழ்கடலின் முத்தன்ன ஆராய்ச்சித் தெளிவையும் சந்திக்கமுடியும்.

இந்நூல் எதிர்கால வரலாற்றுக்கு ஓர் ஏணிப்படி இதை நாம் படிக்கும்போது — பரம்பரைப் பெருமையும் — இன்றைய பரிதாப நிலையும் — இனிச் செய்ய வேண்டிய பணியும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உந்தும்.

அந்த நற்பணியைச் செய்யும் வாய்ப்பை — நூலாக்கி வெளியிடும் உரிமை கொடுத்த வகையில் கலைஞர் மு. க. அவர்கள் 'மக்களாட்சி'க்கு அளித்த அன்பை மறவோம்.

அனைவரும் அன்புகூர்ந்து — ஆதரவு நல்க வேண்டுமென்ற கோரிக்கையைவிட ஆர்வத்துடன் படித்தறியவேண்டிய நூலென்று கூறுவதில் பெருமை கொள்ளுகிறோம்.

வாழ்க தமிழ்! வெல்க திராவிடம்!

குளித்தலை
15—11—58

தொகுப்பு ஆசிரியன்
இளமுருகு பொற்செல்வி
ஆசிரியர் "மக்களாட்சி"

பொருளடக்கம்

		பக்கம்
கொள்கைக்காக வாழ்ந்திடுவோம்	....	5
தூய நறுந் தொண்டு	....	20
பெரியாரைத் துணை கோடல்	....	36
சரிந்த செங்கோட்டை	....	53
பதவி தேடும் காமராசர்	....	61
கட்டாணி முத்தெடுத்தோம்	....	81
கழகம் கைத்தறியாளரின் துணைவன்	....	100
கலையும் மனிதனும்	....	113
விடுதலை வீரன் கூண்டிலே	....	131
துறைமுகம் தாரீர்	....	141
ஒரே யொரு போர்	....	145
தமிழகம் தெரியாதாம்	....	159
பணிபுரிவோம்	....	166

கொள்கைக்காக வாழ்ந்திடுவோம்

*

இன்றையதினம் மலையென மாலை குவித்து அலையென ஆர்வமுள்ள முழக்கஞ்செய்து என்னை வரவேற்ற உங்கள் அனைவரின் ஊக்கத்தையும், உணர்ச்சியையும் நான் எப்படிப் பாராட்டி நன்றி தெரிவிப்பது என்று தெரியாது விழிக்கின்றேன்.

நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்தலுக்கு நிற்கிறேன், என்னை ஆதரிக்கவேண்டுமென்று லாலாப்பேட்டையில் முன்பு பேசினேன். இந்தக் கூட்டத்தில் பாதி அளவு கூட்டந்தான் அன்று இருந்தது. இத்தனைக்கும் குறித்த நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டது அது. ஆனல் இன்றே இக் கூட்டம் குறித்த நேரத்தில் ஆரம்பிக்கப்படவில்லை. எனினும் அன்றைய தினம் கூடியிருந்ததைவிட இரண்டு பங்கு அதிகமான கூட்டத்தை நான் இங்கு காணுகிறேன். இதிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் லாலாபேட்டையில் எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்பது மிகமிக நன்றுகத் தெரிகிறது இரண்டாயிரம், மூவாயிரம் என்ற அளவில் இருந்த கூட்டம்—ஆருயிரமாக வளர்ந்திருக்கிறது என்றுல்—அதுவும் மாலை ஆறு மணியிலிருந்து நடைபெற்ற ஊர்வலத்திலும் கலந்துகொண்டு—அந்தக் களைப்பை மறந்து—பலர் சாப்பாட்டையும் மறந்து—தூக்கத்

திற்கும் கூட்டத்திற்கு மிடையே கூடியிருக்கிறீர் களென்ருல்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை உணர்வு எந்த அளவில் உங்கள் உள்ளத் தில் பதிந்திருக்கிறது என்பதைத்தான் அது புலப் படுத்துகிறது.

இன்றைய தினம் உங்கள் முன்னிலையில், உங்கள் குடும்பத்துப் பிள்ளைகளில் ஒருவனுக நின்றுகொண் டிருக்கும் நான்—சகோதரனுக நின்றுகொண்டிருக் கும் நான்—வீட்டுச் செல்வங்களில் ஒருவனுக நின்று கொண்டிருக்கும் நான் பெற்ற இந்த மாலைகள்—என் கழுத்திலே விழுந்த வெற்றி மாலைகள்—உங்கள் அனைவரின் கழுத்திலேயும் விழுந்த மாலைகள்தான்! நான் பெற்ற வெற்றி நீங்கள் பெற்ற வெற்றியாகும்.

இந்தத் தொகுதியில்—நான் முன்பே குறிப்பிட் டதுபோல என்னை எதிர்த்து பதினன்கு பேர்கள் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டு அது பதிமூன்ருக மாறி, பனிரண்டாகி, பின் பதிஞென்ருகத் தேய்ந்து பிறகு நான் அடிக்கடி கேலியாகக் குறிப்பிட்டதுபோல "தசாவதார"மாகி, நவக்கிரகங்களாக உருவெடுத்து, பின், அஷ்டதிக்குப் பாலகர்களாக மாறி—கடைசியில் ஏழு பேர் என்று முடிந்தது. என் ஒருவனை எதிர்த்து —காங்கிரசு அபேட்சகரைத் தவிர்த்து எனக்கு விழ வேண்டிய வோட்டுகளை நான்காயிரம்—ஐயாயிரம் என்று சுயேச்சைகளை விட்டுப் பிரித்துவிடலாம் என்று நயவஞ்சக நரித்தன்மை செய்தும்—பலிக்காமல், அப் படியும் வெற்றி பெற இயலாமல்—உங்கள் ஒருமித்த ஆதரவால்—உங்கள் அன்புக்குரிய நான் வெற்றிக் களிப்போடு உங்களைச் சந்திக்கும் நல் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் நூற்றிருபது இடங்களில் போட்டியிட்டு, பதினைந்து இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது—என்பது எல்லாம் நீங்கள் அறிந்ததே! பதினைந்து பேர்கள்தான் சட்டசபைக்குச் செல்லயிருக்கிறோம். என்றாலும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நாட்டிலே இருக்கும் செல்வாக்கு என்ன? மக்கள் உள்ளத்திலே அது பெற்றிருக்கும் மதிப்பு என்ன? பெருமை என்ன? மரியாதை என்ன? என்று நீங்கள் ஒரு முறை சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக்கழகம் பதினைந்து இடங்களில் தான் வெற்றிபெற்றது என்றாலும், போட்டியிட்ட நூற்றிருபது இடங்களில் பெற்ற வோட்டுகள் எத்தனை? காங்கிரசு இந்த நாட்டிலே இருநூற்றைறந்து இடங்களில் – மூன்று போக – மிகுதி இருநூற்று இரண்டு இடங்களில் தன் அபேட்சகர்களை நிறுத்தி வைத்தது என்றாலும், அதுபெற்ற மொத்த வோட்டுகள் எத்தனை? காங்கிரசுக்கு எதிர்ப்பாக விழுந்த வோட்டுகள் எத்தனை என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் நமக்கு மிகப்பெரிய உண்மை ஒன்று புலப்படும்.

நான் புள்ளி விபரங்களோடு சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் காங்கிரசு போட்டியிட்ட அத்தனை இடங்களிலும் பெற்ற மொத்த வோட்டுகள் ஐம்பது லட்சத்து நாற்பதினாயிரத்து ஐநூற்று எண்பத்தேழு ஆகும். அந்த இடங்களில் எல்லாம் காங்கிரசுக்கு எதிராக ஒரே பெட்டியில் விழாமல்–திராவிட முன்னேற்றக்கழகப் பெட்டியில் – சோஷலிஸ்டுகளின்

பெட்டியில் – பிரஜா சோஷலிஸ்டுகளின் பெட்டியில் – கம்யூனிஸ்டுகளின் பெட்டியில் – சுயேச்சைகளின் பெட்டியில் – இப்படியாகப் பல பெட்டிகளில் காங்கிரசுக்கு எதிர்ப்பாக விழுந்திருக்கிற மொத்த வோட்டுகள் அறுபத்தோரு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து எழுநூற்று அறுபத்தாருகும். அறுபத்தோரு லட்சம் பேர்கள் காங்கிரசை விரும்பாமல் – "எங்களுக்குக் காங்கிரசு தேவையில்லே" என்று எதிர்ப்பாகத் தீர்ப்பளித்திருக்கிருர்கள்! இந்தப் புள்ளி விபரங்களே வைத்துக்கொண்டு "காங்கிரசு தேவையா இல்லையா?" என்று ஆராய்ந்தால், அதை ஆதரிப்போரைவிட – அதை விரும்பாதவர்கள் பதினேரு லட்சம் பேர்கள் அதிகம் இருக்கிருர்கள் என்பது புரியும்.

காங்கிரசை எதிர்த்து நின்ற கட்சிகள் எல்லாம் ஒன்று சேராத காரணத்தால் – தன்னந்தனியே போட்டியிட்ட காரணத்தால் – சுயேச்சைகளும் குறுக்கே வந்து ஆயிரம், இரண்டாயிரம் என்று வோட்டுகள் பெற்று டெபாசிட்டையும் இழந்த காரணத்தால்தான் – காங்கிரசு பல இடங்களில் வெற்றிபெற முடிந்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனுல், இந்தப் பொதுத்தேர்தலில் காங்கிரசு பெற்ற வெற்றி கொள்கைக்காகப் பெற்ற வெற்றியல்ல! பணத்தால் பெற்ற வெற்றி! அதிகார பலத்தால் பெற்ற வெற்றி! மக்களே ஏமாற்றிய வகையால் பெற்ற வெற்றி!!

காரைக்குடியிலே ராஜா சர். முத்தையா செட்டியார் வெற்றி பெற்ருர் என்ருல், தனது கொள்கைகளே

எடுத்துக்காட்டியா? காங்கிரசிலேயிருந்து நாட்டுக் கும், மக்களுக்கும் அவர் ஆற்றிய தொண்டுகளை விளக்கிக் காட்டியா? இல்லை! இல்லவே இல்லை!!

மந்திரி காமராசரைத்தான் எடுத்துக்கொள்ளு வோமே! எந்த வகையில் அவர் வெற்றி பெற்ருர்? நாம் கேள்விப்படுகிறோம், அவரது தேர்தல் அலுவல கத்தில் காங்கிரசுக் கொடியைக்கூட ஏற்றுவதில்லை யென்று அந்தத்தொகுதி மக்களுக்கு உறுதியளித்து "நான் காமராஜ நாடாராக" நிற்கிறேன். நாடார் பெருமக்களே! நான் உங்கள் ஜாதிக்காரன், என்னை ஆதரிக்காவிட்டால் நம் ஜாதிக்கே ஆபத்து. எனக்கு வோட்டளிக்காவிட்டால் நம் குலத்திற்கே அவமானம் என்று" இத்தகைய பிரச்சாரத்தில் ஈடுபட்டு – காங் கிரசு கொடிக்குக்கூட மதிப்பளிக்காமல் – பலரும் பல விதத்திலே இரண்டு லட்சம், மூன்று லட்சம் என்று செலவு செய்து – இவ்வளவுக்கும் பிறகு, கடைசியில் நான்காயிரம் வோட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிருர். அதுபோலவே, காமராசர் பல இடங்களுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்த நேரத்தில், எல்லா இடங்களுக்கும் பெரிய பெரிய பணக்காரர்களை – ஜமீன்தார்களை நிறுத்தி – வோட்டு ஒன்றுக்கு ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று பணந் தர இயலுமா இவரால்? அந்த அளவுக்குச் சீமான் தானு? என்று கணக்குப்போட்டு–நிறுத்திய காரணத் தால் தான் இந்தத் தடவை காங்கிரசு வெற்றிபெற முடிந்திருக்கிறதே அல்லாமல், தனது கொள்கைகளை காட்டி அல்ல, கருத்துக்களை எடுத்துச்சொல்லி அல்ல நாட்டுக்கு இன்னின்ன நன்மைகளைச் செய்து முடித் திருக்கிறேன் என்று விளக்கி அல்ல, வடநாட்டு

அரசிடமிருந்து தென்னாட்டுக்கென்று இவ்வளவு தொகைபெற்று செலவு செய்திருக்கிறேன் என்று தைரியத்தோடு – துணிவோடு சொல்லி அல்ல – காங்கிரசு வெற்றி பெற்றிருப்பது!

அவர்கள் பெற்ற வெற்றியில் முக்காலே மூன்று வீசம் வெற்றி பணத்தால் தான்! பணத்தால் தான்!! இதை நேர்மையாகப் பெற்ற வெற்றியென்று அவர்களாலேயே சொல்ல முடியாது. அவர்களது மனச்சாட்சியும் அதை ஒப்புக்கொள்ளாது அந்த வெற்றி போலி வெற்றி! நான் குறிப்பிட்டதுபோல அறுபத்து மூன்று லட்சம் பேர்கள் காங்கிரசை வெறுக்கிறார்கள். ஐம்பது லட்சம் பேர்கள் தான் – அதுவும் பணத்தாசை காரணமாகக் காளைமாட்டு பெட்டியில் வோட்டு போட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் குளித்தலைத் தொகுதி வாக்காளர்கள் செய்ததுபோல செய்திருந்தால் – பணத்தையும் பெற்றுக்கொண்டு நல்ல பாடம் கற்பித்திருந்தால் – அங்கெல்லாம் காங்கிரசு நிச்சயம் கவிழ்ந்தே போயிருக்கும்.

குளித்தலையிலே என்ன நடந்தது? எத்தனையோ இடங்களில் பணம் விளையாடியது. சிமிண்ட் மூட்டைகள் விளையாடின. "நான் ஒரு ரூபாய் தருகிறேன் எனக்கே வோட்டுப் போடு" என்று வெற்றிலையோடு தருகிற சீட்டோடு – கையிலே ரூபாய் நோட்டை வைத்து அழுத்தினார்கள். நானே நேரில் பார்த்தேன்; பல இடங்களில் கேள்விப்பட்டேன்! நாங்கள் பட்டப்பகலில் சென்று பிரச்சாரம் செய்தோம்; இதுபோல மேடை அமைத்து பகிரங்கமாக வோட்டுக் கேட்டோம்! ஆனால், எதிரிகள் பகிரங்கமாகவா

வோட்டுக் கேட்டார்கள் ? நள்ளிரவிலே – கன்னக் கோலோடு புகும் கள்வர்களைப் போல – யாராவது வருகிறார்களா ? என்று சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு – காரின் லைட்டையும் அணைத்துவிட்டு – யாரும் வரவில்லை என்பதை அறிந்தவுடன் ஊருக் குள்ளே புகுந்து – ஊரில் முக்கியமான யாரையாவது அழைத்து "இங்கே எத்தனை வோட்டுகள் இருக் கிறது ?" என்று கேட்க – "இருநூறு" என்று சொல்ல "அப்படியே என்ன விலை ?" என்று கேட்டு ஊரையே விலைக்கு வாங்கினார்கள் இருநூறு, முன்னூறு என்று கொடுத்து ! அந்தப்பணம் பங்கு போடப்பட்டது. அப்படி எங்கெங்கு போடப்பட்டது என்பதும் எனக்குத் தெரியும்.

நான் முன்பே இங்கெல்லாம் பேசியிருக்கிறேன், உங்களுக்கு அப்படி அதிகக் கஷ்டமாக இருந்து, அந்த ஒரு ரூபாயோ, இரண்டு ரூபாயோ ஏதோ ஒரு நாள் உணவுக்குப் பயன்படுமென்று நீங்கள் கருதி னால் பணத்தை வாங்கிக்கொள்ளுங்கள் ; ஆனால் வலதுகையால் வாங்காதீர்கள் - தலைமுறை தலை முறைக்கும் மாறுத "அரசியல் பாவம்" அது–ஆகவே அந்தக் களங்கம் படிந்த பணத்தை இடதுகையால் வாங்கி, வலது கையால் உதயசூரியன் பெட்டியில் வோட்டுப் போடுங்கள் என்று. அதைப்போலவே தான் அத்தனை பெரியவர்களும், ஏழை மக்களும் செய் திருக்கிறார்கள். இனி அடுத்த தேர்தலில் யாராவது முன்வர முடியுமா ? "பணத்தை வைத்துக்கொண்டு ஒருகை பார்த்துவிடுகிறே"னென்று. முடியாது. கொள்கையை எடுத்துக்காட்டி தீரவேண்டும். கருத் துக்களைப் பொதுமேடையில் சொல்லியாக வேண்டும்

கருணாநிதியின் கருத்துக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களுக்கும், என்னுடைய கருத்துக்களுக்கும் இன்னின்ன வேறுபாடுகள் இருக்கின்றன. உங்களுக்கு எந்தக் கருத்துத் தேவை?" என்று கேட்டுத்தான் ஆகவேண்டுமே தவிர – மக்களை விலைபேசி விடலாம்; வோட்டுகள் சாதாரணமானவை விலைகொடுத்து வாங்கிவிடலாம் என்ற நினைப்பில் இனிமேல் தேர்தல் நடைபெற முடியாது என்பதற்கான அறிவிப்பு தான் இந்தப் பொதுத்தேர்தல்

எத்தனையோ லட்சம் லட்சமாகப் பணத்தைச் செலவழித்தவர்கள் எல்லாம், தேர்தல் முடிந்தபிறகு கணக்கைப் பார்த்துவிட்டு, "இனி இந்தத் தேர்தல் நமக்குத் தேவையே இல்லை" என்று கருதி—காமராசரே வந்தால்கூட ஆயிரமோ, இரண்டாயிரமோ தந்துவிடுகிறேன் காங்கிரசுக் கட்சிக்கு பத்தாயிரம் தந்துவிடுகிறேன் என்னை விட்டால் போதும்" என்று சொல்லப் போகின்ற பணக்காரர்களை நாம் பார்க்கத் தான் போகிறோம். இனி அவர்கள் காங்கிரசை நம்பி வரமாட்டார்கள்.

ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் எதைக் குறிக்கோளாகக் கொண்டு இந்தத் தேர்தலில் ஈடுபட்டதோ, அந்தக் குறிக்கோளிலே கணிசமான வெற்றியைப் பெற்றிருக்கிறது. நான் விளக்கிச் சொல்ல விரும்புகிறேன், திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட்ட நூற்றிருபது இடங்களிலும் காங்கிரசைச் சந்தித்தது. அதைப்போலவே நாற்பத்துமூன்று இடங்களில் கம்யூனிஸ்டுகளையும், இருபத்தாறு இடங்களில் காங்கிரசு சீர்திருத்தக் கட்சி

யினரையும் சந்தித்தது. நீங்கள் நன்ருக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த நூற்றிருபது இடங்களில் காங்கிரசு பெற்ற வோட்டுகள் முப்பது லட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று ஐம்பத் தைந்தாகும் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வோட்டுகள் பதினேழுலட்சத்து ஒன்பதினுயிரத்து எண்ணூற்று எழுபத்துநான்கு ஆகும்! எங்களைச் சந்தித்த நாற்பத்துமூன்று இடங்களிலும் கம்யூ னிஸ்டு பெற்ற வாக்குகள் ஐந்துலட்சத்து நாற்பத் திரண்டாயிரத்து நூற்றறுபதாகும். காங்கிரஸ் சீர் திருத்தக் கட்சி பெற்றது மூன்றுலட்சத்து நாற்பத் தையாயிரத்து ஏழுநூற்றுமூன்று வோட்டுகள்! இந் தப் புள்ளி விவரங்களை வைத்து ஆராய்ந்தால்— நமக்கு ஒரு மிகப் பெரிய உண்மை புலப்படும். நாட் டிலே காங்கிரசுக்கு அடுத்த பெரிய கட்சி எது வென்ருல், இதுவரை வாய்ச் சவடால் அடித்து வந்தார்களே கம்யூனிஸ்ட் கட்சிதானென்று; அந்தக் கம்யூனிஸ்ட கட்சியல்ல; சோசலிஸ்ட் கட்சியோ; பிரஜா சோசலிஸ்ட் கட்சியோ அல்ல; காங்கிரசு சீர் திருத்தக் கட்சியுமல்ல. திராவிட முன்னேற்றக் கழகம்தான் காங்கிரசுக்கு அடுத்த பெரிய கட்சி என்பது இந்தத் தேர்தலின் மூலம் நிச்சயமாக ஊர்ஜிதமாகி விட்டது.

நான் இதை எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறேன் என்ருல், கம்யூனிஸ்டுகளைச் சந்தித்த நாற்பத்திமூன்று இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வோட்டுகள் ஆறுலட்சத்து இருபத்தி ரண்டாயிரத்து ஏழுநூற்றுபத்தொன்பது ஆகும். கம்யூனிஸ்ட் கட்சி பெற்ற வோட்டுகள் ஐந்துலட்

சத்து இருபத்திரண்டாயிரத்து நூற்றறுபதுதான் ஆகும். அது மாத்திரமல்ல, அந்த இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றிகள் ஆறு. கம்யூனிஸ்ட் கட்சி பெற்ற வெற்றிகள் மூன்று தான். இதிலிருந்து என்ன தெரிகிறது? காங்கிரசுக்கு அடுத்த பெரிய கட்சி திராவிட முன்னேற்றக் கழகந் தான் என்பது நிரூபணமாகி விடவில்லையா?

நூற்றிருபது இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வோட்டுகள் ஏறத்தாழ பதினேழுலட்சம் என்றால்—இன்னும் மிகுதியாயிருந்த எண்பது இடங்களிலும் நாம் அபேட்சகர்களை நிறுத்தியிருப்போமேயானால்–மொத்தமாக காங்கிரசு ஐம்பதுலட்சம் வோட்டுகள் பெற்றிருக்கிறது என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயம் முப்பதுலட்சம் வோட்டுகள் பெற்றிருக்க முடியும் என்றுதான் இந்தக் கணக்கு நமக்குக் காட்டுகிறது.

ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகந்தான் இரண்டாவது பெரிய கட்சி என்பது உறுதியாகிவிட்டது. இதை நாம் மட்டும் சொல்லவில்லை. "மவுண்ட் ரோடு மகாவிஷ்ணு" என்று நாம் வர்ணிப்போமே அந்த 'ஹிந்து'ப் பத்திரிகை தலையங்கத்திலேயே குறித்துவிட்டது. "கல்கி" ஏடு எழுதுகிறது. "ஆனந்த விகட"னும் எழுதுகிறது. "சுதேசமித்திரனும்" ஒப்புக் கொள்ளுகிறது, பாராளு மன்றத்திலே செயலாளராக இருந்து அனுபவ மிக்கவரான கிருஷ்ணய்யரே சொல்லுகிறார். "வலுவான இரண்டாவது கட்சி திராவிட முன்னேற்றக் கழகந்தான்" என்று.

காங்கிரசு ஏறத்தாழ அறுபது ஆண்டு காலமாக இந்த நாட்டிலே வாழுகிறது. அறுபது ஆண்டுகால அனுபவம் மிக்க கட்சி – சஷ்டியப்தபூர்த்தி கொண் டாடிய கட்சி – பலப்பல ராஜதந்திரிகளையும், தேர்தல் தந்திரிகளையும் கொண்டிருக்கிற கட்சி – ஐம்பது லட் சம் வோட்டுகளைத்தான் பெற முடிந்தது. ஆனல், எட்டு ஆண்டுகள்தான் திராவிட முன்னேற்றக்கழகத் தின் சரித்திரம். அப்படி எட்டாண்டு காலம் அரசியல் ரீதியில் வளர்ந்த கழகம் - அந்தக் குறுகிய கால அனுபவத்தில் – எடுத்த எடுப்பிலேயே – முதல் தேர் தலிலேயே பதினேழு லட்சம் வோட்டுகளைப் பெற்று விட்டதென்ருல், அடுத்த தேர்தலில் இந்நிலைமை எப்படியாக வளரும் என்பதைச் சற்று நினைத்துப் பார்க்கவேண்டுகிறேன்.

நாங்கள் எதிர்பார்த்தது நாற்பது வெற்றிகளை ஆனல் கணக்கு கொஞ்சம் தவறி விட்டது. பதினைந்து இடங்களே தான் பெற முடிந்தது. மற்ற இருபத் தைந்து இடங்களில் தோற்ருேமென்ருல் பெருமளவு வோட்டுகள் பெற்றே தோற்றிருக்கிருேம். சேலம், லால்குடி, விழுப்புரம், ஆம்பூர், போன்ற இடங்களின் முடிவுகள் அதைத்தான் உணர்த்துகின்றன. மந்திரி ராமசாமி நாற்பத்திரண்டாயிரம் வோட்டுகள் பெற்ருர். எதிர்த்து நின்ற மாணவர்; இன்னும் படித்துக்கொண்டிருப்பவர் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் நாற்பதினுயிரம் வோட்டுகள் பெற்றி ருக்கிருர். மயிரிழையில் தப்பி விட்டார் இந்த மந்திரி யார். இந்த முறையில் வெற்றிப்பாதையில் அடி யெடுத்து வைத்து – பாசி சருக்கிவிட்ட காரணத்தால் அடியோடு கீழே விழுந்து விடாமல் பக்கத்திலே

கிடைத்த ஒரு கொடியையோ, கொம்பையோ பிடித்துக் கொண்டு தப்பி விட்டதைப்போல அபரிமிதமான வோட்டுகளைப் பெற்றுத்தான் தோற்றிருக்கிறோம்.

காங்கிரசு வட்டாரத்திலேகூடப் பேசிக்கொள்ளுகிறார்களாம், திராவிட முன்னேற்றக் கழகத்தை நாம் எடை போட்டது பெருந்தவறு. அவர்கள் நல்ல எடை கொண்டவர்கள்தான். வலுவுடைய கட்சிதான்!" என்று. வேண்டுமானால் திராவிடர் கழகத் தோழர்கள் மட்டும் பேசலாம்; இனியும் பேசலாம்— இன்னும் ஐந்தாண்டுகள் வரை பேசிக்கொண்டே இருக்கலாம். அவர்களுக்கு இதைத் தவிர வேறு வேலை கிடையாது. திராவிடர் கழகப் பெருந் தலைவர்களில் ஒருவர்கூடக் குறிப்பிட்டாராம் — "இந்தத் திராவிட முன்னேற்றக் கழகப் பயல்கள் ஒருக்காலும் பதினைந்து இடங்களைக்கூடப் பெறமுடியாது. அப்படி வந்துவிட்டால், என் பாரியாளையும், மகளையும் நடுத் தெருவிலே 'எப்படியோ நிறுத்தி வைக்கிறேன்" என்பதாக. இப்படி மிக மிகக் கேவலமான முறையில் — கீழ்த்தரமான வகையில் — திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளையும், அதன் பாசறை அமைப்பையும் புரிந்துகொள்ளாது பேசப்பட்ட சொற்கள் தேர்தல் காலத்தில் இந்த நாட்டில் ஏராளம்.

எனக்கு முன்னால் பேசிய சிவராசு குறிப்பிட்டார், எனது வெற்றி பெரியாரின் வெற்றியென்று உண்மைதான். தெரிந்தோ தெரியாமலோ இது பெரியாருக்கான வெற்றிதான். ஏனெனில், நம்மை ஆளாக்கிவிட்டவரும், பெரியார்தான்! இன்று அழிக்கப் புறப்பட்டிருப்பவரும் பெரியார்தான்!

கருணாநிதியா! அவன் நான்கு அடி உயரந் தானே யிருக்கிருன். சின்னப் பையனைப்போல, நமது வீட்டுக் குழந்தையைப்போல. அத்தகைய சிறுவனை எதிர்க்க எழுபது வயதுப் பெரியார்—தாத்தா—தள்ளாத வயதிலே படாத பாடுபடுகிருரே ஏன்?—குளித்தலைத் தொகுதி மக்களின் உள்ளத்திலே எல்லாம் இந்தக் கேள்வி தைத்தது. இந்தச் சாதாரணமானவனை எதிர்க்கக் காமராசர் சுற்றுப்பயணம் நடத்துகிருரே, ஏன்? பக்தவத்சலம் பவனி வருகிருரே ஏன்? காங்கிரசின் பிரச்சார பீரங்கிகள் முழங்குகின்றனவே ஏன்? திராவிடர் கழகத்தின் படையே 'சேலத்தை விட்டுவிடாதே! காஞ்சியை விட்டுவிடாதே! குளித்தலையை விட்டுவிடாதே! என்று தினம்தினந் தலையங்கம் எழுதப்படுகிறதே ஏன்?—என்ற கேள்விகள் கிளம்பத்தான் செய்தன! "ஓகோ! இந்தக் கருணாநிதியிடத்திலும் ஏதோ சரக்கு இருக்கத்தான் வேண்டும். அதனால்தான் பெரியார் இவனையும் ஒழிக்க முற்பட்டிருக்கிருர்" என்று கருதினீர்கள். அந்தச் சரக்கிற்கு மதிப்பளிக்க விரும்பினீர்கள், மதிப்பையும் அளித்தீர்கள். அந்த மதிப்புதான் இங்கு குவிந்திருக்கும் மாலைகளும், நான் பெற்ற வெற்றியும்.

இந்த வெற்றியை நான் உதாசீனம் செய்யமாட்டேன். துர்விநியோகம் செய்துவிடமாட்டேன்.

இன்றைய தினம் இந்த லாலாபேட்டையிலே நீங்கள் நடத்தினீர்களே மாபெரும் ஊர்வலம்—பவனி—இதை நான் என்றென்றும் மறக்கமுடியாது. என் உள்ளத்தில் எங்காவது ஒரு மூலையில் இடம் பெற்று என் பொறுப்பை — கடமையை எனக்கு

நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும், இன்று நடை பெற்ற ஊர்வலம் ஓர் மாப்பிள்ளை ஊர்வலம்போல இருந்தது. என்னை அழகாக அலங்கரிக்கப்பட்ட காரில் அமர்த்தி மாப்பிள்ளையைப்போல் அழைத்து வந்தீர்கள், மாப்பிள்ளை என்பதால் ஒரு பெண்ணை யும் திருமணம்செய்து வைத்திருக்கிறீர்கள். அந்தப் பெண்தான் வெற்றிச் செல்வி! அந்த வெற்றிச் செல் வியை எனக்குத் தந்திருக்கிறீர்கள். நான் வெற்றி யைப் பெற்றிருக்கிறேன்; நான் அதற்குத் தாலி கட்டி யிருக்கிறேன், எங்கள் இருவரையும் மறுவீடு அழைத்து விருந்து நடத்தி ஊர்வலம் விட்டிருக்கிறீர் கள். ஆகவே திருமணம் செய்துகொண்ட நான் உங்களுக்கு உறுதிதர வேண்டாமா? "நான் வெற் றியை ஒழுங்காக வைத்துக் குடும்பம் நடத்துவேன். ஒழுங்காகக் காப்பாற்றுவேன். ஆகவே, சம்பந்தி வீட்டாரே! கவலைப்படாதீர்கள். கவலைப்படாதீர்கள்" என்று உறுதி தருகிறேன்.

வருகிற தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று—ஏப்ரல் பதினன்காம் நாள் அன்று சென்னை சட்ட மன்றத் திலே அறிஞர் அண்ணா அவர்களும், பக்கத்திலே நானும், அன்பழகனும், ஆசைத்தம்பியும் இன்னும் மற்றவர்களும் காமராசருக்கு நேராக—மந்திரிகளுக்கு நேராக—தூங்குமூஞ்சி எம். எல். ஏக்களுக்கு எதிராக உட்காரப்போகிறோம். இனிமேல் தூங்குவார்களா அவர்கள்? தூங்கத்தான் விடுவோமா? எங்களுடைய குரல் அங்கு ஒலித்துக்கொண்டே இருக்காதா?

தாய்மார்களை எப்படித்தான் நான் பாராட்டுவது என்றே புரியவில்லை. தொகுதிக் கூட்டங்களிலே

நான் பேசும்போது சொன்னேன் உங்கள் வீட் டாரும் தெருவாரும் எப்போதும் நினைவிலிருத்திக் கொள்ள வீட்டு வாசல்களில் "உதய சூரியன்" கோலத்தைப் போடுங்கள்—அந்தக் கோலம் போட புள்ளி வைக்கவேண்டிய அவசியங்கூட இல்லை. ஒரு வளைவான கோடு; மேலே ஐந்தாறு நேர் கோடுகள் இவ்வளவுதான். கோலம் முடிந்துவிடும்—கொள்கை யும் நிறைவேறி விடும்–என்று! மறு தினத்திலிருந்தே உதய சூரியன் கோலமில்லாத வீடுகளை நான் காணவே இல்லை. அதுபோல பலப்பல இடங்களிலே கோலமிட்டார்கள் தாய்மார்கள். கொள்கைக்கு உறு துணையாக வெற்றியுந் தேடித்தந்தார்கள். உதாரண மாக தண்ணீர்ப்பள்ளி என்ற இடத்திலே பெண்கள் வோட்டுச் சாவடியில் வைக்கப்பட்டிருந்த வோட்டுப் பெட்டிகள் எண்ணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது ஒரு விசித்திரத்தைக் கண்டோம். அந்த இடத்திலிருந்த மாட்டுப் பெட்டியை யெடுத்து வோட் டுகளை எண்ணக் கவிழ்த்தபோது ஒரு வோட்டுகூட இல்லை—காங்கிரசு வோட் பெட்டியில் ஒரு வோட் கூட இல்லாதிருந்த–இந்தியாவிலேயே–ஒரே பெட்டி, அந்தத் தண்ணீர்ப்பள்ளிப் பெட்டிதான். அத்தகைய பெருமைவாய்ந்த இந்தத் தொகுதியைக் குளித்தலைத் தொகுதி என்று நான் சொல்லமாட்டேன். இது என்னுடைய தொகுதி! ஆமாம்! சொந்தத்தோடு; உரிமையோடு; பாசத்தோடு; பற்றோடு சொல்லு கிறேன். இது கருணாநிதியின் தொகுதி! இங்கேதான் இப்போதும் வென்றேன்; அடுத்த முறையும் வெற்றி பெறுவேன்; எப்போதும் வெற்றி பெறுவேன் உங்கள் ஆதரவோடு. வணக்கம்!

[லாலாபேட்டை, 26—3—57.]

தூய நறுந்தொண்டு

இன்றைய தினம் நீங்கள் எல்லோருப் பூரிப் போடும், வெற்றிக் களிப்போடும் என்னை மகிழ்ச்சிப் பெருங் கடலில் மூழ்க வைக்கும் பணியில் ஈடுபட்டி ருக்கிறீர்கள். ஆனால் நான் இந்த வெற்றியைச் சுவைத்தும் சுவைக்காமலும் உங்களிடையே பேசிக் கொண்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்னை இத் தொகுதிக்கு அனுப்பி "கழகத்தின் சார்பில் காங்கி ரசை எதிர்த்துப் போட்டியிடு" என்று கட்டளையிட் டது. நான் முன்பு உங்களிடையே பேசும்போது குறிப்பிட்டேன். "நான் இதுவரை வெறும் கருணை நிதியாக உங்களிடம் பேசினேன். இப்போது அபேட் சகன் கருணநிதியாக வந்திருக்கிறேன்" என்று, பேசிப் பத்துப் பதினைந்து தினங்கள் கூட ஆகவில்லை. வெறும் கருணநிதியாக இருந்து, அபேட்சகன் கருணை நிதியாக மாறிய நான், இப்போது உங்களால் எம். எல். ஏ. கருணநிதியாக ஆக்கப்பட்டிருக்கிறேன்.

அந்த விதத்தில் இன்றைய தினம் நான் பெற்றி ருக்கிற வெற்றி, குளித்தலைத் தொகுதி மக்களாகிய நீங்கள் அனைவரும் பெற்ற வெற்றியாகும். ஆனால் இந்த வெற்றிக்கான எனது முதல் வணக்கத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியவர் என் தந்தை பெரியார் இராமசாமி அவர்கள்தான். அதனால்தான் எனது வெற்றிச் செய்தியையும் அறிஞர் அண்ணை அவர் களுக்கு அனுப்புவதற்கு முன்பே பெரியாருக்கு

அனுப்பினேன், தந்தியின் மூலமாக. ஏனென்றால் அவர்கள்தான் படாத பாடுபட்டு—பல நாள் இத் தொகுதியில் சூறாவளியெனச் சுற்றிச் சுழன்று—பத்தாம் தேதி மாத்திரம் இருபத்தைந்து கூட்டங்களுக்குமேல் எனக்காகப் பேசியிருக்கிறார்கள், என் வெற்றிக்காக உழைத்திருக்கிறார்கள்! அதனால் தான் அவர்களுக்கே என் முதல் வணக்கம் என்றேன், கேலிக்காக அல்ல, கிண்டலுக்காக அல்ல நான் முன்பே சொல்லியிருக்கிறேன், "நான் தேர்தலில் வெற்றி பெற்றால், முதலில் ஈரோடு நோக்கியோ, அல்லது திருச்சி நோக்கியோ, பெரியார் அவர்கள் எந்தத் திசையில் இருந்தாலும் அந்தத் திசையில் தெண்டனிட்டு வணங்குவேன்!" என்று, ஆகவேதான் தந்தி அனுப்பினேன். எனதருமை நண்பர் அம்பில் தர்மலிங்கம் தான் தந்தியைக் கையெழுத்திட்டு அனுப்பிவைத்தார். பெரியார் அவர்கள்கூட நினைத்திருக்கலாம்; தோற்றுப்போன காங்கிரசு அபேட்சகர் தர்மலிங்கந்தான் தந்தி கொடுத்திருக்கிறாரோ என்று!

இப்படியாக, அவர்களுக்கும், என்னை எதிர்த்து வேலை செய்தவர்களுக்கும் தான் முதன் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன், அதுதான் வெற்றிபெற்ற ஒரு அபேட்சகனின் கடமையும், நாணயமும், நேர்மையும், ஜனநாயக முறையுமாகும் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். அதைத்தான் என் அண்ணனிடம் பாடமாகவும் கற்றிருக்கின்றேன்,

பூரிப்போடும், புன்னகை வடிகின்ற முகத்தோடும் உங்களை நான் பார்த்த போதிலும், முதலிலேயே

குறிப்பிட்டதுபோல இந்த வெற்றியை என்னுல் முழு தும் அனுபவிக்க முடியவில்லே. எனக்கு முன் பேசிய தோழர் மதுரைமுத்து குறிப்பிட்டார்கள், அறிஞர் அண்ணவும், நாவலர் நெடுஞ்செழியனும், கருணநிதி யும் மட்டுமே சட்டசபைக்குச் சென்ருலே போதும்" என்று தான் கருதியதாக ஆனுல் அந்த மூவரில் நம தருமை நாவலர் பொதுச் செயலாளர் நெடுஞ்செழி யன் அவர்கள் சட்டசபையில் அமர்ந்திட – தனக்குப் பின்னுல் இருக்கும் லட்சோப லட்சம் திராவிட முன் னேற்றக் கழக அணிவகுப்பு வீரர்களுக்கு ஆணையிட முடியாத நிலேயில் – சதியின் காரணமாக – சுமார் 200 வோட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற இய லாது போயிருக்கிருர்கள். அந்த 200 வோட்டுகளை யும், நாவலரை எதிர்த்து நின்ற காங்கிரசுத் தோழர் சூது செய்து பெற்ருர் என்பதையும், "வழக்கு மன்றத் திலே அதற்குப் பரிகாரம் தேடத்தான் வேண்டும்" என்று அது குறித்து அறிஞர் அண்ணு அவர்கள் சேலத்தில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் அறி வித்திருக்கிருர்கள் என்பதையும் நீங்கள் உணருவீர் கள்.

இன்றைய தினம் வரை என்னேடு சட்டசபைக்கு 12 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள். இன் னும் ஓரிரண்டுபேர் வரலாம். வராவிடில் 12 பேர் தான். இதை நீங்கள் சிரமப்பட்டுக் கொண்டு கூடச் சொல்ல வேண்டாம். "ஒரு டஜன்" என்று சுருக்க மாகச் சொல்லலாம். நீங்கள் சொன்னுலும், சொல் லாவிட்டாலும் பெரியார் அவர்கள் சொல்லத்தான் செய்வார்கள். "ஒரு டஜன் பேர் சென்ருல் போதுமா?" என்று நமது ஐம்பெருந் தலேவர்களே –

"பஞ்சபாண்டவர்கள்" என்று அழைத்த அவர்கள், இந்த 12 சட்டசபை உறுப்பினர்களையும் "ஆழ்வார்கள்" என்று நிச்சயமாக அழைக்கவும் செய்யலாம். ஆனல், நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த பன்னிரண்டு பேர்களும் ஆழ்வார்கள் என்றுல் நாம் சட்டசபைக்குச் செல்வது நமக்கு நாமே நாமம் போட்டுக்கொள்ள அல்ல. இந்த நாட்டைக் கெடுத்துவரும் சதிக்கூட்டத்தாரின் நெற்றியில் நாமம் சாத்தத்தான்.

குளித்தலைத் தொகுதிக்கு நான் அபேட்சகனுக நின்று — ஒரு மாத காலமாக உங்கள் ஆதரவுக்காகச் சுற்றி – பல கூட்டங்களில் பேசி – இன்று இருபத்திரண்டாயிரம் வோட்டுகள் பெற்று வெற்றியடைந்திருக்கிறேன். இருந்தாலும் முழுமகிழ்ச்சியடைய நான் தயாராக இல்லை. ஏனெனில் என்னை வெறுப்பவர்கள் – நான் சட்டசபைக்குச் செல்லக் கூடாது என்று கருதுபவர்கள் இங்கு இன்னும் பதினலாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே இந்தத் தொகுதியில் என் தொண்டு – என்பணி இனிமேல் தான் மிகமிக அதிகம் நடைபெற்றுக வேண்டும். அந்தப் பதினலாயிரம் பேர்கள் நான் சட்டசபைக்குச் செல்லக்கூடாது என்று கருதிய காரணத்தால் – காங்கிரசு இந்த நாட்டிலே பல கேடுக்களைச் செய்திருந்தும் கூட காங்கிரசு இந்த நாட்டு மக்களுக்கு இழைத்த அநீதிகளை அறிஞர்கள் பல்லோர் எடுத்துக்காட்டியுங்கூட — "அந்தக் காங்கிரசு வந்தாலும் வரட்டும்; கருணைநிதி மட்டும் வரக் கூடாது" என்று கருதி காளைமாட்டுப் பெட்டியிலே தங்கள் வோட்டுகளைப் போட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த பதினலாயிரம் பேர்களையும்

நான் திருத்தியாக வேண்டும்; அவர்களுக்கு நல்ல வனுக நடந்து கொண்டாக வேண்டும் அடுத்த தேர்தலிலே நான் நின்ருல் அந்தப் பதினுலாயிரம் வோட்டுகளும் என்னுடைய "உதயசூரியன்" பெட்டி யிலேயே விழுந்தாக வேண்டும்.

நான் வெற்றிபெற கிடைத்த வாக்குகள் இருபத் திரண்டாயிரம் அவர்கள் வேண்டுமானுல் மகிழ்ச்சி யடையலாம்! அவர்கள் தாங்கள் விரும்பிய ஒருவனைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். நினைத்ததைச் செய்து முடித்த மகிழ்ச்சி அவர்களுக்கு. ஆனல் நான் முழு மகிழ்ச்சியடைய முடியவில்லை. ஆகவேதான் என்னை விரும்பாத அந்தப் பதினுலாயிரம் பேர்களுக்கும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், "நீங்கள் எனக்கு வோட்டுப்போடாத காரணத்தால் – என்னை விரும் பாத காரணத்தால் – நிச்சயமாக நான் உங்களுக்குப் பகைவனுக இருக்கமாட்டேன். இந்த இருபத்திரண் டாயிரம் பேர்களுக்கு எப்படி உண்மையுள்ள பணியாள னுக இருந்து பணியாற்றி வருவேனே அதைப் போலவே தான் உங்கள் பதினுலாயிரம் பேர்களுக்கும் கடமை மறவாத ஊழியனுக இருந்து பணியாற்று வேன்" என்று உறுதி தருகிறேன்.

அதுபோலவே இன்றைய தினம் இத்தொகுதி யில் என்னேடு போட்டியிட்டுத் தோற்றவர்கள் – தோற்றவர்கள் என்று கூறவே நாக் கூசுகிறது – வெற்றிபெருத தோழர்கள் – என் நண்பர்கள்தான்; இத்தொகுதியில் நான் தொண்டு செய்யும்போது என்னேடு ஒத்துழைக்கவேண்டியவர்கள். ஏனெனில் கருணுநிதியுடன் அவர்கள் செய்த போட்டி குத்துச்

சண்டையோ மல்யுத்தமோ அல்ல; ஜனநாயகரீதியில் போட்டியிட்டுக் கொண்டோம்; மக்கள் சக்தி – மக்கள் தீர்ப்பு – எனக்கு வெற்றியைத் தந்தது ஆகவே என்னோடு போட்டியிட்டவர்கள், என் விரோதிகள் அல்ல, விரோதிகளாகவும் ஆகமாட்டார்கள்! அந்த நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது. இன்றைய தினம் நான் ஊர்வலமாக வந்த நேரத்தில் என்னோடு போட்டியிட்ட ராஜகோபால ஐயங்கார் என்ற ஒரு தோழர் எனக்கு முழுமகிழ்ச்சியோடு மாலையணிவித்து வாழ்த்தினர். ஒருவேளை, அவர் கைச்சின்னம் கொண்டிருந்த அபேட்சகர். அதனால்தான் தன் கையால் மாலை சூட்டினர் என்று கருதலாம். அதைப்போலவே மற்ற சின்னங்களைக் கொண்டிருந்த தோழர்களுக்கும் கைகளிருக்கின்றன – கருத்திலே தெளிவு இருக்கிறது; கருணாநிதியிடம் நிறைய அன்பு இருக்கிறது – என்று காட்டிக்கொள்ள மாலையிட்டு மரியாதை செய்ய வேண்டாம்; நான் இத்தொகுதியில் மக்களுக்குத் தொண்டு செய்யும்போது தோளோடுதோள் நின்று, உதவி செய்து ஒத்துழைக்கக் கோருகிறேன்.

தலைவர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள், என்னைப்பற்றி யார் யாரோ ஏதேதோ பேசினார்கள் என்று தேர்தல் நேரத்தில் அப்படிப் பேசத்தான் வேண்டும். ஏனென்றால் எப்படியாவது தான் தேர்தலில் வெற்றிபெற்றாக வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் இருக்கத்தான் செய்யும். எப்படியாவது வெற்றிபெற்றே தீரவேண்டுமென்பதற்காக எதையாவது பேசாதே" என்ற ஆணைக்குட்பட்டவர்கள் நாம் மட்டுந்தான். அப்படி கண்ணியம் மீறுமல் கட்சி நடத்துபவர்களும் நாம்தான்.

ஆனால், பேசியவர்களில் பலர் சுயேச்சைகள் அவர்களைக் கட்டுப்படுத்த – அவர்களுக்குக் கண்ணியத்தைக் கற்பிக்க யாருமே கிடையாது

வேறு சிலர் காங்கிரசு தோழர்கள். அவர்களோ கட்டுப்பாட்டை மீறி – கடமையை மறந்து நீண்ட நாட்களாகி விட்டன. ஆகவே அத்தகைய துர்பாஷைகளை – தேவையற்ற வார்த்தைகளைத் தேர்தல்கால வெற்றிக்காக மட்டுமே பயன்படுத்தியதாகக் கருத வேண்டுமே தவிர, கருணாநிதி அவர்களது பகைவன் அவனைப் புண்படுத்தவேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்டவை அவை என்று நினைக்கவே கூடாது.

இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் நூறு இடங்களுக்குமேல் போட்டியிட்டு, இது வரை பனிரண்டு இடங்களையே கைப்பற்றியிருக்கிறது என்றாலும், நாட்டு மக்கள் உள்ளத்திலே அது எத்தகைய நல்லிடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை நீங்கள் நன்கு உணருவீர்கள். கேட்கிறேன் நான், எந்த நாட்டுச் சரித்திரத்திலேயாவது நீங்கள் இந்த விசித்திரத்தைக் கண்டிருக்கிறீர்களா? வெற்றி பெற்றவர் வீராப்போடு நிமிர்ந்து நின்று–விழிகளிலே களிப்பும் மொழியிலே புதிய உற்சாகமுந் தோன்ற மக்களைப் பார்த்து—அவர்களிடமிருந்து வாகைமாலை சூட்டிக்கொள்ளுவார்கள். இது உண்மை! ஆனால், எங்காவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா, தோற்றுப் போனவர்கள் மளமளவென்று மக்கள் மத்தியிலே வந்து, "நான் ஏன் தோற்றேன்?" என்று விளக்குவதை. எந்த நாட்டுச் சரித்திரத்திலேயும் காண முடியாத இந்த வியக்கத்தக்க விசித்திரத்தை இந்த

நாட்டுச் சரித்திரத்திலேதான்; அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தவரிடத்தில் மட்டுமேதான் காண முடியும்! இப்போது இந்த மேடையில் தோற்றுப் போனவர்கள் வரிசையாக வந்து பேசினர்கள் என்றால், அதற்கு என்ன அர்த்தம்? காங்கிரசுக்காரர்கள் தோற்றார்களென்றால் இப்படி வந்து பொது மேடையிலே பேசவே மாட்டார்கள். காரணம், அவர்கள் தோற்று ஓடும்போது முதுகிலே காயம் தாங்கியவர்களாக இருப்பார்கள். மக்களிடையே வந்து அந்த முதுகைக் காட்ட அஞ்சுவார்கள்! ஆனால் என் நண்பர்களெல்லாம்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிங்கங்களெல்லாம்—தோற்றவர்களாக இருந்தாலும்—உங்களிடையே துணிவோடு வந்து பேசுகிறார்கள். ஆமாம்! அவர்கள் மார்பிலே காயம் தாங்கியவர்கள்! மறத் தமிழர் பரம்பரையிலே வந்தவர்கள். ஆகவேதான், "பாருங்கள்! பாருங்கள்! மாதாக்களே, பிதாக்களே! புறநானூற்று வழிவந்தோரே! நாங்கள் பெற்ற காயம் மார்பில், முதுகிலல்ல." என்று தைரியத்துடன் மேடையில் கூறித் தங்கள் பெருமையை உயர்த்திக் கொள்ளுகின்றனர். ஏனெனில் தோற்றவர்—வென்றவர் என்ற வேறுபாடின்றி தொண்டு செய்யும் மனப்பான்மை கொண்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்.

காங்கிரசிலே ஒருவர் தோற்றார் என்றால்... .....?

சென்ற தடவை திரு. குமாரசாமி ராஜா தோற்றார்—இப்போது இறந்து விட்டார்—அன்று என்ன வாயிற்று? தோற்றவர் கவர்னரானார்.

பொன்னேரியிலே திரு. பக்தவத்சலனார் தோற்றார். என்ன ஆயிற்று? மந்திரியானார்!

நமது கரூர் தோழர் குழந்தையை எடுத்துக் கொள்ளுங்களேன்.

தோல்விதான்; ஆனலும் என்ன ஆயிற்று? அவர் தோல்வியுற்ருர் என்பதால் நாம் அவரை இயக்கத்தை விட்டு விலக்கியா விட்டோம்? இல்லை, இல்லை நாம் அவரை யனுப்பத் தயாராக இல்லை. அவர் போகவும் தயாராக இல்லை. அவர், தான் தோற்ற மறுநாள் நாமக்கல் சென்று—தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய தொகுதியும் எட்டு லட்சம் வாக்காளர்களைக் கொண்டதுமான அவ்விடத்தில் போட்டியிடும் நமது சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் இருபத்தையாயிரம் வோட்டுகள் அதிகத்தில் காங்கிரசை முறியடித்தார் என்பதை அறிந்து அவரை பாராட்டி விட்டு—பிறகு "குளித்தலையிலே கருணநிதியின் சேதி என்ன?" என்ற ஆவலுடன் இன்று காலையிலேயே இங்கு வந்து-என்னுடனேயே இருந்து — எனது மகிழ்ச்சியிலே பங்கேற்று — பல கிராமங்களுக்கும், பட்டி தொட்டிகளுக்கும் என்னுடனேயே வந்திருந்தார் என்பதோடு — இனி, தான் தீவிரமாகப் பணியாற்றப் போவதாகவும் உறுதி தருகிருர். ஆகவே, அவர் தோற்ருர் செயல் வீரரானுர்.

தோழர் செழியன் அவர்களை எடுத்துக்கொள்ளுவோமே—அவரை ஒரு நல்ல எழுத்தாளராகத்தான் நீங்கள் தெரிந்து கொண்டிருந்தீர்கள்; அவர் பேச்சாளராக இருந்ததில்லை, சென்ற முறை நான் இங்கு பேசியபோது அவரும் பேசினர். ஆனல் எத்தனை தடங்கல்கள்; தட்டுத் தடுமாற்றங்கள்—சிந்திப்பதற்கும், பேசுவதற்கும் இடையே எவ்வளவு நேரம் எடுத்

துக் கொண்டார்—என்பதெல்லாம் உங்களுக்கு நன்ருகத் தெரியும். ஆனல், இடையில் ஒரு மாத காலம் பேசினர். இப்போது உங்களிடையே மிகவும் அழகாக, கருத்தாழத்துடன் அறிஞர் அண்ணு அவர்களின் பேச்சுக்கு ஈடாகப் பேசுகிருர் என்ருல் என்ன பொருள்? அவர் தோற்ருர்; பேச்சாளராஞர்.

தோழர் அரவக்குறிச்சி இரத்தினமும் தோற்ருர். ஆனல், 'உடனடியாக என் தொகுதியில் நூறு கழகங்கள் அமைத்து விட்டுத்தான் மறு வேலே பார்ப்பேன்" என்கிருர் உணர்ச்சியோடு.

மதுரை முத்து சொல்லுகிருர், "பணமும், பாவையும் கொண்டுதான் தன்னே வெற்றி பெற இயலாது செய்துவிட்டது காங்கிரசு" என்று, நான் நினேத்தேன் "பணமும் பாவையும்" என்றெரு புத்தகம் யாரோ ஒருவர் எழுதியிருக்கிருரே அதைக் கொடுத்துத்தான் வோட்டு பெற்ருர்களோ என்று, அதுவல்லவாப்! வோட்டுக்காக பணம் தந்தனர் காங்கிரசார் என்பதோடு மதுரைக்கு அருகில் உள்ள காந்தி ஆசிரமத்திலிருந்து கூட்டம் கூட்டமாகப் பாவையர் வந்து வோட்டுக் கேட்டார்களாம் காங்கிரசுக்காக! அப்படி இருக்கையில் முத்து சென்ருல் எப்படி கிடைக்கும் வோட்டு? ஆகவே அவர் தோற்கடிக்கப் பட்டார் ஆனலும் இன்று என் வெற்றி விழாவிலே கலந்துகொள்ள ஓடி வந்திருக்கிருர்.

முசிரியிலே முத்துக்கருப்பன் – அங்கு கழகம் வளர்ந்திருக்கும் நிலேயில்–அவருக்கிருக்கும் குறைந்த வசதியில் குறைவான வோட்டுகள் தான் பெறுவார் என்று கருதினேம். இரண்டாயிரம் ரூபாய்கள் தான்

செலவாம் – சர்க்காரே பனிரண்டாயிரம் செலவு செய்யலாமென்கிறது – அதில் ஆறில் ஒருபங்குதான் செலவு. ஆனல் பெற்ற வோட்டுகளோ இருபதினு யிரம். ஆகவே இன்னும் கொஞ்சம் செலவுசெய்ய வசதியிருந்திருந்தால் நிச்சயம் வெற்றிபெற்றிருக்க முடியும் அவர்.

லால்குடியிலே அம்பில் தர்மலிங்கம். அவரும் தோற்றிருக்கிருர். நான் மூன்ருந்தேதியன்று அவருக் காகப் பேசினேன். அப்போது வெற்றி அவர் கையி லிருப்பதைக் கண்டேன் ஆனல் அவர் முதல் நாள் இரவு சிறிது நேரம் தூங்கி விட்டார். அவர் தூக்கத் திலே சிறிது சாமர்த்தியசாலி!—ஆனல் சட்டசபை யில் தூங்கக்கூடியவர் அல்ல—அன்றென்னவோ தூங்கி விட்டார். அறிஞர் அண்ணு அவர்கள் இங்கு பேசினர்களே "பத்தாம் தேதியன்று பாதி ராத்திரி யிலே சில குள்ளநரிகள் பதுங்கிப் பதுங்கி வரும் பணத்தோடு! தூங்கி விடாதீர்கள் தோழர்களே! என்று. அதைப்போலவே தான் தருமுவின் அந்தத் தூக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு, கையில் ஒன்று இரண்டு என்றல்ல ஐந்து, பத்து என்று ரூபாய் நோட்டுக்கத்தைகளை எடுத்துக்கொண்டு தொகுதிக் குள் புறப்பட்டு விட்டார்கள் சூதுக்காரர்கள் சிலர். அதனல்தான் அம்பில் கிட்டத்தட்ட நாலாயிரம் வோட்டுகள் வித்தியாசத்தில் தோற்று விட்டார்.

திருச்சியிலே எம். எஸ். மணி தோற்ருரென்ருல் அவர் பெற்ற வோட்டுகளோ நாற்பதினுயிரம். செலவு ரூபாய் நானூறு அல்லது ஐநூறுதானிருக் கும். அதிலேயே டெபாசிட் கட்டியிருக்கிருர். அது

திரும்பி வந்துவிடும். அவர் ஐநூறு ரூபாய் தான் செலவு செய்தார் என்ருல் இன்று ஒவ்வொரு ரூபாயும் ஒவ்வொரு கிளைக் கழகமாக, அந்தத் தொகுதியில் ஐநூறு கிளைக் கழகங்கள் தோன்றக் கூடிய அளவுக்குப் பணியாற்றியிருக்கிருர். இத்தனைக்கும் என்ன வசதி இருந்தது அவருக்கு? தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கே முன்பு ஒரு ஓட்டைக் கார் – டப்பா வந்தது அவருக்கு நீங்கள் 'திரும்பிப்பார்' படத்திலே பார்த்திருப்பீர்களே, அதுபோல அவர் எங்காவது கூட்டத்திற்கு அந்தக் காரில் சென்ருல். அது எழுப்பும் 'படபட என்ற சத்தத்தைக் கேட்டு, போலீசார் துப்பாக்கி பிரயோகந் தான் செய்கிருர்களோ என்று மக்கள் அஞ்சுவார்கள். அந்தக் காரை நம்பி அடுத்த ஊர்க் கூட்டத்துக்குப் புறப்பட்டு விட்டால், நடுவழியிலேயே நின்றுவிடும் கார்! அதே சமயம் கூட்டம் ஏற்பாடு செய்த தோழர்களோ, " இவர்கள் அப்படித் தான், இவர்களுக்கா வோட்டுத் தருவது?" என்று கோபித்துக்கொண்டு விடுவார்கள். இப்படியாக பஸ்ஸிலும் ஏன் – சைக்கிளிலும் – உண்மைதான் தோழர்களே – பார்லிமெண்ட் தொகுதியில் சைக்கிள் வைத்து வேலை செய்தவர் - இந்தியாவிலேயே ஒரே மனிதர் – நமது மணிதான்!

இப்படியாக, மிகமிகச் சாமானியர்களைக் கொண்ட நமது கழகம் மிகத் துணிச்சலாக நூற்றிருபது இடங்களில் போட்டியிட்டது. எல்லா இடங்களும் கிடைக்கவில்லை யென்ருலும் காங்கிரசுக்கு அடுத்தபடி தி. மு. க. என்ற நிலையைத் தோற்றுவித்துவிட்டது, ஓரிடத்தில் காங்கிரசு மூப்பதினுயிரம் வோட்டுகளில் வென்றது என்ருல், அடுத்தபடியாக

இருபத்தொன்பதாயிரத்து தொளாயிரம் வோட்டு களில் இரண்டாவது இடம் பெற்றுத் தோற்றிருக் கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

சென்னையிலே தோழர் என். சீவரத்தினம் நானூறு வோட்டுகளிலே தோற்றூர் — பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் எண்ணூறு வோட்டுகளில்!

விழுப்புரம் தோழர். சண்முகம் தோல்வி ஏழு நூறு வோட்டுகளில்!

ஆம்பூரிலே நமது தோழர் சம்பங்கி நானூறு வோட்டுகளே குறைந்த காரணத்தால் தோற்றிருக் கிறூர்.

இதற்கெல்லாம் என்ன காரணம்? நம்மிடம் பணமில்லை; கடைசி நேரத்தில் குறுக்கிடும் அத்யாவ சியமான செலவு கூடச் செய்ய முடியாது போய்விடு கிறது. ஆனலும் ஒன்று; குறிப்பிட்ட ஓரிடத்திற்குச் செல்ல முப்பது படிகள் என்றூல் நாம் இருபத் தொன்பது படிகள் வரை சென்று விட்டோம் – ஒரு படி தான் பாக்கி! அதையும் தாண்டிவிட நமக்கு உதவும், இந்தத் தேர்தலில் நாம் பெற்றிருக்கும் அனுபவம்.

நாம் இந்தத் தேர்தலில் பெற்ற வோட்டுகள் சாதாரணமானவையல்ல. நமது வோட்டுகள் துல் லிய மானவை – தூய்மையானவை – திராவிட முன் னேற்றக் கழகத்திற்குப் போடப்பட்டவை!

ஆனல், காங்கிரசு பெற்ற வோட்டுகளிலோ, கம்யூனிஸ்டுகளின் வோட்டுகள் கலந்திருக்கின்றன;

காங்கிரசு சீர்திருத்தக் கட்சியின் வோட்டுகள் கலந்திருக்கின்றன; தமிழரசுக் கழகத்தின் வோட்டுகள் கலந்திருக்கின்றன; சோசலிஸ்டுகளின் வோட்டுகள் கலந்திருக்கின்றன. அத்துடன் திராவிடர் கழகத்தின் வோட்டுகளும் கூடக் கலந்து விட்டிருக்கின்றன.

அடுத்த தேர்தலிலே இன்று காங்கிரசுக்குக் கிடைத்த வோட்டுகளிருக்கும்.

திராவிடர் கழக வோட்டுகள் பிரிந்து – இன்னும் மற்ற மற்றக் கட்சிகளுக்கான வோட்டுகளும் பிரிந்து–

காங்கிரசின் வோட்டுகள் மட்டுமே தனித்து நின்ருல், திராவிட முன்னேற்றக் கழகத்தை அது வென்றுவிட முடியுமென்ரு கருதுகிறீர்கள்?

சேலத்திலே நமது பொதுச் செயலாளர் அவர்களின் தோல்விக்குக் காரணமாக இருந்தவையே இத்தகைய வோட்டுகள் தானே? திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அங்கு, இருபத்தி நாலாயிரம் வோட்டுகள் கிடைக்கும்; கம்யூனிஸ்டுகளுக்கு ஐயாயிரம் அல்லது ஆருயிரம் வோட்டுகள் கிடைக்கும்; காங்கிரசுக்கு மிகுதியுள்ள இருபத்தோராயிரம் வோட்டுகள் கிடைக்கும். எனவே, மூவாயிரம் வோட்டுகள் வித்தியாசத்தில் நமது பொதுச் செயலாளர் நிச்சயம் வெற்றி பெறுகிரூர் என்று தான் சேலமே சொல்லியது. ஆனல், என்ன ஆயிற்று? நினைத்தபடி திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இருபத்தி நாலாயிரம் வோட்டுகள் கிடைக்கத் தான் செய்தன. ஆனல், தேர்தல் தினத்தன்று காலே முதல் வேலே செய்து வந்த கம்யூனிஸ்டுத்தோழர்கள், பனிரண்டு மணிக்குத்

தங்கள் நிலைமையை ஆராய்ந்தனர். அப்போதைய நிலவரத்தில் தங்களுக்கு டிபாசிட்டே வராது என் பதை உணர்ந்தனர், உடனே பிற்பகல் வோட்டுப் பதிவின் போது கம்யூனிஸ்டுகளுக்கு விழவேண்டிய அந்த வோட்டுகளைக் கம்யூனிஸ்டுகளுக்கும் வேண் டாம்; திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் வேண் டாம்; காங்கிரசுக்கே போட்டுவிடுங்கள் என்று கட் டளையிட்டனர். தோழர். பி. இராம மூர்த்தி அவர் களிடமிருந்தே வந்தது அந்த உத்தரவு! அதன்படி அந்தமீதி வோட்டுகளும் காங்கிரசுக்கே விழுந்ததால் தான் – நமது பொதுச் செயலாளரை - அத்தகைய பெரிய விரோதியாகக் கருதிய காரணத்தால் தான் – காங்கிரசுடன் அவர்கள் கொண்ட அந்தப் புதிய திடீர் உறவின் காரணத்தால் தான் – அங்கு நாம் வெற்றி பெற இயலாது போய்விட்டது.

அதுபோலவேதான் சில இடங்களில் காங்கிரசு பெற்ற வோட்டுகள் புனிதமானவையல்ல. அவை பல கட்சிகளின் வோட்டுகள்; பணம் கொடுத்துப் பெற்ற வோட்டுகள். எப்போதும் அதுபோலவே வோட்டுகள் பெற்று வெற்றிபெற காங்கிரசால் இய லாது என்பதற்கான எடுத்துக்காட்டுகள் தான் காஞ்சிபுரமும் குளித்தலையும்.

பனிரண்டாம் தேதியன்று கரூரிலுள்ள திருமா நிலையூர் என்ற இடத்திற்கு நான் சென்றிருந்தேன். அப்போது ஒரு ஏழை வாக்காளர் என்னிடம் வந்தார் தன் கையிலிருந்த புள்ளியைக் காண்பித்தார். "எனக்கு ஒரு ரூபாய் தந்தார்கள் வோட்டுக்காக, நான் பணத்தைப் பெற்றுக்கொண்டேன். ஆனால்,

என் வோட்டை உதயசூரியன் பெட்டியில்தான் போட்டேன்" என்று மகிழ்ச்சியோடு சொன்னர். குளித்தலைத் தொகுதியில் பல இடங்களில் அதுபோல நடந்திருக்கிறது. பணத்தையும் வாங்கிக்கொண்டு உதயசூரியனுக்கே வோட்டுப் போட்டிருக்கிறார்கள்; அத்துடன் பணத்தையும் போட்டிருக்கிறார்கள். சில பெட்டிகளில் அரை ரூபாய், கால் ரூபாயென்று நாணயங்கள் கிடந்தன. ஆனால் அவையெல்லாம் அபேட்சகருக்குச் சொந்தமல்ல, அரசாங்கத்துக்கே தான் சொந்தம் என்று எடுத்துக்கொண்டு விட்டனர். அப்படி அங்கே போடமுடியாத சிலர் இந்தத் தேர்தல் வெற்றிவிழா கூட்டத்திலே எனக்கு அன்பளிப்பு என்று ஒருரூபாய்களாகத் தந்திருக்கிறார்கள். எனக்கு வோட்டும் தந்தார்கள்; ஒரு ரூபாய் நோட்டும் தருகிறார்கள்.

இப்படியாக வாக்கு மீறுத தோழர்கள் தந்த வாக்குகள் தான் எனக்கு வெற்றியைத் தந்திருக்கிறது. அதுபோல வாக்குப்பெறுவதற்கு முன் தங்களிடம் தந்த வாக்குறுதிகளை மறவாது உங்களுக்கு என்றும் குன்றுத்தொண்டு புரிவேன் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

வணக்கம்.

பெரியாரைத் துணைக் கோடல்

குளித்தலைப் பள்ளியிலே இடமில்லை. ஆகவே, ஒரு சிறுவன் மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறான்— என்கிற நிலை இங்கு ஏற்படுமேயானால் அது நாம் எல்லாரும் தலை குனியக்கூடிய ஒரு வெட்கக்கேடான காரியந்தான். அந்த மாணவன் மாடு மேய்க்கும் நேரத்திலே தான் செய்யும் குறையை உணரமாட்டான். அதுபோலவே அவனது பெற்றோர்கள் அவன் மாடு மேய்த்துப் பொழுது போக்குகிற நேரத்தில் தாங்கள் செய்யும் தவறை உணரமாட்டார்கள். அந்த மாணவன் இருபது வயதை யடைந்து, அவனுக்குத் திருமணத்திற்காகப் பெண் பார்க்கின்ற நேரத்திலே, பெண் வீட்டார், "பையன் எவ்வளவு படித்திருக்கிறான்?" என்று கேட்கும்போது, பெற்றோர் உணர்வார்கள். "எவ்வளவு பெரிய தவறைச் செய்துவிட்டோம்" என்று.

தாய் தகப்பனர் ஏழையாகி விட்ட காரணத்தால்—பையன் வேலை தேடி யலையும்போது—அலுவலகத்திலே சென்று "ஐயா! எனக்கொரு வேலை' யென்று கேட்க—"நீ எதுவரை படித்திருக்கிறாய்?" என்று அங்கிருப்போர் கேட்கும் நேரத்தில் அவன் உணர்வான். தான் செய்த தவறை! தன் பெற்றோர் தனக்கிழைத்த தீங்கை.

ஆகவேதான் அத்தகைய எதிர்கால சமுதாயம் நம்மைச் சபிக்காம லிருப்பதற்கும், அவர்களுடைய சாபத்திற்கு ஆளாகாமல் இருப்பதற்கும், இன்றைய

தினம் நாம் கொஞ்சம் அறிவோடு நடந்து கொண் டோமானுல், நிச்சயம், "இடமில்லே பள்ளியிலே" என்று சொல்லக்கூடிய நிலேயில் தலேமை ஆசிரிய ரும்; அத்தகைய இட வசதி செய்து தரமுடியாத நிலேயில் நாமும் இல்லாமல், "இட மிருக்கிறது நீங்கள் கேட்ட இடம் தந்திருக்கிறேரும். பிள்ளேகளே யும் அனுப்பி யிருக்கிறேரும். இவ்வளவையுந் தந்தி ருக்கிறேரும் நீங்கள் கற்றுத்தந்த பாடங்கள் என்ன?" என்று நாம் கேட்கிற நிலேயிலே மாற வேண்டு மென்றுதான் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்த வகையில் கல்வி வளர நாம் நம் முடைய பள்ளியை வளர்ச்சி பெறச் செய்து—வளர வேண்டிய எதிர்கால சமுதாயத்தை — இளேஞர் குழாத்தை வெற்றிப் பாதையை நோக்கி நடத்திச் செல்ல ஆவன செய்வோம்.

இந்த அளவில் தலேமையாசிரியரின் குறையோ வியத்தை விட்டு விட்டு, எனக்குத் தந்திருக்கும் தலேப்புக்கு வருகிறேன். "குறளோவியம்" என்ற தலேப்பில் இந்த இலக்கிய மன்றத்தின் சார்பில் பேசப்படுகின்ற நேரத்தில் நம் தலேவரவர்கள் குறிப் பிட்டதுபோல, நான் ஏதோ புதிய புதிய விஷயங்கள் சொல்லப் போகிறேன் என்ரேரு, திருக்குறள் இந்த நாட்டிலே மக்களிடையே செல்வாக்குப் பெருத ஒரு நூல்; அதை நாமெல்லாம் எடுத்துச் சொல்லித்தான் இனி அதற்குப் புதிய செல்வாக்கு வளருமென்ரேரு நான் குறிப்பிட விரும்பவில்லே .....

திருவள்ளுவர் நமக்குத் தந்திருக்கிற குறள்பாக் கள்—அவற்றிலே சொல்லப்பட்டிருக்கிற அறிவுரை கள்—தமிழர்கள் ஏகமனதாகப் பாராட்டக்கூடியனவா.

அல்லவா? அவர் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்கிற முப்பெரும் பால்களை வகுத்து அவற்றிலே பலப்பல அதிகாரங்களை வகுத்து—அந்த அதிகாரங்களிலே அருமையான – அழகு சிந்துகின்ற எழில் சொட்டுகின்ற— அறிவுமணம் கமழுகின்ற— அறிவொளி பரப்புகின்ற குறள்களை நமக்குத் தந்திருக்கிறார் என்றால், அந்தக் குறள்களிலே எந்தெந்த இடங்களிலே அணி இருக்கிறது? தமிழர்கள் புரிய வேண்டிய பணிகள் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன? இந்த நாட்டுக்குத் தேவையான கருத்துக்கள் இருக்கின்றன? மனிதனுடைய வாழ்க்கைக்கு தேவையான எண்ணங்கள் பொதிந்து கிடக்கின்றன?—என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

குறளைப்பற்றி வந்திருக்கிற அர்த்தங்கள்-உரைகள் — வியாக்யானங்கள் — பலதரப்பட்டவை. பல மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டு, மேல்நாட்டிலே இருக்கின்ற நூல் நிலையங்களிலே இடம் பெற்றிருக்கின்ற திருக்குறள், தமிழ் நாட்டில்—பலரால் பலவகையிலே தாழ்த்தப்பட்டிருக்கிறது. அப்படித் தாழ்த்தியவர்களில் குறளைப் புராணகாலத்துக்கு இழுத்துச் சென்றவர்களும், சரித்திர காலத்துக்கு இழுத்துச் சென்றவர்களும், அதை வேறு, வேறு பக்கம் திருப்பிக்கொண்டு போகிறவர்களும் ஏராளம், ஏராளம்!

ஆயிரத்து முன்னூற்றுமுப்பது குறட்பாக்களிலே எண்ணிறந்த குறள்கள் இன்றைய காலத்துக்கும் ஒத்துவரக்கூடிய குறள்கள். அதற்காக வள்ளுவர் எழுதியவைகளில் — சில இடைச்செருகல்களில் —

அவை, வள்ளுவரின் கருத்தல்ல என்று ஆராய்வதை விட; அவற்றிலே என்னென்ன சொல்லப்பட்டிருக்கின்றன—என ஆராய்வது மிக மிகச்சால்புடையது! பொறுத்தமுடையது—என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

வள்ளுவர், வாழ்க்கைத்துணை நலம் என்றுதான் குறளில் குறிப்பிடுகிறார். இன்றைய தினம் ஆங்கிலத்திலே 'ஒய்ப்' என்றும்; தமிழென நினைத்துக் கொண்டு 'பாரியாள்' என்றும்; 'கிரகலட்சுமி' என்றும் அழைக்கப்படுகின்ற பெண்ணினத்தை வள்ளுவர் மிகமிக அழகாகச் சொன்னார். "வாழ்க்கைத்துணை நலம்" என்று வாழ்க்கைத் துணைவி என்றுகூடச் சொல்லவில்லை; வாழ்க்கைத்துணை நலம் என்கிறார். அந்தப் பகுதியிலே அவர் குறிப்பிடுகிறார்.

"தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

அதற்கு, இன்றைய தினம் நமக்குத் தரப்படுகின்ற பொருள் – பரிமேலழகர் போன்றவர்கள் தந்திருக்கும் உரை – தெய்வம் தொழா அள் கொழுநற் தொழுதெழுவாள் – தெய்வத்தைத் தொழாமல் கணவனைத் தொழுதெழுகின்றாளே அந்தப் பெண், பெய்யென்று சொன்னால், உடனே மழை பொழியும் – இது நாம் இதுவரை கற்றிருக்கிற – நமக்குத் தரப்பட்டிருக்கிற பொருளாகும். கணவனைத் தெய்வமாகக் கருதுகிற ஒரு பெண் ஊரிலே மழை இல்லாவிட்டால், வயல் வெளியிலே வந்து நின்று கொண்டு "வருணபகவானே வா" என்று அழைத்தால் உடனே வருணப்கவான் முத்துமுத்தாக மழையைக் குவிப்பான்

என்று தான் அந்த உரைகளிலே காணக்கிடக்கிறது. ஆனால், அந்தக் குறளை இலக்கணரீதியாக – நல்ல தமிழறிவோடு சிந்தித்துப்பார்க்கிற நேரத்தில் – ஆராய்ந்து பார்க்கிற நேரத்தில் நமக்கென்ன பொருள் கிடைக்கிறது? பெண்ணை உயர்த்திப் பேச முனைந்த வள்ளுவர், பெண்ணை எதற்கு ஒப்பிடுகிறார். என்றால் – மழைக்குச் சமானமாகக் குறிப்பிடுகிறார். அதுவும் எந்த மழைக்கு? "பெய் யெனப் பெய்யும் மழைக்கு'! "பெய்" என்று சொன்னவுடன் பெய்தால் அது எப்படிப்பட்ட மழையோ – வா என்றழைத்த வுடன் வந்தால் அவன் எப்படிப்பட்டவனே 'போ' என்று சொன்னவுடன் போய்விடுபவன் எப்படிக் கட்டளைக்கு உட்படுகிறானே, ஆட்படுகிறானே – அது போல "தெய்வந் தொழாள் கொழுநற் தொழுதெழு வாள்–கணவனைத் தெய்வமாகக் கருதுபவள் "பெய்" என்ற உடனேயே பெய்கின்ற மழைக்குச் சமமா வாள் – என்று தான் வள்ளுவப் பெருந்தகையார் வாழ்க்கைத்துணை நலம் என்ற தலைப்பிலே குறிப்பிடு கிறார்.

இதை எந்தப் பண்டிதர்களும் – நிச்சயமாகச் சொல்லுகிறேன்; மறுக்க முடியாது. 'பெய்யெனப் பெய்யும் மழை" யென்றால் பெய் யென்று சொன்ன வுடன் பெய்யும் மழைக்கு ஈடாகும் என்பதே தவிர "சொன்னல் மழை பெய்யும்" என்ற பொருளல்ல. அந்த வார்த்தைக்கு அங்கே இடமேயில்லை. அப் படி இருக்கும்போது, இவர்களாகவே ஒன்றைச் சிருட்டித்துக் கொண்டு, பெண்களை இழிவுபடுத்த வேண்டுமென்பதற்காகவேதான் குறளுக்கு மறுப்பு எழுதியிருக்கிறார்களென்று நான் கருதுகிறேன்.

குறளை வைத்துக்கொண்டு ஒரு பெண்ணைக் கூப்பிட்டு "அம்மையே! ஊரிலே மழையில்லை. கொஞ்சம் மழை பெய்யச் சொல்!" என்றால், அந்தப் பெண் தெருவிலே வந்து நின்று, அல்லது கழனிக்கு அருகிலே சென்று, "வருணபகவானே! மழையைத் தா!" என்று சொன்னால், சொன்னவுடன் மழை பெய்யவில்லை யென்றால் என்ன கருதுவது? ஓகோ திருக்குறளின்படி, திருக்குறள் தந்திருக்கிற இலக்கணத்தின்படி இந்தப் பெண் கணவனைத் தெய்வமாக மதிக்கவில்லை. ஆகவே, "மழையே வா" என்றவுடன் "மழை பெய்யவில்லை" என்று அந்தப் பெண்ணுக்கு நிச்சயம் இழுக்கு கற்பித்துவிடுவோம். இப்படி யாராவது சில குறும்புக்காரர்கள் கிளப்புவார்களென்று கருதித்தானே என்னவோ, வள்ளுவர் பெண்கள் பெய் எனில் பெய்யும் மழைக்கு ஒப்பாவர் என்று மிகமிகத் தெள்ளத் தெளிவாக — யாரும் இங்கு, அங்கு இழுத்து அசைத்து எந்தவிதப் புதிய பொருளும் கொள்ள முடியாத வகையிலே எழுதி வைத்திருக்கிறார். ஆனாலும், சிலர் கொஞ்சம் இழுத்துப்பார்த்து; கொஞ்சம் புராணீகக் 'கல'ரும் கொடுத்து, குறளைக் கொஞ்சம் தங்கள் விருப்பத்துக்கு மாற்றிவைத்தார்கள்.

அதைப்போலவே இன்னுமொரு குறள் மிகமிக வேடிக்கை! இலக்கணம் தெரிந்த ஆசிரியர்கள்; இலக்கணம் புரிந்த அறிஞர்கள் நல்ல முறையிலே உணர்வார்கள். அதற்கு உரை எழுதிய வரதராசனார் கூட — கந்தய்யா கூட — குறிப்பிலே எழுதுகிற நேரத்திலே "இதற்கு சுப்பிரமணிய பிள்ளை இப்படி உரை கூறுவார்—அதுவும் ஓரளவு பொருந்துமாறு" என்று எழுதி வைத்தார்கள்.

என்ன குறளது ?

" ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின் "

ஊரிலே ஆண்டு கொண்டிருக்கிற அரசன் மக்களைச் சரியாகக் காப்பாற்றுவிட்டால் என்ன நேரும் ? வள்ளுவர் சொல்லுகிறார். "ஆபயன் குன்றும் என்று. ஆபயன் என்றால், 'ஆ' என்ற ஒரு எழுத்துக்குப் பொருள்–ஆகவேண்டிய ! ஆபயன் குன்றும் என்றால் ஆகவேண்டிய காரியங்கள் ஆகாது. ஏன் ? காவலன் காவானெனின் – செங்கோல் சரியாக நடை பெறுவிட்டால், மன்னன் சரியானபடி ஆட்சிக்கயிற் றைக் கையில் பிடித்திராவிட்டால், ஆபயன் குன்றி விடும். ஆகவேண்டிய காரியங்கள் கெட்டுவிடும். அறுதொழிலோர் நூல் மறப்பர் – ஆறுவகையான தொழில்களைச் செய்யவேண்டியவர்கள், தங்களுடைய வித்தைகளை யெல்லாம் மறந்துவிடுவர். காவலனு டைய பொறுப்பற்ற தன்மையால் – என்று வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார்.

புதிய பொருள் எழுதியவர்கள் என்ன சொல்லு கிறார்கள் ? " ஆபயன் குன்றும் " என்றால் - ஆட்சி சரியாக நடைபெறுவிட்டால், "ஆ" என்றால் பசுமாடு. "பயன் குன்றும் " என்றால் – பால் கொடுக்காது – பசுமாடு பால்கொடுக்காதாம் ! ஆட்சி சரியாக நடை பெறுவிட்டால் ! நம்முடைய நாட்டிலே பசுமாடு பால் கொடுக்காமலா இருக்கிறது ? ஹிட்லர் ஆண்ட நாட் டிலே பசுமாடு பால் கொடுக்காமலா இருந்துவிட் டது ? முசோலினி ஆண்ட நாட்டிலே பசுமாடு பால் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டது ? இவர்கள் தங்கள் தமிழறிவை இழுத்து வளைத்துக் காட்டி,

திருவள்ளுவனைப் பொய்யனுக்குகிறார்கள். அறிவற்றவனுக்குகிறார்கள். உள்ளபடியே "பசுமாடு பால் கொடுக்காது" என்ற பொருள்படும்படி எழுதியிருக்க வேண்டுமேயானால் "ஆப்பயன் குன்றும்" என்று எழுதியிருக்கவேண்டும் "ப்" என்ற ஒன்றைப் போட்டு! அந்த "ப்" இல்லாத காரணத்தால் 'ஆபயன் குன்றும் என்கின்ற நேரத்திலே ஆகவேண்டிய காரியங்கள் நடைபெறுது என்றே பொருள்படும். அரசன் சரியாக இல்லாவிட்டால் எப்படி ஆக வேண்டிய காரியங்கள்தான் நடைபெறும்?

அதைப் போலவே, "அறுதொழிலோர் நூல் மறப்பர்" என்கிறார் வள்ளுவர். உரை எழுத வந்த சுப்பிரமணிய பிள்ளை "அறுதொழிலோர்" என்பது சரியில்லை. "அறிதொழிலோர்" என்றிருக்க வேண்டும். அறிந்த தொழில்கள் அனைத்தும் மறந்துவிட்டனர் எனப் பொருள்பட என்கிறார். இந்த நிலைமையிலே குறளுக்குப் பலவகையான கருத்துக்கள் தரப்பட்ட காரணத்தால்தான், இன்றைய தினம் நாட்டு மக்களிடையே 'குறள்' என்றால் இத்தனை சிறப்புடையது, அதை மேல் நாட்டவர்களும் விரும்பிப் படிக்கிறார்கள், ஆகவே சொந்த நாட்டுக்காரர்களே நீங்களும் படியுங்கள் என்று சொல்ல வேண்டிய கேவலமான நிலை சொல்லித் தீரவேண்டிய மிக மிகக் கீழான நிலை நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது

குறளுக்குச் சிறப்பா? அதை மக்களுக்கு உணர்த்த வேண்டிய நிலையா? சொல்லவே வேதனையாகத்தான் இருக்கிறது!

ஆயிரத்து முன்னூற்று முப்பது குறட் பாக்க ளும் எப்படிப்பட்டவை என்று ஒரு புலவர் சொன்னார்.

"கடு கைத்துளைத்து எழு கடலைப் புகட்டிய குறள்" என்று! உடனே ஔவை சொன்னார், அல்ல, அல்ல. "அணு வைத்துளைத்து எழு கடலைப் புகட்டிய குறள்" என்றார். அந்த அளவுக்கு அணுவிலேகூட ஏழு கடலைப் புகுத்தினற் போன்றது திருக்குறள்—என்று அன்றைய தினம் சொல்லப்பட்டது. அத்தகைய குறள் இன்றைய தினம் மக்கள் மன்றத்திலே மதிப்பு குறைந்த நிலையிலே இல்லாவிட்டாலும், அலட்சியப் படுத்தப்படுகின்ற நிலைமையிலே — அக்கரையற்ற தன்மையிலேதான் மதிப்பிடப் படுகின்றது.

குறளிலே எல்லாம் சொல்லப்படுகின்றது! வாழ்க் கைக்கு வேதாந்தம், நாடாளுகின்ற தன்மை, பொரு ளாதாரப் பிரச்னை, வீரம், காதல், அரசியல்—அத்தனை யும் அடங்கிய ஒரு நூல் திருக்குறள்தான். அதிலே அரசியல் இல்லையென்று வாதிட முடியுமா?

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்".

பிச்சை யெடுத்துத்தான் சாப்பிடவேண்டும் என்ற நிலையிருந்தால் அத்தகைய உலகத்தை உண்டாக் கியவன் இருக்கிறானே, அவன் கெட்டொழிந்து போகட்டும் என்றார்—பொதுவுடமை தாண்டவமாடு கிறதே!

அதுபோலவே வீரம்—எந்தெந்த விதத்திலே? ஒருவன் போர்க்களத்தில் எதிரிமீது எறிய வேல் இல்லாத காரணத்தால் "வேல் எங்கே?" வேல்

எங்கே?" என்று தேடி அலைகிறான், அவனை எதிர்த்து ஒரு யானை வருகிறது அதை எதிர்க்க ஒரு வேல் தேவை அவனுக்கு கிடைக்கவில்லை. சுற்றும் முற்றும் பார்க்கிறான்; கடைசியில் அவன் மார்பிலே ஒரு வேல் பாய்ந்து நிற்பது தெரிகிறது. அதை எடுத்து எறிகிறான். எவ்வளவு வீரம்! எவ்வளவு அழகாக திருவள்ளுவரால் எடுத்துக் கையாளப்படுகிறது என் பதை உணர்ந்து பார்க்க வேண்டும். "கைவேல் களிற்றெறிந்து போக்கி வருபவன் மெய்வேல் பறியா நகும்."

அதைப் போலவே, இங்கு இருக்கின்ற மாணவர் களுக்குச் சொல்ல விரும்புகின்றேன்... ...நம்முடைய தந்தை—நம்முடைய பெற்றோர்—நம்மிடத்தில் என்ன நன்றியை எதிர்பார்க்கிறார்கள்? அதுபோலவே, அவர் கள் நமக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன?— என்பதை வள்ளுவர் எவ்வளவு அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி — எப்படி இருக்க வேண்டும்? இவனைப் பெறுவதற்கு இவ னுடைய தந்தை என்ன 'தவம்' இருந்தானே—என்று ஊரார் சொல்லுகின்ற அளவுக்கு, மகன் தன்னுடைய வாழ்க்கையை உயர்த்திக்கொள்ள வேண்டும் என் கிறார், மகன் செய்ய வேண்டிய உதவி இதுவென்றால், அதே நேரத்தில் தந்தை மகனுக்கு ஆற்ற வேண்டிய உதவி என்ன? "அவையத்து முந்தியிருப்பச் செயல்!" என்று கூறுகிறார். தந்தை செய்ய வேண்டிய கடமை— மகனை அவையத்து முந்தியிருப்பச் செயல்! 'அவை' யென்றால் மன்றம்; அத்தகைய மன்றத்தில் முதல்வ

னுக இருக்கச் செய்ய வேண்டிய கடமை தந்தைக்கு உரியது என்று சொல்லுகிறார் வள்ளுவர்!

ஆனல், இந்தக் காலத்திலே தந்தைகளோ, மகனே மன்றத்தில் ஏற்றுவதற்கா விருப்புகிறார்கள்? எங்கே, இவன் மன்றத்துக்குச் சென்று விடுவானே என்றல்லவா அஞ்சுகிறார்கள்.

வள்ளுவருடைய குறளிலே இம்மாதிரியான நீதிகள் மாத்திரமல்ல; இலக்கிய வளம் மாத்திரமல்ல; நல்ல நல்ல அரசியல் கருத்துக்களும் அதிலே உண்டு!

அவர் சொல்லுகிறார், ஓரிடத்தில் — பொருட்பாலில்–பெரியாரைத் துணைக் கோடல்–என்ற அத்தியாயத்தில் — ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் ஆட்சி சரிவர நடைபெற பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்.

பெரியாரைத் துணைக்கோடல் என்றால் எப்படி? எந்தப் பெரியாரைத் துணைகொள்ளச் சொல்லுகிறார்? எது செய்தாலும் கண்டிக்காமல், ஆதரிக்கிற பெரியாரையல்ல; என்ன சொல்லுகிறார் தெரியுமா?

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும்"

—தட்டிக் கேட்க ஆளில்லாத மன்னன்—தட்டிக் கேட்கக்கூடிய பெரியாரைத் துணையாகப் பெற்றிருக்காத மன்னன்—பகைவர்கள் இல்லாமலேயே தானே அழிந்து விடுவான். மூக்கணங்கயிறு இல்லாத மாடு எப்படி ஆகிவிடுமோ; அதுபோல கெடுப்பாரிலானும் கெடுவான், இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்!

—என்று அன்றைய தினம் திருவள்ளுவர் அரசியலுக்கு நல்ல விளக்கம் தந்திருக்கிறார்.

அறத்தைப் பற்றிச் சொல்லுகின்ற வள்ளுவர் எவ்வளவு அழகான வார்த்தையைக் கையாண்டிருக்கிறார்!

"என்பில் அதனை வெயில் போலக்காயுமே
அன்பி லதனை அறம்"

அன்பிலாதவர்களை அறம் காய்த்து, தீய்த்து, மாய்த்துக் கொன்றுவிடும் எப்படி அன்பிலாதவர்களை அறமானது கொன்றுவிடும் என்று சொல்லுகிறார்? "அன்பி லதனை', என்று சொல்ல வந்தவர் "அன்பிலதனை அறம்" என்று சொல்ல வந்தவர் அதற்கு உதாரணமாக "என்பிலதனை வெய்யில் போல்" என்கிறார். எலும்பு இல்லாத ஜீவராசிகளை வெயில் காய்வதுபோல்–புழுக்களை வெய்யில் காய்வது போல்! புழு என்று சொல்ல வந்த வள்ளுவர் புழு என்று சொல்லாமல்–அவருக்கும் அந்த அழகு மொழியிலும், அடுக்கு மொழியிலும் அந்தக் காலத்திலேயே இருந்த ஆசை காரணமாக–"என்பிலதனை வெயில் போலக்காயுமே அன்பிலதனை அறம்" என்கிறார்.

கொஞ்சம் குறும்புக்காரர் போலும் வள்ளுவர். எதிர்கால அரசியலைத் தெரிந்தவர் போலும். ஆகவே தான் சொல்லுகிறார்; ஆளுகிறவர்களுக்குத் தேவையான லட்சணம் என்ன என்று கூறுகிறபோது:–

"தூங்காமை கல்வி துணிவுடமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு"

தூங்காமல் இருக்கவேண்டுமாம். கல்வி வேண்டுமாம். எங்களுக்குக் கொடுக்கவேண்டிய பங்கைக்

கொடு என்று கேட்கிற துணிவுடைமையும் வேண்டு மாம்–என்று மிக மிக அழகாக வள்ளுவர் சொல்லு கிறார். இவையெல்லாம் நீங்காத பண்புகளாக இருக்க வேண்டும் நிலத்தை ஆள்பவருக்கு.

இந்த இரண்டு பால்களிலும் அரசியல் கருத்துக் களை அழகாக எடுத்துச் சொன்ன வள்ளுவர்–மூன்று வதாக ஒருபால், முன்னுள் கல்வி அமைச்சராக இருந்த அவினுசிலிங்கனுருக்குப் பிடிக்காத பால்— அந்தக் காமத்துப்பாலைப் பற்றி எழுதுகிற நேரத்தில் எவ்வளவு அழகாக – இங்கிருக்கும் பெரியவர்கள் எல் லாம் அலுத்துச் சலித்து விட்டாலும் அந்தச் செய்தி கள் இப்போதும் ருசிக்கும்படியாக–மாணவர்கள் எல் லாம் கனவுகாணும் விதத்திலே–அதைச் சொல்லுகிற நானும், கேட்கின்ற நீங்களும் தனிச்சுவையைக் காணுகின்ற விதத்திலே – இல்லறத்தின் மகிமையை இல்லறத்திலே இருக்கவேண்டிய காதலை மிகமிக அழகாகச் சொல்லுகிறார்.

யார் யாரோ என்னென்னமோ சொன்னார்கள் காதலைப்பற்றி! பக்கம் பக்கமாக எழுதினர்கள். மேல் நாட்டுப்புலவர்கள் எல்லாம்–இலக்கிய கர்த்தாக்கள் எல்லாம்–நூறு பக்கம், இருநூறு பக்கம் எழுதித் தீர்த் தால்கூட, காதலைப்பற்றி பரிபூரணமாக எழுதிமுடித்து விட்டோம் என்று அவர்கள் திருப்தியடையவில்லை, ஆனால், வள்ளுவர் அப்படியில்லை. அந்த ஒரே அதி காரத்தில் இன்னும் சொல்லப்போனால் ஒரே குறளில் கூட "காத"லென்றால் என்ன? என்று விளக்கி விடு கிறார்.

“ உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு ”

உள்ளக்களித்தலும், காண மகிழ்தலும் கள்ளுக்கு இல்லே. நல்ல குடிகாரனிடத்திலே போய், கள்ளுப் புட்டியை எதிரே வைத்து, எட்டிநின்று பார்க்கச் சொன்னுல், அவன் அதைப்பார்த்து மகிழ்ச்சியடைய மாட்டான் அதைப்போல் ‘கள்’ என்று அவனிடம் சொன்னலும், மனதால் நினைத்து மகிழ்ச்சியடைய மாட்டான். ஆனல், காதல் அப்படி அல்ல; அதை நினைத்தாலே மகிழ்ச்சியாம். இரண்டாயிரம் மைல் களுக்கு அப்பாலே இருக்கும் காதலியின் அழகான திருமுகத்தை எண்ணி–அவள் எழுதிய அந்த அழ கான மடலைப் பார்த்து–கையெழுத்திலே அவளது நீலக்குறு நயனங்களையும்–எப்படித்தான் எழுதி னளோ என்று எண்ணுகிற நேரத்தில் அவளது காந் தள் விரல்களையும்–பேனு பிடிக்கக்கூடிய நேரத்திலே அவள் கையிலே இருந்தது மயில் தோகையோ, அல் லது புருவின் இறகோ என்றும் எண்ணி அத்தகைய களிப்பையும் உள்ளம் பெறுகிறதாம்–உள்ளம் களிக் கிறதாம்!

அவளைப் பூங்காவிலே காணுகிற நேரத்தில் அது மாடப்புருவோ–மனமோகன மயிலோ, குயிலோ என் றெல்லாம் எண்ணி-கண்டு மகிழ்தலும் காமத்திற்கு மட்டுமேதான் உண்டு. கள்ளுக்கு இல்லே. மான வர்கள் பலருக்கு அது புரியாது; சுவைத்தவர்களுக் கும்–ரசித்தவர்களுக்கும் மட்டுமே அது புரியும். அந்த அளவுக்கு வள்ளுவர் அவரது வயது என்னவோ, அறுபது வயதிலேகூட எழுதியிருக்கலாம், ஆனலும் இளம் உள்ளத்தோடு எழுதியிருக்கிருர். அந்த இன்ப

நெஞ்சத்தோடு எழுதியிருக்கிறார். இதைப் படிப்பவர்கள் எதிர்கால இளைஞர்கள். தமிழகத்துத் தவப்புதல்வர்கள். அவர்களுக்குத் தேவையானது காதல் வீரம் நாட்டுப்பற்று, அரசியல் முறை, குடும்பம் நடத்துகின்ற தன்மை, பண்பு, பழக்கம்–இத்தனையும் தேவை என்று கருதி அவர் எழுதுகிறார்.

இன்னுமொன்று அழகாகச் சொல்லுகிறார். அவர் எழுதுகிற கருத்தினைவிட எடுத்தாண்டிருக்கிற உவமை இருக்கிறதே—உதாரணம் இருக்கிறதே—அந்த உதாரணத்தை— தமிழகத்தின் சார்பில் அறை கூவலிட்டுச் சொல்லமுடியும், எந்த மேல்நாட்டுப் புலவனும் இதுவரை கையாண்டதில்லை. கணவன் வெளியூர் சென்றிருக்கிறான். தையலுக்கு அவன்மேல் ஆத்திரம். "வரட்டும் வரட்டும்! பார்த்துக்கொள்ளுகிறேன். எவ்வளவு காலம் பிரிந்திருக்கிறான் அவன். வந்ததும் எப்படி எப்படி கண்டிக்கிறேன்!" என்று அடுத்த வீட்டுத் தோழியிடம்–பக்கத்து வீட்டுப்பாங்கியிடம்—எதிர்த்த வீட்டு ஏந்திழையிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாள். "என்ன பாடு படுத்துகிறேன் பார்! வாசலில் ஒருமணி நேரமாவது நிற்க வேண்டாமா?—காமி! சத்யபாமா கதவைத்திறவாய்! என்று பாட வேண்டாமா? பாடினாலும் கதவைத் திறப்பேனா கதவைத் திறந்தாலும் இரண்டுமணி நேரம் கண்ணைத் திறப்பேனா? என்றெல்லாம் சவால் தொடுத்துக் கொண்டிருக்கிற மனைவி, கணவனை எதிரே பார்த்ததும் என்ன ஆகிறாள் என்பதை ஒரு நல்ல உதாரணத்தின் மூலம் வள்ளுவர் விளக்குகிறார். தூர இருந்த கணவன் அருகில் வந்ததும் அவனது குற்றங்களை எல்லாம் மறந்து விடுவாளாம்! எப்படித் தெரியுமா?

"எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல "— மையெழுதிக் கொள்வார்களே பெண்கள், அப்போது மைச்சிமிழை எடுத்து, அழகான மைக்கோல் ஒன்றை யும் எடுத்து, அந்தச் சிமிழிலே தோய்க்கிறுள். பார்ப்ப வளுக்கு—அப்போது தூர இருக்கிற அந்த எழுது கோல் கண்களுக்குத் தெரியும். அதாவது கணவன் தூர இருக்கும்போது அவனது குறைகள் மாத்திரம் தெரிவதுபோல. அதை எழுதுவதற்குக் கண் அரு கில் கொண்டுபோகும் போதோ..... கண்களுக்குத் தெரியாது. அதுபோலவே, கணவன் அருகிலே வந்த தும் அவனது பிழைகளும் தெரியாமல் மறைந்து விடு கின்றன.

"எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல் கொண்கன் பழிகாணேன் கண்டவிடத்து"

எத்தகைய அருமையான உதாரணம்? அது மாத்திரமல்ல, அந்தக் காதல் இலக்கணத்தில் எந்தப் புலவனும் கையாளாத முறையைக் கையாளுகிறுர்.

இப்படித் தமிழகத்தினுடைய இல்வாழ்க்கையை யும், சமுதாய வாழ்க்கையையும் சிருட்டித்துக் காட்டிய வள்ளுவப் பெருந்தகையாளருடைய குறள் நாட்டு மக்களின் உள்ளத்திலே நல்ல முறையிலே ஒலிக்க வேண்டுமானுல், அந்த ஓவியம் அவர்களது உள்ளங் களில் நல்ல முறையில் பதியவேண்டுமானுல், அந்தக் குறளோவியத்தை மாணவர்கள் – பெரியவர்கள் – தாய்மார்கள் – இந்த நாடு வாழவேண்டுமென்று விரும்புகின்ற அத்தனைபேர்களும்–"நாடுவாழ நலிவு போக" விரும்புகிறவர்கள் அக்குறளை ஒரு நல்ல வேதப்புத்தகமாகக் கருதி – குறளோவியத்தின் வழி

நடந்து – அந்த வழியிலே நமக்குக் கிடைக்கின்ற நலன்களை அனுபவித்து – "திருக்குறள் ஒரு இன்பச் சோலை," அதை இதுவரை பாலையென எண்ணிக் கிடந்தோம், சோலைக்குச் செல்லுவோம். அதிலே கருத்துக் கான மயில் ஆடும்; கொள்கைக் குயில் கூவும்; நல்ல விளக்கங்கள் என்ற புள்ளிமான்கள் துள்ளும்; அத்தகைய சோலையிலே ஆனந்தத் தென்றலாம் அரசியல் தென்றல் வீசும்! அத்தகைய அரசியல் தென்றலாக – இலக்கியப் பெட்டகமாக – இன்பப் புதையலாக இல்லறக் கருவூலமாகக் கிடைத் திருக்கிற ஓவியம் தான் குறளோவியம்! அவ்வழி நடந்து நாடு வளர்ப்போம்! நலன் குவிப்போம்!

குளித்தலை இலக்கிய மாணவர் மன்றம்

16—4—57

அவைத்தலைவர் அவர்களே! இன்று மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையைப்பற்றி போற்றவும் வரவில்லை, தூற்றவும் வரவில்லை என் னுடைய கருத்துரையை ஆற்றவே வந்திருக்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையைப்பற்றி இங்கு நண்பர்கள் அபிப்பிராயந் தெரிவித்த நேரத்தில்— எதிர்க்கட்சியினரைப்பற்றி இங்கு பேசப்பட்ட நேரத் தில் குறை கூறுவதையே எதிர்க்கட்சியினர் தொழி லாகக் கொண்டு பேசுகிறார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டது குறைகளை எடுத்துச் சொல்லி நிறைவேற்று வதற்காகத்தான் சட்ட மன்றத்திற்கு வந்திருக்கிறோமே தவிர செய்திருக்கிற காரியங்களைப் பன்னிப்பன்னிச் சொல்லி, அவைகளைப் பாராட்டு வதற்காக நாம் இங்கு வரவில்லை. அத்தகைய காரி யங்களுக்காக நடத்தப்படுகின்ற பாராட்டு விழாக்கள் எல்லாம், வெளியிலே அந்தக் காரியங்களால் பயன் பெறுபவர்களால் நடத்தப்படுவது மிகப் பொருத்த முடையது என்பதை நான் இங்கே குறிப்பிடாம லிருக்க முடியவில்லை. குறைகளை எடுத்துச் சொல்லி சரிசெய்து கொள்வதற்காகவே சட்ட மன்றத்திற்கு வந்திருக்கிறோம்.

மன்னராட்சியல்ல! மக்களாட்சி!!

அந்தக் காலத்தில் மன்னர்கள், மக்களின் குறை களைத் தெரிந்து அவர்களுக்கு நல்வாழ்வு நல்குவ தற்கு இரவு நேரங்களில் "நகர்சோதனை" என்ற

பெயரால் மாறுவேடம் தாங்கி, மக்களைச் சந்தித்து அவர்களுடைய குறைகளை எல்லாந்தெரிந்து, கொலு மண்டபத்தில் உட்கார்ந்து அந்தக் குறைகளைப் போக்கினர்கள் என்று பழையகாலச் சரித்திரத்தி லிருந்து படித்திருக்கிறோம். இது மன்னர்கள் ஆளும் காலமல்ல; மக்கள் ஆளுகின்ற காலம். இந்தக் காலத் திலும் மந்திரிகள் அதேபோல மாறுவேடம் தாங்கி மக்களின் குறைகளைக் கண்டுவர வேண்டுமென்று நான் கூறவில்லை. நாடகத்திலே அனுபவம் பெற்ற நாங்கள் ஒருவேளை ஆளும் கட்சியினராக வந்தால், அந்த வேடங்களைப் போட்டு மக்களின் குறைகளைக் கண்டுபிடிக்க முடியும். அந்த அனுபவம் இல்லாத மந்திரிகளை அதைச் செய்ய வேண்டுமென்று நான் கோரமாட்டேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

எதிர்க்கட்சி ஒன்று தேவை என்பது எதை யெடுத்தாலும் எதிர்த்துப் பேசுவதற்காக அல்ல என் பதை இங்கு பேசிய பலர் சுட்டிக் காட்டினர்கள். ஆளுகின்றவர்கள் யாரைத் துணைக் கொள்ளவேண்டு மென்பதைப் பற்றி வள்ளுவர் பெருமான் தனது திருக்குறளில், "பெரியாரைத் துணைகோடல்" என்ற அதிகாரத்தில் ஆளுகிறவர்கள், "பெரியாரைத் தம் முடைய துணைவராகக் கொள்ளவேண்டு" மென்று கூறியிருக்கிறார். எந்தப் பெரியாரைத் துணைகொள்ள வேண்டுமென்று கூறினர் என்றால், எதையும் "சரி, சரி" யென்று சொல்லி கண்டிக்காமல் இருக்கின்ற பெரியாரை அல்ல. "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்" என்று வள்ளுவர் குறள் வகுத்திருக்கிறார். சபையில் ஆளு

கின்ற தம்மை இடித்துச் சொல்லுகின்ற பெரியாரைத் துணைவராகக் கொள்ளாத மன்னன் பகைவர் இல்லையாயினும் தன்னைத்தானே கெடுத்துக் கொள்ளுவான். கெட்டுவிடுவான் என்று சொல்லியிருக்கிறார். அந்த முறையிலே இடித்துச் சொல்வதற்காகவே வந்திருக்கிற பெரியார்களுடைய துணையை ஆளுகின்றவர்கள் பெறவேண்டுமென்று வள்ளுவர் அந்தக் காலத்திலேயே உணர்ந்து சொன்னர் போலும்!

கவர்னருடைய உரையைப் பற்றி இங்கு பேசிய நண்பர்கள் பலர் "கன்னியா குமரியை வரவேற்கிறேம்" என்று கூறியிருக்கிறார்கள். அந்தக் கன்யா குமரியை நாம் தேவிக்குளக்கரையிலோ, பீர்மேட்டின் மீதோ நின்று கொண்டு வரவேற்காமல் சிதைந்து போன செங்கோட்டையின் மீது நின்று வரவேற்கிறேம் என்று எண்ணும்போது, தேவிகுளம், பீர்மேட்டைப் பெறுவதற்கு வழிவகை காணப்படவில்லை — கவர்னர் உரையில்—சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

குளித்தலைத் தொகுதியில் நிலச்சட்டங்களால் நிலவும் அநீதிகள்!

அடுத்து நிலச்சட்டங்களின் பெயரால் நியாய வாரச்சட்டங்களின் பெயரால்; விவசாயிகள் திருப்தியடைந்து சுமுகமான நிலையிலிருக்கிறார்கள்" என்று கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய குளித்தலைத் தொகுதியைப் பொறுத்தவரையிலும், திருச்சி மாவட்டத்திலும் இன்றைய தினம் இந்த நியாய வாரச் சட்டத்தின் காரணமாகவும்; சீர்திருத்தச் சட்டத்தின் காரணமாகவும்

எழுந்த வழக்கு உயர்நீதிமன்றம் சென்று, அங்கு அளிக்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக மக்களுக்கு வேதனையை உண்டாக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதை யாவரும் மறந்துவிட முடியாது. மறுத்துவிடவும் முடியாது. விவசாயிகள் வீடுகளில், தங்கள் மனைவி, மக்களுடன் வேதனையடைந்து புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள். குமுறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நியாய வாரச்சட்டத்தின் காரணமாகக் குளித்தலைத் தொகுதி-நங்கவரம் பகுதியிலும் திம்மாச்சிபுரம் பகுதியிலும் விவசாயிகள் எந்த அளவிற்குக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தினம் தினம் பத்திரிகைகளில் வரும் செய்திகளைக் கண்டும், விவசாயிகள் பகுதியில் எழுப்பப்படுகின்ற கூக்குரலைக் கண்டும் எந்த முறையில் அங்கு நிலைமை இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே கையேர் வாரம்; என்றும் – மாட்டு ஏர் வாரம் என்றும் இரண்டுவித 'வாரம்' இருக்கிறது. இப்படி இரண்டுவிதமான வாரம் இருப்பதின் காரணமாக அவர்களுக்கு இந்த நியாய வாரச்சட்டம் பயன்படக் கூடாது என்று கருதி–அதை விவசாயிகள் பயனடையாத வகையில் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று அங்கு தீர்ப்பு வாங்கியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின் காரணமாக விவசாயிகள் நியாயவாரச் சட்டத்தின் பயனை அடைய முடியாமலும், வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தின் பயனை அடைய முடியாமலும் இருக்கிறார்கள், இன்றைய தினம் உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு அந்த ரீதியில் வழங்கியிருக்கிறது. அதன்

காரணமாக மாட்டுவாரக்காரர்கள் என்ருல் யார்? கையோர்க்காரர்கள் என்ருல் யார்? என்ற பிரச்னை எழும்பி அதைப்பற்றிய விளக்கத்தைக் கவனிக்கும் போது தான் நிலைமை தெரியவருகிறது. மாடும் தந்து அவர்களுடைய சொந்த உழைப்பையும் சிந்தி, நிலம் உடையவர்களிடத்தில் விதை, உரம், எரு – இவை களைப் பெற்று, அப்படிப் பெறுகிற அந்தப் பொருளுக் காக, விளைச்சலில் அவர்கள் தனியாக தானிய மாகவோ, அல்லது பொருளாகவோ எடுத்துக் கொண்ட பிறகு அறுபது–நாற்பது என்று பெற வேண்டுமென்று சொல்லப்பட்டாலும் இன்றைய தினம் மாட்டு ஏர்க்காரர்கள் விவசாயிகள் அல்ல என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதைப்போலவே கையோர்க்காரர்கள் யார் என்ருல் அவர்கள் பெரும்பாலும் ஆதிதிராவிட வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்–பழங்குடி மக்கள் என்ற பிற்பட்ட மக் கள்–பாட்டாளி மக்கள்! அப்படிப்பட்ட வர்க்கத் தினருக்காகத்தான் இந்த நியாயவாரச் சட்டம் செய் யப்பட்டது. அந்த அடிப்படையில் அவர்களுக்கென்று இந்த நியாயவாரச் சட்டத்தையும், நிலவெளியேற்றத் தடுப்புச் சட்டத்தையும் கொண்டு வந்தாலும், அவர் கள் அவைகளின் பயனை அடைய முடியாமல் நீதி மன்றம் தீர்ப்பு அளித்துவிட்டது. எந்த அடிப்படை யிலாவது, எந்த அளவிலாவது இந்த நியாயவாரச் சட்டம் அவர்களுக்கு நன்மை வழங்கியிருக்கிறதா என்று பார்த்தால், இல்லையென்று தான் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட மாட்டுவாரக்காரர்களும் கையோர்க்காரர்களும் சாகுபடியாளர்கள் அல்ல என்ற தீர்ப்புக்கு இன்று ஆளாகியிருக்கின்றனர். அதன்

மேல் அப்பீல் செய்யப்பட்டு மீண்டும், வழக்கு வரும் ஜூலை மாதம் மூன்றுவது வாரத்தில் எடுத்துக் கொள்ளப்படப்போவதாக இருக்கிறது!

அதற்குள் விவசாயிகளுடைய நிலைமை என்ன வென்றுல், முத்து முத்தாக வியர்வை சிந்தி, மணி மணியாக நெற் குவியலைத் தந்தவர்கள் களத்து மேட்டில் காவலர் புடைசூழ அதைக் கொட்டிவிட்டு, வீட்டிலே வறுமைத் தேள் கொட்டிட வாடிக் கிடக் கிறார்கள்.

குளித்தலைத் தொகுதியில் இப்போது நிலவி வருகிற இப்படிப்பட்ட நிலைமைபற்றி கவர்னர் அவர் கள் தன்னுடைய உரையில் குறிப்பிட மறந்தது வருந்தத்தக்க ஒன்று.

நெருக்கடிக்கு ஆளாகி யிருக்கக்கூடிய விவசாயி களுக்கு என்ன செய்யப்பட வேண்டுமென்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உயர்நீதி மன்றம் ஜூலை மாதம் மூன்றுவது வாரத்தில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு முன்னதாக புதிய ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். அதையும் துரிதமாகக் கொண்டு வரவேண்டும். ஏழைத் தொழிலாளர் களுடைய — ஏழை விவசாயிகளுடைய அவல நிலை மையை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் என்ன நட வடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறது என்பதைப் பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் ஒன்றுமே இல்லை என்பதை மிகவும் கவலைகொண்டு தெரிவித் துக் கொள்ளுகிறேன்.

தெற்கின் விளைவு வடக்கே!

அடுத்து உணவுப் பற்றுக் குறையைப் பற்றியது. கவர்னர் அவர்களுடைய உரையில் உணவு விலை குறையவில்லை என்று குறிப்பிட்டாலும்; உணவு விலை அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதை மறுக்க இயலாது. எங்கு பார்த்தாலும் உணவு விலை விஷம் போல் தினந் தினம் ஏறிக்கொண்டே யிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். ஆந்திராவிலுள்ள பெருவாரியான உபரி அரிசி, தமிழகத்திற்குப் பயன்படாமல், வடநாட்டில் கோதுமைப் பஞ்ச மேற்பட்டிருக்கின்ற காரணத்தால் அங்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்குள்ள கோதுமையைக் கொண்டு வடக்கே சரிக்கட்டுவதற் குப் பதிலாக, ஆந்திராவிலுள்ள உபரியான அரிசியை தமிழ் நாட்டிற்குப் பயன்படாத முறையில் எடுத்துச் சென்றதானது, இங்கு விலைவாசி உயர்வுக்குக் காரண மாயிருக்கிறது. இதைப்பற்றி கவர்னர் அவர்களு டைய உரையில் எந்த விதமான குறிப்பும் காணப் படவில்லை. இப்படி விலை வாசிகள் உயர்வதற்கு எப்படிப்பட்ட வழிவகை செய்யப்படும் என்பதும் சொல்லப்படவில்லை.

உணவு நிலைமையைச் சமாளிப்பதற்கு சர்க்கார் உணவுப் பெருக்கத்திற்குத் திட்டங்கள் செய்ய வேண்டும். இந்த சர்க்கார் கையில்லாத — ஊமை யின் நிலையில் தான் இருக்கிறார்கள். தங்களுடைய நிலைமை என்ன என்று சொல்ல முடியாமல், ஊமை யாக இருந்து — சுட்டிக் காட்டுவதற்கும் கையற்ற முற்றயில் இருந்து கொண்டிருந்தால், உணவு நிலை,

பற்ருக்குறை இதுபோன்று எப்பொழுதும் நீடித்துக் கொண்டேயிருக்கும். இத்தகைய நிலைமையிலிருந்து திராவிடம் விடுபட்டு, திராவிடம் தனித்து, செழித்து நின்று, வளம் பெற, வாழ, நல்ல முறையில் திட்டங் களைத் தீட்டவேண்டும். அதற்குக் குறிப்பாக — உதாரணத்திற்காக ஒன்றை மட்டும் சொல்லுகி றேன். குடகனுறு திட்டம் தேவை என்ற முயற்சி ஒன்று குளித்தலைத் தொகுதியில் 1952-ஆம் ஆண்டு முதற் கொண்டே இருந்து வருகிறது. அதைப்பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. கனம் முதலமைச்சர் அவர்களிடமும்; கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களிடமும்; கனம் மராமத்து அமைச்சர் அவர்களிடமும் பலதடவை –பல மனுக்கள் மூலமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது அங்குள்ள பி. டபுள்யூ. டி. சூபர்வைசர் அவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்துத் துரிதமாக நடத்தவேண்டு மென்று ஆய்ந்து சொல்லியிருக்கிறார். அழகாபுரி என்கிற இடத்தில் ஒரு அணை கட்டினுல் அதன்மூல மாகச் சுமார் பத்தாயிரம் ஏக்கர் புஞ்சை நிலத்தை – நஞ்சையாக மாற்றக்கூடிய வசதியிருக்கிறது. அதற் குப் பனிரண்டு லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது கவனிப்பார் அற்றுக் கிடக்கிறது. இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை எல் லாம் கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் சிறிதும் குறிப்பிடவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை இத் துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

(சட்ட மன்றம் 4—5—57)

பதவிதேடும் காமராசர்

அன்புள்ள தலைவர் அவர்களே! பெரியோர் களே! தாய்மார்களே! தோழர்களே! இன்றையத் தினம நம்முடைய சட்டசபை உறுப்பினரான தோழர் ஆசைத்தம்பி அவர்களையும்; என்னுடைய குளித் தலைத் தொகுதியிலிருந்து வெற்றி பெற்ற என்னையும் பாராட்டுவதற்காக நடைபெறும் இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள எனக்கும் வாய்ப்பளித்தமைக்கு நான் மிக மிக மகிழ்ச்சியடை கிறேன். நான் என் இத்தொகுதியை "நம்முடைய தொகுதி என்று குறிப்பிடுகிறேன் என்றுல், இந்த ஆயிரம் விளக்குத் தொகுதியில் வெற்றிபெற்ற தோழர். ஆசைத்தம்பி அவர்களுக்கு விழுந்த வோட்டு களில் என்னுடைய வீட்டு வோட்டுகளும் நான் கைந்து இருந்திருக்கின்றன, என்பதால் தான். ஆயிரம் விளக்குத் தொகுதி வாக்காளர் பட்டியலில் என்னுடைய பெயரும் பதிவாகியிருக்கின்ற காரணத்தால், அவர் எனக்கும் எம் எல். ஏ, ஆன படியால் வாக்காளர் என்ற நிலையில் நின்று நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தோழர். ஆசைத்தம்பி அவர்கள், இந்தத் தொகுதி மக்களுக்கு ஆற்ற இருக்கும் தொண்டுகள் பெருகி, அவர் என்றென்றும் இந்தத் தொகுதியின் எம். எல். ஏ. வாகவே இருக்க வேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

நடைபெற்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பல இடங்களில் போட்டியிட்டு பதினைந்து

இடங்களே மட்டுமே கைப்பற்றி, திராவிட முன்னேற் றக் கழகத்தின் நல்ல பெரும் முன்னணி வீரர்களையும் தென்னகத்தின் வழிகாட்டியாக விளங்குகிற அறிஞர் அண்ணு அவர்களையும் சட்டசபைக்கு அனுப்பி வைத்து, புளகாங்கிதத்தோடும், பெருமிதத்தோடும் வீற்றிருக்கின்ற இந்த நேரத்தில், எதிர்காலத்தில் நாம் பெறவேண்டிய வெற்றிகள் குறித்தும். வளர வேண்டிய விதங்கள் குறித்தும் இந்தப் பாராட்டுக் கூட்டத்திலே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக் கிறேன்.

திராவிட முன்னேற்றக்கழம் தேர்தலில் ஈடுபட்ட காரணத்தால் புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கமாக மாறியிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. நாம் பதினைந்து இடங்களேத்தான் பெற்ருேம். நம்மை ஒழித்துவிட வேண்டுமென்று கூறிக்கொண் டிருந்த காங்கிரசு ஏறத்தாழ நூற்றைம்பது இடங் களில் வெற்றிக்கொடி நாட்டியிருக்கிறது. என்ருலும் இரண்டிற்குமிடையே உள்ள வோட்டுகள் வித்தியா சத்தையும் ஆதரித்த அல்லது வெறுத்த மக்கள் தொகையின் வேறுபாட்டையும் கூர்ந்து கவனித்தால் இந்த நாட்டில் காங்கிரசுக்கு அடுத்தபடியான வலி வும் பொலிவும்கொண்டகட்சி திராவிட முன்னேற்றக் கழகந்தான் என்ற மகத்தான பேருண்மை புலப்படும்.

நாம் தேர்தலில் போட்டியிட எண்ணிய நேரத் தில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு சீட்டா வது கிடைக்குமா? என்று ஆரூடம் கணித்தவர் பலப் பலர், மாற்றுக் கட்சிகளிலே! நாம் அப்போதெல் லாம் அவர்களுக்குப் பலமுறை பதில் சொல்லி வந்

திருக்கிறோம்; "ஒரு சீட்டுத்தான் கிடைக்கட்டுமே! அந்தச் சீட்டு காமராசரைக் கதிகலங்கச் செய்யும் துருப்புச் சீட்டாக இருக்கும்" என்று! அந்த முறையில்தான் நாம் பதினைந்து இடங்களைப் பெறும் நல்ல சூழ்நிலையைத் திராவிடப் பெருங்குடி மக்கள் ஏற்படுத்தினர்கள். பலப்பல எதிர்ப்புக்கு மிடையே—சூருவளி எதிர்ப்புப் பிராசார எதிர்ப்புக்கு மிடையே—பண வெள்ளத்திற்கு மிடையே—படை பலத்திற்கு மிடையே—நமக்கு அபரிமிதமான வெற்றியை அளித்திருக்கிறார்கள்.

நாம் தேர்தலில் ஈடுபட்ட நேரத்தில் நம்மை ஆளுங் கட்சியாகிய காங்கிரசு மட்டுமா எதிர்த்தது? கம்யூனிஸ்டுகள் கச்சை கட்டிக்கொண்டு 'காங்கிரசு வென்றாலும் பரவாயில்லை; திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக அமர்வதற்கு விடக்கூடாது" என்ற காரணத்தால் பலமான எதிர்ப்பை—தாக்குதலை பத்திரிகை மூலமும்—பிரச்சாரம் மூலமும், சில இடங்களில் செயல் மூலமும் செய்து காட்டினர்கள். சோஷலிஸ்டுக் கட்சியினர் எந்தெந்த முறையில் நமக்குத் தீங்கிழைக்க முடியுமோ, அந்தந்த விதங்களில் எல்லாம் நமக்குத் தொல்லை தந்தனர்; பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினர் எப்படியெல்லாம் நம்மோடு ஒத்துழையாமை இயக்கம் நடத்த முடியுமோ அப்படியெல்லாம் இன்னல், அல்லல்களைத் தந்தார்கள். தமிழரசுக் கழகத்தினர் இப்படியும், அப்படியும் பேசி, எப்படியும் நம்மை ஒழித்துவிட வேண்டும் என்பதற்காக மட்டுமே போராடி வந்தார்கள். இவர்களுக்கு எல்லாம் ஒருபடி உயர்வாக, நம்முடைய அரும்பெருந் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களும், அவர்

களுடைய குடிபடைகளும் நம்மை அழித்து ஒழித்து விட வேண்டுமென்று மிகமிகத் தீவிரமாகக் கவனம் செலுத்தினர்கள். இவ்வளவு எதிர்ப்புகளையும் சமாளித்து–பெரியார் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்களே, திராவிடர் கழகந்தான் எதிர்நீச்சல் போடும் இயக்கம் என்று; அந்த நிலைமாறி எதிர்நீச்சல் போடுகிற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகந்தான் என்ற நிலை நாட்டிலே ஏற்பட்டது.

இன்று காங்கிரசு உயர்ந்திருப்பதாகத் தோன்றலாம்; குறிப்பாக அதன் இன்னாறயத் தலைவர் காமராசரும் உயர்ந்திருப்பவராகத் தோன்றலாம்; வெற்றிபோதையிலே–ஜெயமடைந்திருக்கிற நிலைமையிலே "நாங்கள்தான் இந்த நாட்டுப் பெரியகட்சி" என்றும் சொல்லிக்கொள்ளலாம்; பெரும்பாலான மக்கள் எங்களைத்தான் ஆதரித்தார்கள் என்றும்கூறிக் கொள்ளலாம். காமராசரா? அவர் அண்ணுத்துரையை விட உயரமானவர்! காமராசரா? நெடுஞ்செழியனை விட மதிப்பு வாய்ந்தவர்! என்று காமராசரே கூட எண்ணிக் கொண்டிருக்கலாம் அவரது ஆதரவாளர்களும் கருதிக் கொண்டிருக்கலாம். ஆனால், காமராசருடைய அந்த உயரம் எத்தகைய உயரமென்பதை நாமும் மறந்துவிடவில்லை; நாடும் மறந்துவிட முடியாது. நாம் பொய்க்கால் குதிரை ஆட்டக்காரர்களைப் பார்த்திருப்போம். மாலை ஐந்து மணிவரை அவனது உயரம் ஐந்து அடிகள்தான் இருக்கும். அதற்குப் பிறகு அவன் இரவெல்லாம் ஏழடி உயரமாகத் தோன்றுவான். அவனுக்கு எப்படி வந்தது அந்த உயரம்? இரவு நேரத்தில் அவன் புரவி ஆட்டம் செய்வதற்கு முன்பாக, குதிரையைத் தன் உடலோடு

கட்டிக்கொள்ளும் நேரத்திலே இரண்டடி உயரக் கட்டைகளையும் இரு கால்களிலும் கட்டிக்கொள்ளுவான். ஆட்டம் முடியும்வரை அவன் பார்ப்பவர்களுக்கு உயரமாகத்தான் தென்படுவான்,

அதைப்போலவே தான் காமராசர் என்ற இந்தப் புரவி நாட்டியக்காரர் தன்கால்களில் திராவிடர் கழகம் என்ற உயரமான கட்டைகளைக் கட்டிக்கொண்டிருக்கின்ற காரணத்தால் தான் உயரமாகத் தென்படுகிறார் இரவு புரவி நாட்டியம் நடைபெறுகிறவரை தான்— நாட்டிலே இருள் சூழ்ந்திருக்கிற வரைதான்–அந்த இரண்டடி உயரமுந்தெரியும். காலையிலே உதய சூரியன் உதயமாகி விட்டதும், அந்தக் கால் கட்டு அகற்றப்பட்டு விட்டதும், நிச்சயம் அவர் தனது உண்மையான ஐந்து அடி உயரத்திற்குத் தணிந்துதான் தீருவார் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

காமராசர் தற்போது மீண்டும் சட்டசபைக் காங்கிரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். மீண்டும் முதல் மந்திரியாக ஆக்கப்படுகிறார். காமராசரது இந்தத் தலைமையைக் குறித்து எந்தப் பத்திரிகையும் மகிழ்ச்சி யடையாத அளவுக்கு, இன்றைய தினம் காங்கிரஸ்காரர்களின் ஒரே தேசீய ஏடாக இருக்கிற 'விடுதலை' மகிழ்ச்சியைக் கொட்டுகிறது. ஏதோ பெரியார் அவர்கள் தான் இந்த நாட்டு முதல் மந்திரியாக ஆகிவிட்டாரோ என்று எண்ணக்கூடிய அளவுக்கு, திராவிடர் கழக ஏடுகளும் – தொண்டர்களும் – தலைவர் என்று சொல்லப்படுகிற சிலரும் பூரிப்படைகிறார்கள் ; பெருமிதத்தால் புலம்புகிறார்கள்.

காமராசர் எத்தகைய தகுதியால் மீண்டும் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பதை நாம் சொல்லா விட்டாலும் – திராவிடர் கழகத் தோழர்கள் உணரா விட்டாலும் – அல்லது உணர்ந்து வெளியிட மறுத் தாலும் – காமராசரின் சட்டசபைக் கட்சிக் கூட்டத் தின் போது கடவுள் வணக்கம் பாட வந்த அம்மை யார் – சௌந்திரம் ராமச்சந்திரன் என்பார் வெகு அழகாக காமராசரைக் கிண்டல் செய்வதன் மூலம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். பாடவந்த இடமோ காங்கிரசுக் கட்சிக் கூட்டம். பாடுவதோ காங்கிரசுக் கட்சி எம். எல். ஏ., என்ன பாடி இருக்கவேண்டும்? எவ்வளவோ கடவுள் வணக்கப் பாடல்கள் இருக்கின் றனவே! வேறு பிள்ளையார் வாழ்த்தும் இருக்கிறது.

" பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றுந் தா "

இதைப் பாடியிருக்கலாம்! ஆனல், பாடவில்லை. " ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ....." என்று துவங்கும் சரஸ்வதி தோத்திரம் இருக்கிறது; பாடி யிருக்கலாம். ஆனல் அதையும் பாடவில்லை. அல்லது தேவாரத் திருப்பதிகங்களில் ஒன்றைப் பாடியிருக்க லாம்; அப்படியும் பாடவில்லை. இவை அனைத்தை யும் விட்டுவிட்டு – எப்படியாவது காமராசரைக் கிண் டல் செய்யத்தான் வேண்டும் என்ற எண்ணத்தால் அந்த அம்மையார், " கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே " என்று பாடினர்கள். படித் தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் சந்தோஷ

மளிக்கும் சந்தோஷமே" என்று பாடினர்கள். "ஏ சட்டசபையே! சட்டசபைக் கட்சியே! சட்டசபை காங்கிரசு மன்றமே! நீ படித்தவருக்கும், படிக்காத வருக்கும் களிப்பைத் தருகிறாய்" என்ற பொருளில் காமராசர் கிண்டல் செய்யப்பட்டிருக்கிறார். இந்த விதமாக காமராசர் மீண்டும் முதல் மந்திரியாக முடி புனைந்து திராவிடத்தை – தமிழகத்தை – திராவிடப் பெருங்குடி மக்களின் அபிப்பிராயத்துக்கு விரோத மாக – அவர்களின் நலனுக்குப் பாதகம் தரக்கூடிய வகையில் – ஆட்சிச் சக்கரத்தைக் கையிலேந்தி யிருக் கிறார். உண்மையில் ஜனநாயகக் கோட்பாடுகளில் நம்பிக்கை வைத்திருப்பவர்களும், ஜனநாயக உரிமை களை மதிப்பவர்களும், தேர்தல் எப்படி நடக்க வேண்டும் என்று கருதுகிறார்களோ அவர்களும், அரசியல் தெளிவு படைத்தவர்களும், அரசியல், அதிகார மூலபலமின்றி – உருட்டலும் மிரட்டலு மின்றி நடைபெற வேண்டும் என்று கருதும் உத்தமர் களும், நல்லவர்களும் அறிவார்கள். இன்றைய தினம் அமைகின்ற ஆட்சி – காமராசர் தலைமையிலே அமை கின்ற ஆட்சி எந்த அளவிலும் இந்த நாட்டை ஆளும் சக்திபெற்றதல்ல என்பதை !

காமராசரது தலைமையிலே நூற்றைம்பதுபேர் கள் இருக்கிறார்களே ! நீங்கள் பதினைந்துபேர்கள் தானே ! என்று கேலிபேசும் நமது பங்காளிகள் – நம் குடும்பத்துச் சகோதரர்கள் – எப்படி யெல்லாம் கெக் கலிப்புக் கொட்டுகிறார்கள் ! என்னென்ன பாராட்டு கள் ! நுங்கம்பாக்கத்திலே பாராட்டாம் ஆசைத்தம்பிக் கும், கருணைநிதிக்கும் ! காஞ்சியிலே – மதுரையிலே பாராட்டாம் அண்ணாத்துரைக்கு ! சம்பத்துக்குப்

பாராட்டாம்! என்று கிண்டலும் கேலியும் கலந்து பேசுகிறார்கள். நான் சொல்கிறேன் அந்த நூற்றைம் பது பேர்களையும் தராசின் ஒரு தட்டிலே வைத்து, மறு தட்டிலே அறிஞர் அண்ணை அவர்களை மட்டுமே வைத்தால் என்ன நடக்கும்? எந்தப் பக்கத்து தட்டு தாழும்? எந்தப் பக்கத்திலே நிறை அதிகம் இருக் கும்? நான் சொல்லத் தேவையில்லை. அதை இந்த நாட்டு நீதிமன்றம்–மக்கள் மன்றம்–இந்த நாட்டுக்கு நல்லதொரு எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சக்தி பெற்ற வாக்காளர் பெருமக்கள் நன்கு உணரமுடி யும்! அத்தகைய பீடும் பெருமையும் பெற்ற—வெற்றி பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைய தினம் தென்னகத்தின் வழிகாட்டியான அறிஞர் அண்ணை அவர்களை சட்ட மன்றத்திற்கு அனுப்பி வைக்கிறது! அவருக்கு எதிர்கட்சி ஏடுகளெல்லாம் பராக்குக் கூறி வரவேற்கின்றன. "வருக வருக! தலைவனே வருக! தமிழே வருக! அரசியல் விற்பன் னரே வருக! வித்தகனே–உத்தமனே வருக! வருக!! என்று வாழ்த்தி வரவேற்பு நிகழ்த்தும் அளவுக்கு நம் தலைவனை சட்டசபைக்கு அனுப்புகிறோம். துணைக்கு நாங்கள் சிலரும் செல்லுகிறோம். நாங்கள் சட்டசபை யில் அமரப்போகிற அந்தக்காட்சியை—அந்த ஆனந் தத்தை தாயும் தந்தையும் எப்படிக் கனவுகண்டு அனுபவிப்பார்களோ, அதுபோல் தமிழகம் அனுப விக்கிறது. மணவறையில் மகனும், மகளும் உட்காரு கின்ற காட்சியைக் காணத்துடிக்கின்ற மாதாபோல பிதாபோல — அண்ணனைப் போல — சொந்தக்காரர் களைப் போல—பந்தம் பாசம் உள்ளவர்களைப்போல– தமிழகம், அறிஞர் அண்ணை அவர்கள் சட்டசபையில்

உட்காரப்போகும் சிங்காரத்தை—எழுப்பப் போகின்ற போர்க்குரலை—விவாதத்தை—நாட்டுக்கு நலன் பயக்கும் உரையாடல்களை அள்ளியள்ளிச் சுவைக்க-அதன் பயனுய் நாட்டுக்கு நேரப்போகும் நலனைக் காணத் தமிழகம் துடிதுடித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் பதினைந்து பேர்கள் நம்மவர்கள். ஆகவே, பதினைந்து - நூற்றைம்பது என்ற அளவை மட்டும் கவனித்து – திராவிட முன்னேற்றக் கழகம் வலுவிழந்து விட்டது என்று கணக்கிட்டுவிட முடியாது. நீங்கள் கதை ஒன்று கேள்விப்பட்டிருக்கலாம். ஒருவர் தன் இருபிள்ளைகளின் மூளை பலத்தையும் சோதிக்கக் கருதினராம். இருவரையும் அழைத்து, ஒவ்வொருவருக்கும் பத்து ரூபாய் தந்தார்; தனித் தனியாக இரு அறைகளையும் காட்டினர்; " நீங்கள் இருவரும் இந்தத் தொகையில் ஏதேனும் பொருள் வாங்கி உங்களது அறையை நிரப்ப வேண்டும் – கவனியுங்கள் – அறை நிறைய அப்பொருள் இருக்க வேண்டும்" என்று ஆணையிட்டார்.

ஒருவன் – சிந்திக்கும் பண்பு படைத்த நல்லவன் கடைத்தெருவுக்குச் சென்றான். விளக்கு ஒன்றை வாங்கி, எண்ணெய் ஊற்றி, திரியிட்டு, ஒளியேற்றி அறையினுள் வைத்தான். அறை முழுதும் ஒளி எழுப்பினன். ஜோதிமழை பொழிய வைத்தான்.

மற்றவனே பகுத்தறிவு அற்ற பிள்ளை – தன் அறையில் பத்து ரூபாய்க்கும் வைக்கோல் வாங்கி அடைத்து வைத்தான்.

தந்தை வந்தார்; பார்த்தார், இரண்டாமவனது அறையை. 'அட! முட்டாளே! இதற்கா நான்

பணம் தந்தேன்? இவ்வளவு தானு உன் புத்திசாலித் தனம்?" என்று தலையிலடித்துக் கொண்டு முதல் வனின் அறைக்குச் சென்றார். அங்கே அறை முழு தும் பரவிநின்ற ஒளி மழையைக் கண்டு வியந்தார்; அம்மகனின் அற்புதத் திட்டத்தை எண்ணிக் களித் தார்.

அதைப் போலத்தான் அறை முழுதும் தீபமளிக் கும் விளக்குபோல—தென்னகம் முழுதிற்கும் ஒளி தரும் திருவிளக்காகத் தோன்றுகிறார் நமது அறிஞர் அண்ணா அவர்கள். அப்படியானால் மறு அறையிலே அடைக்கப்பட்ட வைக்கோல் யாருக்குப் பொருந்தும் .....? நான் சொல்லத் தேவை இல்லை; நீங்கள் அரசியல் அறிவு படைத்தவர்கள்; புரிந்து கொள் வீர்கள்!

இந்த நிலையில் தென்னகத்து ஒளி விளக்காக— தமிழகத்து இருள் போக்க வந்த உதய சூரியனாக— சட்ட மன்றம் முழுதும் ஒளி பரப்புகின்ற தீபத்தை— தமிழகத்துத் தலைவனை—தென்னகத்து வழி காட் டியை—திராவிடப் பெருங்குடி மக்களின் சாதனையைச் சட்ட மன்றத்துக் கனுப்புகிறோம். என்றென்றும் தொண்டு செய்தே பழக்கப்பட்ட நாங்கள் சிலரும் உடன் செல்லுகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலோடு தன் வேலை முடிந்து விட்டதென்று கருதும் இயக்கமல்ல; இனி ஐந்து ஆண்டுகள் கழித்துத்தானே வேலை!" என்று வாளாவிருந்து விடாது. திராவிட முன்னேற் றக் கழகம். தேர்தலுக்கு மாத்திரம் முளைத்த கட்சி யல்ல! எட்டு ஆண்டுகளுக்கு முன் நாம் தோன்றிய

நேரத்தில், இப்படி வளருவோம், வனப்போடும் வலி வோடும் நாட்டிலே நடைபோடுவோம் என்று கிஞ் சிற்றும் நினைக்கவில்லை. இதே சென்னை மாநகரத் திலேதான் அறிஞர் அண்ணு அவர்களும் நாமும் மழையோடு போட்டி போட்டு, கண்ணீர் சிந்திக் கொண்டு பெரியார் இராமசாமி அவர்களிடமிருந்து பிரிந்தோம். அறிஞர் அண்ணு அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்களே, அது போல துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு புறப்பட்டோம்." இந்த நாட்டுக்குத் தொண்டாற்றப்பட வேண்டியவர்கள் துரத்தப்படுகிறோம். அதுவும் தந்தையின் வீட்டி லிருந்தே விரட்டப்படுகிறோம். சாதாரணமாக அல்ல; நமக்குரிய பங்குத் தொகையான ஐந்து லட்ச ரூபாய் களை விட்டு விட்டு—அதைவிடச் சிறப்பு வாய்ந்த— விலை மதிப்பற்ற மாணிக்கமான தந்தை பெரியார் அவர்களையே பிரிகிறோம், கொள்கைக்காக; லட்சியத் துக்காக"—என்ற நினைவோடு இந்த நாட்டிலே நம் இதய கீதத்தை முழக்கிக்கொண்டு பிறந்தோம். பிறந்த எட்டு ஆண்டு காலத்தில்–வந்ததும வராதது மாகத் தேர்தலில் குதித்து விடவில்லையே நாம்! எட்டு ஆண்டு காலம் ஜனநாயக ரீதியிலே இயக்கத்தின் அரசியல் வாழ்க்கையை நல்ல முறையிலே வளர்த் துக்கொண்டோம். அந்த நேரத்தில் நமக்கு அர சாங்கம் தந்த தொல்லைகள் — எதிர்க் கட்சியினர் தொடுத்த தாக்குதல்கள் எவ்வளவு என்பதை இந்த நாடு மறந்தாவிட்டது? அப்பப்பா! எட்டாண்டுகள்! எத்தனைத் துன்பச் சுமைகளைத் தாங்கிக் கொண் டோம்! அந்த எட்டாண்டு காலத்தில்தான் வட சென்னை பாண்டியனைப் பலி கொடுத்தோம்!—

நெல்லிக்குப்பம் மஜீதை இழந்தோம் — லால்குடி நடராசனை துப்பாக்கிக் குண்டுகளுக்கு உணவாக்கினேம் — நம் அருமைத் தங்கம் கே. வி. கே. சாமியை இழந்து தவித்தோம் — அந்த எட்டாண்டு காலத்திலேதான் பலருடைய கரங்கள் இழக்கப்பட்டன. கண்கள் கொத்தப்பட்டன. அங்கங்கள் அறுத்தெறியப்பட்டன! இத்தகைய சித்ரவதைகளை—சிறைச் சாலைக் கொடுமைகளை—அடக்குமுறை அக்ரமங்களை—ரத்த பலிகளை—உயிர்களை—தத்தம் செய்து வளர்த்த கழகம்—இவ்வளவுக்கும் பிறகு இன்றைய தினம் தேர்தலில் ஈடுபட்டு பதினைந்து இடங்களைக் கைப்பற்றியது என்றால் முதன் முதல் புன்னகை காட்டி, பொங்கிவரும் ஆர்வத்தால் நம்மை அணைத்து மகிழ வேண்டிய பெரியார் அவர்கள் "அழிய மாட்டார்களா இவர்கள்?" என்று அலறுகிறார் என்றால்—உள்ளபடியே தாய்மார்களின் பாஷையிலேயே சொல்லப் போனால் இது நம்முடைய போதாத காலம்தான்; தூர்ப்பாக்கிய நிலைதான்.

உச்சி முகர்ந்து, "உத்தமர்களே! என்னைவிட்டுச் சென்றவர்களே! ஆனாலும் உழைக்கவே பிறந்தவர்களே! நான் எந்தக் கொள்கையை நாட்டிலே சொல்ல வந்தேனோ அதை என்னைவிட அழகாகச் சொன்ன தம்பிகளே! மாணவர் பட்டாளத்தை ஈர்த்தவர்களே! மக்கள் பெருங் கடலைச் சேர்ந்தவர்களே! உங்களை வாழ்த்துகிறேன்! வாழ்த்துகிறேன்" என்று சொல்ல வேண்டிய தந்தை "வளர விடுகிறேனா பார்! அழித்து ஒழிக்காமல் உட்காருகிறேனா பார்!" என்று சொல்லுகிறார்; சீறிப் புறப்படுகிறது அவரது பட்டாளம்! காமராசருடைய வெற்றி குறித்து காங்கிரசு

வட்டாரம் மகிழ்வதைவிட திராவிடர் கழகத்தினர் தானே கொண்டாடிக் குதூகலிக்கிறார்கள்.

சென்ற இரண்டு ஆண்டுகளுக்குமுன் எந்தக் கொடியைக் கொளுத்த வேண்டும் என்று தீர்மானித் தார்களோ, அதே கொடியோடு இன்று திராவிடர் கழகக் கொடியும் பின்னிக்கொண்டு பறக்கிறது என்றால், இதை வேடிக்கை என்று சொல்வதா? வேதனை என்று அழைப்பதா?

திராவிடர் கழகக் கொடி, நாம் கரத்திலே தூக்கிய கொடிதான்! அறிஞர் அண்ணா அவர்களும் மற்றவர் களும் பல இடங்களிலே — பட்டி தொட்டிகளிலே ஏற்றி, ஏற்றி மகிழ்ந்த அந்தக் கொடி இன்றைய தினம் காங்கிரசிடம் "சோரம்" போகும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அந்தக் கொடி காங்கிரசுக் கொடி யோடு இணைந்து—பிணைந்து நின்று—ஏற்றி வைத்த நம்மையே பழி தீர்த்துக்கொள்ள—அழித்து விடுவ தற்குப் பாடுபடுகிறது என்றால், இத்தகைய வேத னையை எந்த நாட்டுச் சரித்திரத்திலும் கண்டிருக் கவோ, கேட்டிருக்கவோ முடியாதே!

இன்னும் சொல்லப் போனால், இன்றைய திராவி டர் கழகக் கொடிக்கு உருவம் அமைத்துக் கொடுத்த திலே என்னுடைய பங்கும் இல்லாமலில்லை நான் அப்போது 'குடியரசு' எட்டிலே துணை ஆசிரியனாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். கழகத்தின் கொடியை எப்படி அமைப்பது என்று யோசித்துக் கொண்டிருந்த நேரம்—அநேக மாதிரிகள் அலுவல கத்திற்குக் கிடைத்திருந்தன. நானும் அலுவலக

நண்பர்கள் சிலரும், இன்று அந்த இயக்கத்திலே இருக்கும் சிலரும் கொடிக்கு என்ன அமைப்புத் தரலாம் என்று யோசித்துக்கொண்டே யிருந்தோம். இரவு பனிரெண்டு மணிக்கு மேலாகி விட்டது. பெரியார் அவர்கள் மாடியிலே காத்துக்கொண்டிருந் தார்கள். கடைசியில் கொடிக்கான உருவம் ஒன்றை யும் முடிவு செய்து விட்டோம்! கையிலே கருப்பு மை இருந்தது. அதைக் கொண்டு கருப்பு நிறத்தை வரைந்து விட்டோம். நடுவிலே வட்டமாக சிகப்பு வைத்தாக வேண்டும். என்ன செய்வது? அலுவலக நிர்வாகியோ அறையைப் பூட்டிக்கொண்டு போய் விட்டார். அந்த நேரத்தில் நான் அவசரம் அவசர மாக கை விரலில் காயம் உண்டாக்கி — இரத்தம் எடுத்து — அதை கொடிக்கான சிகப்பு நிறமாக வைத்து – பெரியாரிடம் கொண்டுபோய்க் காட்டி னேன். இதுதான் நமது கொடியென்று அறிக்கை யும விட்டார்கள் பெரியார் அவர்கள் அந்தக் கொடிதான் இன்றும் திராவிடர் கழகக் கொடியாகப் பறக்கிறது!

அந்தக் கொடிதான் – கருணநிதியின் கட்டை விரல் இரத்தத்திலேயிருந்து சிகப்பு எடுக்கப்பட்ட அதே கொடிதான் – கருணநிதியை ஒழித்துவிட குளித்தலையிலே பறந்த்து என்ருல் உள்ளபடியே நாம் கண்ணீர்விடாமலிருக்க முடியுமா ?

என்ன பேச்சு ! எவ்வளவு கேவலமான தாக்கு தல்கள் ! எத்தனை மோசமான கணைகள் ! அவ்வள வையுந் தாங்கிக் கொண்டுதான் நாம் பல இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறேரும். பதினைந்து இடங்கள்

தானென்றூலும், நாம் அமைத்திருக்கிற கிளைக்கழ கங்கள் கொஞ்ச நஞ்சமல்லவே! திருவல்லிக்கேணி கடற்கரையிலே நடைபெற்ற தலைமைக் கழகப் பாராட்டுக் கூட்டத்தின் போது நான் சொன்னேன், நான் குளித்தலைத் தொகுதியில் இருபத்திரண்டா யிரம் வோட்டுகளை மட்டும் பெறவில்லை. இருநூறு கிளைக் கழகங்களையும் பெற்றுவந்திருக்கிறேன்" என்று, குளித்தலையிலே நான் முதன் முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அபேட்சகனாக நுழைந்தபோது ஏழே ஏழு கிளைக் கழகங்கள்தான் இருந்தன. – அந்தத் தொகுதி முழுதிலுமே! ஆனால் இன்றைய தினமோ – இந்தக் குறுகியகால இடை வெளியில் இருநூறு கிளைக்கழகங்கள் அமைகின்ற நிலை எப்படி வந்தது? வெள்ளியணை யென்ற பகுதி யொன்று திராவிட முன்னேற்றக் கழகம் என்றூலே என்னவென்று புரியாத மக்கள் நிறைந்த இடம் 'அண்ணு' என்றூல் அவரதுபடத்தைக் காட்டி;– அவர் எழுதிய எழுத்துக்களை எடுத்துக்காட்டி; – பேச்சைப் படித்துச் சொல்லி "இவர்தான் அண்ணு "என்று கூறு கிற நிலைமை இருந்த இடத்தில் இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளை திறக்கப் படுகிறது என்றூல், சாதாரணமாக அல்ல; மூன்று நாட்களில் ஒரு சிறு கட்டடம் அமைத்து முடித்து – அந்தச் சொந்தக் கட்டடத்திலேயே திறப்பு விழாவும் நடைபெறுகிறது என்றூல், இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பரவாத இடங்களில் எல்லாம் பரவி விட்டது என்பதை யார்தான் மறுக்க முடியும்? வெற்றிபெற்ற பகுதி – தோல்வி கண்ட பகுதி எங்குமே இத்தகைய வளர்ச்சி கண்டு விட்டது.

இதுதான் இந்தத் தேர்தல் பிரவேசத்திலுல் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்த பெரிய லாபம்! இது சாதாரணமாகப் பெறக்கூடிய லாபமல்ல! எட்டு ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய சேவை – போராட்டம்–மக்களிடம் கொண்டிருந்த தொடர்பு – இவைகளின் விளைவு!

தேர்தல் முடிவுகளை வைத்துக்கொண்டு, நாம் அபரிமிதமான வாக்குகள் பெற்றும், சிற்சில இடங்களில் தோற்றுவிட்டதை விரிவாக்கி–நம்மைத் தாக்குகிறார்கள்! நாம் வெற்றிபெற முடியாதுபோன இடங்களில் காங்கிரசு பெற்ற வெற்றி எத்தகையது என்பதை நினைவுபடுத்திப் பார்க்கவேண்டுகிறேன். சென்னையிலே டி. டி கிருஷ்ணமாச்சாரி வென்றார் என்றால் எப்படி வென்றார்? தோழர் பி. பால சுப்பிரமணியம் அவர்கள் பத்தாயிரம் வோட்டுகள் அதிகமாக இருக்கிறார் என்ற செய்தி ஒன்றரை நாள் காட்டுத்தீ போல நாடெங்கும் பரவி இருந்தது. சென்னை நகரமே திரண்டு வாக்குகளை எண்ணுகிற இடத்தில் கூடியிருந்தது ஏறத்தாழ இரண்டு நாட்கள் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் – இந்தியத் துணைக் கண்டத்தின் நிதிமந்திரி – புனுகுப் பூனையைப்போல தன் வீட்டுத்தாழ்வாரத்திலே சுற்றிசுற்றி – தேடாத தெய்வங்களையெல்லாம் தேடி–செய்யாத பிரார்த்தனையெல்லாம் செய்து – நிலைதடுமாறி–தத்தளித்து நிற்க முடியாமல் – அங்கும் இங்கும் உலாவிக்கொண்டிருந்தார் என்றால், அப்படி அவரை உலாவ வைத்த பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கே உண்டு என்பதை யார் மறுக்கமுடியும்?

அதே நிலைமையில்தான் இராமசாமி படையாச்சி யாரும் வென்றிருக்கிறார். அவர் மந்திரி – ரத, கஜ, துரக பதாதிகள் உண்டு. எதிர்த்து நின்ற தோழர் கிருஷ்ணமூர்த்தி மாணவர் – ஓட்டை உடைசல் பித்தளையைச் சார்ந்தவர்! அங்கே பணபலம் உண்டு. இங்கே குணநலம் மாத்திரமே உண்டு. அங்கே படை வரிசை ஏராளம். இங்கே தடை மிக அதிகம். இந்த நிலைமையிலும் மயிரிழையிலேதான் தப்பியிருக்கிறார் இராமசாமி படையாச்சியார்! இதற்கு என்ன பொருள்? ஒரு மந்திரியை ஒருநாள் இரவு முழுவதும் கூண்டுப் புலியைப்போல உலவவிட்ட பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கே உண்டு என் பதை யார்தான் மறுக்க இயலும்?

இந்த அளவில் பொதுத் தேர்தலில் நாம் பெற் றிருக்கிற வெற்றி — அடைந்திருக்கிற அனுபவம் — செய்ய இருக்கிற தொண்டு — இவை அடுத்த தேர்த லில் நமக்கு எப்படிப் பயன்படப் போகிறது என்ப தைச் சற்று உருவகப்படுத்திப் பாருங்கள்! இன்று கேரளம்! நாளை தமிழகம்! ..... காங்கிரசில்லாத மந்திரிசபை; ஏன் அமைய முடியாது? அதற்கான சூழ்நிலைதான் இன்று நாட்டிலே அரும்பியிருக்கிறது. நாம் நம்கோரிக்கைகளை மக்கள் மன்றத்திலேவைத்து — பணிகளை விளக்கி — கொள்கைகளை எடுத்துச் சொல்லி தொண்டுகளை விவரித்து வோட்டுகள் பெற் றேரும். அப்படி வாக்குகள் பெறுவதற்கு தந்தவாக்கு களைக் காற்றிலே பறக்கவிட்டு விடமாட்டோம்! பத வியே பெரிதென்று இருந்துவிடமாட்டோம். பெரியார் அவர்கள் சொல்வதுபோல நூற்றைம்பது ரூபாய் பணத்துக்காக அல்லவே நாம் சட்டமன்றம் செல்வது?

ஆசைத்தம்பி உங்கள் பிரதிநிதியாகச் சட்ட மன்றத்துக்குச் செல்ல விரும்பியது எதற்காக? அவர் இந்தத் தொகுதியில் சுற்றிய இரண்டுமாத காலத்தில் — இரண்டு வாரங்கள் மட்டுமே உட்கார்ந்து இரண்டு கதைகள் எழுதியிருந்தால் ஆயிரக்கணக்கிலே சம்பா தித்திருக்க முடியும்! அதைப் போலத்தான் அறிஞர் அண்ணு அவர்களும், நானும், மற்றத் தோழர்களும் நினைத்தால் நாட்டுப்பணியை மறந்து நிறைய சம்பா தித்திருக்கலாம். "பர்மிட்டுகள்; லைசென்சுகள்" வழங் கியல்ல. மூளையை உருக்கி — சிந்தனைகளைத் தேக்கி! கடற்கரையிலே — கனி குலுங்கும் சோலையிலே — எங்களது வீடுகளிலே அல்ல; இயற்கையின் தாழ் வாரத்திலே அமர்ந்து பட்டி தொட்டிகளிலே உள்ள தோட்டங்களிலே அமர்ந்து — இயற்கை வழங்கு கின்ற வனப்புகளை கவிதைகளாக — கதைகளாகத் தீட்டினேமானால் — இந்த நூற்றைம்பது அல்ல, நிறையப்பொருள் சேர்க்க முடியும். "விடுதலை"யின் கணக்குப்படி — பெரியாரின் கணக்குப்படி! இன்னும் சிலர், இருதயத்தை எங்கோ எடுத்து வைத்துவிட்டுச் சொல்லுகிறார்கள், அறிஞர் அண்ணு அவர்களும்; ஆசைத்தம்பியும்; நானும் வெற்றிபெற்றது சினிமா வினால்தான் என்று— சினிமாவினால் பெற்ற செல்வாக் கினால்தான் என்று. நான் அவர்களுக்கு அறைகூவல் விட்டுச் சொல்லுகிறேன், நாங்கள் பெற்ற வெற்றி சினிமாவால் அல்ல! ஏனெனில் நாங்கள் கலையுலகத் திலிருந்து அரசியலுக்குத் தாவியவர்களல்ல அரசி யல் உலகிலே அடி உதைகள் பட்டு — கல்லடியும் — சொல்லடியும் பெற்று — பல ஆண்டு காலம் கட்சிக் காகத் தொண்டாற்றி — மக்களிடையே கொள்கை

களை எடுத்துச் சொல்லி — பெரிய பெரிய கலவரங்களிலே உயிரைத் திரணமாக மதித்துக் குதித்து—போராட்டங்களிலே நேரடியாகக் கலந்து—அதன் காரணமாக அண்ணுவுக்கும், எனக்கும் சிறைத் தண்டனையும்—ஆசைத்தம்பிக்கு தலை ரோமத்தையே சர்க்கார் எடுத்துக்கொள்ளுகிற நிலைமைகள் எல்லாம் ஏற்பட—புதுச்சேரி சம்பவங்கள் குறுக்கிட—அரசியல் துறையிலிருந்தும், சமுதாயத் துறையிலிருந்தும் எடுத்துச் சொல்லுகிற கருத்துக்களை, கலைத்துறை மூலமாகவும் எடுத்துச் சொல்லலாம்; அதற்கு அங்கி ருந்து கைலாகு கொடுக்கிறார்கள்; அதுவும் நாங்க ளாகச் செல்லவில்லை. "வருக, வருக" என்று இரு கை கூப்பி வரவேற்கிறார்கள் என்ற நிலை ஏற்பட்ட பிறகுதான் கலைத்துறையிலே அடியெடுத்து வைத் தோம். சென்றோம் சென்ற இடத்திலும் எங்கள் கருத்துக்களைச் சொல்லத் தவறவில்லை. அதற்காகப் போராடினோம். நிபந்தனைகள் போட்டோம் நாங்கள் எழுதிக் கொடுப்பதைத்தான் படமாக எடுக்க வேண்டு மென்று! அங்கே, கொள்கையை விலை கூறவில்லை.

நாங்கள் அரசியல் என்ற பாலைவனத்திலே நடக் கின்ற நேரத்திலே—இடையிலே ஏதோ நீரூற்றுகள் போலக்கூட இல்லை; கொஞ்சம் இளைப்பாற அங்கே நிற்கும் ஒட்டகத்தின் நிழலில் உட்காருவதைப் போலத்தான் கலையுலகத்தைக் கருதுகிறோமே தவிர, அங்கேயே ஐக்யமாகிவிடவில்லை! அங்கிருந்து சிலரை இழுத்துக் கொண்டுதான் வந்திருக்கிறோம்.

என் கலையுலகப் பயணத்தின் காரணமாக நமது புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் இயக்கத்

துக்குக் கிடைத்தார். அறிஞர் அண்ணு அவர்களால் நடிப்பிசைப் புலவர் இராமசாமி கிடைத்தார்.

இப்படி இயக்கத்தை அணு அணுவாக வளர்த்து வந்த நமக்கு, இப்போது நம்முடைய பாதை தெளிவாகிவிட்டது. விடி வெள்ளி உதயமாகிவிட்டது. அந்தப் பாதையிலே நடந்து, நமது இலட்சிய முகடை அடைய உங்களை யெல்லாம் அழைத்து என் நன்றியுரையை இத்துடன் முடிக்கிறேன். வணக்கம்.

(6-4-57 நுங்கம்பாக்கம்)

கட்டாணி முத்தெடுத்தோம்

அறிஞர் அண்ணு அவர்கள், " தம்பிகள் உங்களைச் சந்திப்பார்கள் ; அவர்களோடு உங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுங்கள் " என்று சொல்லி விட்டு, எங்களை உங்கள் முன்னிலையில் நிறுத்தி விட்டு, அவர்கள் வேறு கூட்டத்திற்குச் சென்று விட்டார்கள். அறிஞர் அண்ணு அவர்கள் சொற் பொழிவு ஆற்றிச் சென்ற பிறகும் எங்களுடைய கருத்துக்களைக் கேட்பதற்காக நீங்கள் இங்கே அமர்ந் திருக்கிறீர்கள் என்றால், உள்ளபடியே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைட கருத்துக்கள் கொள்கைத் திட்டங்கள் – யாரால் எத்தனை முறை திரும்பத்திரும்பச் சொல்லப்பட்டாலும், அது மக்கள் மன்றத்தால் வரவேற்கப்படுகிறது. அதற்குப் புதிய உற்சாகம் தரப்படுகிறது, என்பதைத்தான் நீங்கள் அமைதியாக இருந்து இந்தக் கூட்டத்தை வெற்றி கரமாக நடத்தித் வருவதின் மூலமாக எங்களுக்குப் புலனுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திலே, பதினைந்து பேர்கள் இன்றைய தினம் சட்ட மன்றத்திற்குச் சென்றிருக்கிறோம் என்பதும், அது இந்த நாட்டிலே இருக்கின்ற லட்சோபலட்ச மக்களால் பெரிதும் பாராட்டப்படுகிறது என்பதும் ; நாள் தவறினாலும் பாராட்டுக் கூட்டம் தவறுவதில்லை என்பதும் நீங்கள் அறிந்த ஒன்றாகும். நாம் வெற்றி பெற்றவர்களோ, பதினைந்து பேர்கள் தென்னாட்டுக்குப் புறம்பான கொள்கைகளை வைத்திருக்கின்ற காங்கிரசு இயக்கத்

தினரும் அவர்கள் பட்டியலைக் காட்டுகிறார்கள், பார்! பார்! நூற்றைம்பது பேர்கள் என்று, ஆனல் மக்க ளுடைய உற்சாகம் கலந்த வரவேற்பும், வாழ்த்தும் அந்த நூற்றைம்பது பேர்களின் பக்கத்தில் இல்லை. இந்த பதினைந்து பேர்களுடைய பக்கத்தில் தானிருக் கிறது.

நாள்தோறும் பாராட்டு விழாக்கள், நாங்களே அலுத்துக் கொள்ளுகிற அளவுக்கு, "போதுமய்யா! பாராட்டுவது." என்று நாங்களே கூறுகிற அளவுக்கு நடைபெறுகிறது. இந்தப் பதினைந்தைத் திராவிடம் எப்படிப் பெற்றிருக்கிறது? அந்த நூற்றைம்பதை அகில இந்தியா எப்படிப் பெற்றிருக்கிறது என் பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் நாம் மிகத் தொல்லைகளுக்கிடையே, மிக மிகக் கஷ்டத்திற் கிடையிலே சம்பாதித்தது இந்தப் பதினைந்து, ஆழ மான கடலில் மூச்சடக்கி, பலப்பல சுறுக்களுக் கெல் லாம் தப்பி நன் முத்துக்களை எடுத்ததுபோல பதினைந்து முத்துக்களை எடுத்திருக்கிறீர்கள் நீங்கள்! அவர்களோ இந்த முத்தெடுக்கிற கஷ்டத்தை அந்த நூற்றைம்பது பேர்களைப் பொறுக்குகிற நேரத்தில் அனுபவிக்கவில்லை.

தங்கச் சுரங்கத்திலே பாறைகளுக்கு இடையே, எந்த நேரத்தில் வெடித்திருக்கிற பாறைகள் திடீர் விபத்துக்காளாகித் தங்கமெடுக்கச் சென்றவன் இறந்து விடுவானே, அழிந்து விடுவானே, என்கின்ற கலக்கத்திற்கிடையே — உள்ளே நுழைந்த தொழி லாளி பாறைகளை வெட்டி — வெட்டப்பட்ட பாறை களிலே எந்த அளவுக்குத் தங்கம் கலந்திருக்கும் என்

கிற ஆராய்ச்சியிலே, ஈடுபடுவதற்குக்கூட நேரமில்லாமல், தங்கம் கலந்திருக்கின்ற அந்தப் பாறைகளை எடுத்துவந்து பிறகு அதை உருக்கி ஒன்றுக்கி, அதில் இருந்து எடுக்கின்ற தங்கத்தைப் போன்றது—இந்த திராவிடம் பெற்றிருக்கின்ற பதினைந்து.

ஆறுகடந்து—அதைத் தொடர்ந்து சேறுகடந்து—ஊறு பல கடந்து—தோட்டத்திலே புகுந்து, முள் நிரம்பிய செடியிலே இருக்கின்ற ரோஜாவை அழகான குமரியுடைய கரங்கள் பறிக்கிறதே; முள்ளுக்கும் அஞ்சாமல்—அப்படிப் பறித்த ரோஜாக்கள்தான் இந்தப் பதினைந்து.

ஆனால், இப்படிப் பறித்த ரோஜாக்கள் அல்ல அந்த நூற்றைம்பது. அவைகளெல்லாம் பணத்தால் வெற்றிபெற்ற ராஜாக்கள். ஆகவேதான் நூற்றைம்பது சுலபமாகக் கிடைத்தது அவர்களுக்கு. பணமிருந்தது; பத்திரிகை பலமிருந்தது; படை இருந்தது; அதிகாரமிருந்தது; அந்த அதிகாரத்தைப் பிரயோகிக்கின்ற ஆணவம் இருந்தது. இவ்வளவும் இருந்த காரணத்தால் அவர்கள் அதிக இடங்களைப் பெற்றார்கள். எப்போதுமே, சுலபமாகக் கிடைப்பதற்கு அவ்வளவு பாராட்டு இருக்காது. தேடித்தேடி அலுத்து, கஷ்டநஷ்டங்களை ஏற்று, வேதனைபுரியிலே பயணம் நடத்திக் கிடைப்பது இருக்கிறதே, அதற்கு அதிகமான பாராட்டு நிச்சயமாக இருக்கும். ஆகவேதான் நீங்கள் பாடுபட்டுத் தேடியதைப் பாராட்டுகிறீர்கள். பாடுபடாமல் வந்ததைப் பாராட்டுவதற்கு யாரும் தயாராக இல்லை.

நாம் சட்டமன்றத்திற்குச் சென்றிருக்கின்ற நேரத்தில், நம்மைச் சூழ்ந்திருக்கின்ற எதிர்க்கட்சித் தோழர்கள், பங்காளிகள், நம்மைவிட்டுப் பிரிந்தவர்கள், அல்லது அவர்களிடமிருந்து நாம் விடுவித்துக் கொண்ட நிலைமையிலே நமக்கும் அவர்களுக்கும் வேறு வேறு சூழ்நிலைகளில் அமைந்தவர்கள் — இவர்களெல்லாம் நம்மைப்பார்த்துக் கேட்கிறார்கள்; "சட்ட சபைக்குச் சென்றுவிட்டால் திராவிட நாடு கிடைத்து விடுமா?' என்று, இந்த நேரத்தில் மாத்திரம் அவர்கள் நம்மைப் பார்த்து இந்தக் கேள்வியைப் போடுகிறவர்களல்ல; நாம் எந்தக் காரியம் செய்தாலும் "இதைச்செய்தால் திராவிடநாடு கிடைக்குமா?" என்று கேட்டவர்கள்.

நாம் வேட்டி கட்டிக்கொண்டு வந்தால், "வேட்டி கட்டிக்கொண்டு வந்தால் திராவிடநாடு கிடைக்குமா" என்று கேட்பார்கள். சரி, வேட்டி வேண்டாம் கால் சட்டை போட்டுக்கொண்டு வருவோம் என்று வந்தால், "கால்சட்டை போட்டால் திராவிட நாடு கிடைக்குமா?" என்று கேட்பார்கள்.

கல்லக்குடி போராட்டத்திலே ஈடுபட்ட நேரத்தில் "கல்லக்குடியிலே போராட்டம் நடத்தி விட்டால் திராவிட நாடு கிடைக்குமா?" என்று கேட்டார்கள்.

கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம் நடத்திய நேரத்தில், "கல்வித் திட்டத்தை எதிர்த்து விட்டால் திராவிடநாடு கிடைத்துவிடுமா?" என்றுகேட்டார்கள்.

நேரு அவர்கள் நம்மையெல்லாம் பார்த்து "நான்சென்ஸ்" என்று கூறிய நேரத்தில், ரயில்

நிறுத்தப் போராட்டம் நடத்தியபோது, "ரயிலை நிறுத்தித் தண்டவாளத்தின்மேல் படுத்து விட்டால் மட்டும் திராவிட நாடு கிடைத்து விடுமா?" என்று கேட்டார்கள்.

திரையுலகத்தின் மூலமாக நமது அறிவுக்கருத்துக்களைப் பரப்பிய நேரத்தில் "ஒரு சில கருத்துக்களுக்கு இடங்கிடைத்த காரணத்தால் திராவிடநாடு கிடைத்து விடுமா?" என்று கேட்டார்கள்.

"சந்திரோதயம்"; "சந்திரமோகன்"; "வேலைக்காரி"; "ஓர் இரவு"; "மணிமகுடம்"; "தூக்குமேடை" "சர்வாதிகாரி"; "இலட்சியவாதி" போன்ற நாடகங்கள் நடத்தப்பட்ட நேரத்தில், அந்தப் படங்கள் வெளிவந்த நேரத்தில் "இவற்றுல் திராவிடநாடு கிடைத்து விடுமென்று கருதுகிறீர்கள்?" என்று கேலியாகக் கேட்டார்கள்.

இப்படி. நாம் எந்தக் காரியம் செய்தாலும் நம் கொள்கை நிறைவேறி விடுமா – என்று கிண்டல்பேசியவர்கள்தான் இன்றைய தினமும், சட்டமன்றத்திற்கு செல்லுகின்ற நேரத்திலும் அதே பாதையில் நின்று– அதே பாணியில் கேட்கிறார்கள்.

உள்ளபடியே நான் சொல்ல விரும்புகிறேன். வாழ்க்கையிலே நாம் அடிக்கடி காணுகிற நிகழ்ச்சிகள் மூலம்! காதலனும், காதலியும் சந்தித்து, ஒருவரையொருவர் கண்களால் பார்த்துக்கொள்ளும் நேரத்தில், அதை ஒரு விஷமக்காரன் கவனித்துவிட்டு, "இவர்கள் இருவரும் இப்படி அடிக்கடி கண்ணேடு கண்ணினை கலந்து காதல் புரிகிறார்களே அதனால்

இவர்களுக்குக் குழந்தை பிறந்து விடுமா ?'' என்று கேட்கிருன். பிறகு அடுத்த நிலேமை — இரண்டு வாரங்கள் கழித்து, அவர்களே கடற்கரையிலே, வெண் மணலிலே, வெள்ளி நிலவுக்குக் கீழே, அலேகளிலே தங்களுடைய கால்களே நனேத்துக்கொண்டு அமர்ந் திருக்கிற காட்சியைப் பார்க்கிருன் அவன்; அப்போது, ''இப்படி அலேகளிலே கால்களே நனேத்துக்கொண்டு, சீதள நிலவுக்குக் கீழே சிங்காரமாக அவளும்; ஒய்யார மாக அவனும் உட்கார்ந்திருந்தால் இவர்களுக்குக் குழந்தை பிறந்து விடுமோ ?'' என்று கேட்கிருன். பிறகு ஒரு நாள், தென்றல் வீசுகின்ற சோலேயிலே மந்தமாருதத்தை ரசித்தபடி அந்த மங்கையும் அந்த அழகனும் காதல் கீதம் இசைப்பதைப் பார்த்து, ''இவர்கள் இருவரும் இப்படிக் காதல் இசை பாடி விட்டால் மட்டும் குழந்தை பிறந்து விடுமா?'' என்று கேட்கிருன். அதற்கும் பிறகு அவர்கள் இருவருக்கும் திருமணம் நடைபெறுகின்ற அழைப்பிதழைக் காணு கின்ருன். அப்போதும்கூட ''இவர்கள் இருவருக்கும் திருமணம் நடந்து விட்டால் குழந்தை பிறந்து விடுமா?'' என்று கேட்கிருன். திருமணம் நடந்து முடிந்த பிறகு பெற்ருேர்கள் வைதீகர்களாக இருந் தால் நாள் நட்சத்திரம் பார்த்து; அல்லது காதலர் கள் அவசரக்காரர்களாய் இருந்தால் நாள் நட்சத் திரத்திற்கே நேரமில்லாமல்; பள்ளியறைக்குள்ளே புகுந்து விடும் நேரத்தில், வெளியே நின்று இவர்கள் பள்ளியறைக்குள் சென்றுவிட்டால் குழந்தை பிறந்துவிடவாபோகிறது?'' என்று கேட் கிருன். இப்படியே அவன் கேட்டுக் கொண்டேயிருந் தால் – அவன் ஏன் இப்படி அவர்களேச் சுற்றிக்

கொண்டேயிருக்கிறான் என்ற கேள்வி நமக்கு எழும். அதுமாத்திரமல்ல, பள்ளியறையிலே சென்றவர்கள் – பள்ளியறையிலேயே தான் பிரசவத்தை வைத்துக் கொள்ளுவார்கள் – என்று வழக்கம் கிடையாது. நீங்கள் அதே காதலர்களுடைய நிலையை – திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைமையோடு கொஞ்சம் இழுத்து வந்துபார்ப்பீர்களேயானால், நாம் கடற்கரையிலே சந்தித்தது போன்ற கல்லக்குடி போராட்டம் நடத்திய நேரத்திலே – திருமணப் பத்திரிகை அடித்துத் திருமணம் செய்து கொண்டதைப் போல-- நான்சென்ஸை எதிர்த்து ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்திய நேரத்தில், குழந்தை பிறந்துவிடுமா என்று கேட்டது போல – திராவிடநாடு கிடைத்து விடுமா? என்று கேட்டார்கள். இன்றைய தினம் பள்ளியறைக்குச் சென்றிருக்கிறோம் – சட்ட மன்றத்திற்குச் சென்றிருக்கிறோம். குழந்தை பிறந்துவிடுமா என்று கேட்கிறார்கள்! திராவிடநாடு கிடைத்துவிடுமா என்று கேட்கிறார்கள்! குழந்தை பிறக்கிற இடம் பள்ளியறையல்ல! அதைப் போலவே திராவிடநாடு கிடைக்கிற இடம் சட்ட மன்றம் அல்ல என்பதும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். குழந்தை பிறக்கிற இடம். பிரசவ அறை — அல்லது ஆபரேஷன் தியேட்டாக இருந்தால் ஆஸ்பத்திரிக்கு. அதுவும் திராவிடநாடு என்ற குழந்தை பிறப்பது அவ்வளவு சுமுகமாக இருக்காது — சுகப் பிரசவமாக இருக்க முடியாது! ஆகவே, பிரசவ அறையிலேதான் நடக்குமென்று நாங்கள் கருதமுடியாது. ஆபரேஷன் செய்து, அந்தக் குழந்தையை எடுக்கவேண்டிய நிலைமையிலே – இரத்தம் சிந்தவேண்டிய நிலைமை

யிலே கூட, அந்தக்குழந்தை பிறக்க நேரிடலாம். ஆகவேதான், அவசரக்காரர்களே! அவசரக்காரர் களே! கண்ணேடு கண்ணினை நோக்கக்கூடிய நேரத் திலே, நீங்கள் கேட்காதீர்கள் குழந்தை பிறக்குமா என்று. பிரசவ அறையை-ஆஸ்பத்திரியைப் பார்த்து விட்டு, தகதகவென தங்க நிறமாக ஜொலிக்கிற அந்த அழகான திராவிட நாடு குழந்தையைப்பார்த்து விட்டு, நீங்கள் கேட்பீர்கள் " திராவிட நாடு கிடைத்து விட்டால்கூட, திராவிட நாடு கிடைத்து விடுமா " என்று. அத்தகைய அரசியல் அப்பாவிகள்!

அவர்களுக்கு இடையே தான் திராவிட முன் னேற்றக் கழகம் எட்டாண்டு காலமாகத் தன்னுடைய நீண்ட லட்சியப்பயணத்தை நடத்தி வந்திருக்கிறது. அந்தப் பயணத்திலேதான், திராவிட நாடு கிடைப்ப தற்கான பலப்பல மார்க்கங்களிலே ஒன்றுகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் சட்டமன்றத்திற்குச் செல்லுகிறதே ஒழிய, சட்டமன்றத்திலே அறிஞர் அண்ணு அவர்களுடன் பதினன்கு பேர்கள் அமர்ந்து விடுகின்ற காரணத்தால், நம்முடைய லட்சியம் பூர்த்தி யாகி விட்டது என்றல்ல பொருள்.

1949-ஆம் ஆண்டு கண்ணீர்த்துளிகளுக்கு இடையே. கனத்த மழைக்கிடையே, அறிஞர் அண்ணு அவர்களுடைய வேதனை நிரம்பிய பிரசங்கத்துக்கு இடையே எழுந்த திராவிட முன்னேற்றக் கழகம், சட்டமன்றத்துக்குச் சென்றதும், தன்னுடைய கொள்கை, லட்சியம் நிறைவேறி விட்டது என்று — அந்த சரித்திரப் புத்தகத்தினுடைய கடைசி வரியை எழுதி முடித்து விட்டு நாங்கள் சட்டமன்றத்துக்குச்

சென்று விட்டோம் ஆகவே எங்கள் சரித்திரம் முற்றும் என்று அந்தப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு விடப் போவதில்லை அத்தகைய சட்டமன்றப் பிரவேசம், எங்களுடைய வரலாற்றில் விடுதலைச் சரித்திரத்தில் பத்தாவது பக்கமாக, அல்லது பதினைந்தாவது ஏடாகத்தானிருக்கமுடியுமே தவிர, இரண்டாவது அத்தியாயமாக – அல்லது மூன்றுவது அத்தியாயமாகத் தான் இருக்க முடியுமே தவிர, முழுமையடைந்த சரித்திரமல்ல இது! முழுமையடையும் சரித்திரம் வெறும் மையினுல் எழுதப்படுமோ? அல்லது ரத்தத்தால் எழுதப்படுமோ? மயில் இறகால் எழுதப்படுமோ? அல்லது எங்களுடைய எலும்புகளை எடுத்து அதை ரத்தத்திலே தோய்த்து எழுத வேண்டுமோ எங்களுக்குத் தெரியாது.

ஆனல், அவைகளுக்கும் தயாராகத்தான் – எத்தகைய புரட்சிகளையும், அடக்குமுறைகளையும், வேதனைகளையும், சமாளித்துத் திராவிடநாடு பெறுவதற்குத்தான் – தாய்த்திரு நாட்டை மீட்பதற்காகத் தான் – இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற விடுதலை அணிவகுப்பு நடைபோடுகிறதே தவிர, ஏதோ சட்டமன்றத்திற்குச் சென்று அவர்கள் தருகிற நூற்றைம்பது வெண்பொற் காசுகளைக் கொண்டு "ஆகா! எவ்வளவு அழகான பணங்கள்! வாழ்நாளிலேயே கண்டது கிடையாதே!" என்று ஏங்கி புளகாங்கிதம் அடைந்து, சட்டசபையிலே சுழன்று கொண்டிருக்கிற அழகான மின்சார விசிறிகளுக்கு இடையே, பட்டு மெத்தைகளுக்கு இடையே சுகங்காண அல்ல.

நம்முடைய பாக்கியமே பாக்யம், முதல் மந்திரிக்கு நேராகவல்லவோ அமர்ந்திருக்கிறோம்! சபாநாயருக்கு எதிராக அல்லவோ வீற்றிருக்கிறோம். எதிரே செட்டி நாட்டரசர் – சரிநிகர் சமானமாக அமர முடியுமா? குட்டிக் குபேரர் ஆயிற்றே! அவருக்கு நேராக அமர்ந்திருக்கிறோமே! எவ்வளவு பெரும் பேறு செய்திருக்கிறோம்!. என்று மகிழவும் அல்ல - பூரிக்கவும் அல்ல!

எங்களுக்குத் தெரியும். அங்கே நாங்கள் அமர்ந் திருக்கின்ற நேரத்தில் தென்னகத்தில் புயலும், மின்னலும், இடியும், மழையும், விடுதலே வேட்கையும் கொழுந்துவிட்டு எரிகிற அளவுக்கு லட்சோபலட்ச இளைஞர்கள் எங்களுக்குப் பின்னலிருக்கிறார்கள்! அவர்களுடைய துணையோடு சாதிக்க வேண்டிய காரியங்கள் எத்தனே எத்தனேயோ இருக்கின்றன. இந்த நாட்டினுடைய விடுதலேயைச் சிரமேற் கொண்டு, திராவிடத் தாயினுடைய — தமிழன்னே யுடைய விலங்கொடிப்பதற்காக, நாம் வகுத்திருக் கின்ற படையிலே — நாமும் வீரர்கள்! என்பதை நாங்கள் மறக்கமுடியாது! அங்கே இருக்கின்ற மின்சார விசிறிகள், சுற்றுகின்ற நேரத்திலே, எங்க ளுடைய தலேயும் சுற்றிக்கொண்டு தானிருக்கிறது. எப்படி? இந்த நாட்டினுடைய அவல நிலேயை நினேத்துச் சுற்றிக் கொண்டிருக்கிறது. பட்டுமெத்தை யிலே அமர்ந்திருக்கின்ற நேரத்தில், எவ்வளவு அழ கான மெத்தை? எத்தனே ஒய்யாரமான ஆசனம்? என்றல்ல நண்பர்களே எண்ணிக் கொண்டிருக் கிறோம். முள்ளிலும், கல்லிலும் ஆயிரக்கணக்கான

திராவிடப்பாட்டாளி மக்கள், அளவற்ற இன்னல்களை அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வெல்லாம், நலமெல்லாம் பெருக நாம் எத்தகைய தியாகத்தைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதையும் எண்ணுமல்லவா எங்கள் சிந்தை!

சட்ட மன்றத்தை உதறி எறிந்துவிட்டு, வெளியே வாவென்று நீங்கள் அழைக்கின்ற நேரத்திலே, வெளி வந்தே தீருவோம். எங்களை அனுப்பியவர்கள் நீங்கள். உங்களுக்காக அனுப்பியிருக்கிறீர்கள். இந்த நாட்டுக்காக அனுப்பி இருக்கிறீர்கள். இந்த நாட்டினுடைய விடுதலைக்கு அங்கும் ஏதாவது செய்ய முடியுமா, என்பதற்காக அனுப்பப்பட்டிருக்கிறோம். அப்படி அனுப்பிய நீங்கள், என்ன கட்டளை இடுகிறீர்களோ, அவைகளைச் சீர்தூக்கிப் பார்த்து அந்தக் கட்டளையை நிறைவேற்றுகின்ற காரியத்தில் ஈடுபடுவோ மென்பதைத் தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

காங்கிரசுக்காரர்கள் வெற்றிபெற்று; அல்லது வேறு கட்சிக்காரர்கள் வெற்றிபெற்று அவர்களுக்குப் பாராட்டுவிழா நடைபெறுகிறது என்றால், ஐந்தாண்டு காலத்திலே ஒரு முறை நடைபெறலாம் – இன்னொரு முறையும் நடைபெறலாம்! அவர்கள் பதவியை இழக்கிற நேரத்தில் – நல்ல வேளை உங்களுடைய பதவி இதோடு முடிந்துவிட்டது. என்று மக்கள் பாராட்டலாம்! நாங்கள் அப்படியல்ல! இந்த ஐந்தாண்டு காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக சட்டசபை உறுப்பினர்களுக்கு, பல முறை நிச்சயமாக "பாராட்டுவிழா" நடத்தப்போகிறீர்கள். எதற்காக

இந்தப் போராட்டத்திலே, இவர்கள் சிறைக்குச் சென்றார்கள், அந்தப் போராட்டத்திலே அவர்கள் சிறைக்குச் சென்றார்கள் என்ற காரணம் காட்டி நாங்கள் சிறைக்குச் சென்று விடுதலையடைந்து வருகின்ற நேரத்திலே, விடுதலை விழாக்கள் நீங்கள் நடத்தத் தான் போகிறீர்கள். நாங்கள் மறந்துவிடமாட்டோம்! – தேம்பியழுகின்ற எங்கள் தாயை மறந்துவிட மாட்டோம்! விலங்கு கையிலே ஏந்தியிருக்கிற, எங்களைப் பெற்ற மாதாவை மறந்துவிடமாட்டோம்! எங்களைப் பெற்ற மாதா, தங்க நிறம் உடையவள் கோலாரிலே! தங்கம் குவிந்து கிடக்கிறது. அவளைச் சுற்றிலும், மூன்று பக்கங்களிலும் பெரிய கடல்கள்! அவைகளிலே முத்து குலுங்கிக் கிடக்கிறது. காவிரி, தென்பெண்ணை, பாலாறு வற்றுத வளமுள்ள நதிகளிருக்கின்றன. இவைகளெல்லாம் இருந்தும் — எங்கள் மாதா அடிமையாம்! அடிமையாம்!! காமராசர் எழுகின்ற நேரத்திலும், என்றைக்காவது எழுந்தால் —சுப்பிரமணியம் பேசுகின்ற நேரத்திலும், — பக்தவத்சலம் எங்களைப் பார்த்து மிரட்டுகின்ற நேரத்திலும்–காங்கிரசுக்காரர்கள் உறுமுகின்ற நேரத்திலும், நம் தாய் அடிமையாகிக் கிடக்கிறாள் – அவள் கூண்டிலே பூட்டப்பட்டுக் கிடக்கிறாள்—அவளை விடுவிக்க வேண்டிய பெரும் பொறுப்பிலே நாங்கள் இருக்கிறோம் என்பதை எள்ளளவும் நாங்கள் மறந்துவிடமாட்டோம். நாங்கள் உங்களவர்கள். தமிழர்கள். திராவிடர்கள். இந்தத் தரணியின் சொந்தக்காரர்கள். தரணியை மீட்டிடும் கவலையை மேற் கொண்டிருப்பவர்கள். அதற்காகவே, இத்த உயிரிருக்கிறது – அதற்காகவே இந்தக் கண்கள் இருக்கின்றன–அதற்காகவே இந்தக்

கரங்கள் இருக்கின்றன – அதற்காகவே தேகம் எடுத்துவிட்டோம், என்கின்ற அத்தகைய உயர்ந்த நோக்கத்தை – அத்தகைய விடுதலை வேட்கையைப் பெற்றுத்தான், சட்டமன்றத்திலே அமர்ந்திருப்போம். என்பதைத் தயவு செய்து – தாய்மார்களே ! பெரியோர்களே ! பேரன்பு கொண்ட இளைஞர்களே ! மறந்துவிடாதீர்கள் ! மறந்துவிடாதீர்கள் . !! சட்ட மன்றத்திலே, திராவிடத்தின் விடுதலைக் குரல் கேட்கிறது என்றால், இப்படி ஒரு நாள் வருமா என்று, ஒருநாளும் நினைத்தது இல்லை. இந்த நன்னாள் – பதினைந்து பேர்களே அமர்ந்திருக்கின்ற நாம் – திராவிட நாட்டினுடைய விடுதலையைப் பெற்ற, படைவீரர்களாக, திராவிடநாட்டின் மந்திரிகளாக, திராவிட நாட்டை அரசோச்சுபவர்களாக அமர்ந்திருக்கின்ற காலம் வரப்போகிறது என்பதற்கு அறிகுறியாகும்,

பதினைந்து பேர்கள். எண்ணிக்கையிலே குறைவுதான். ஆனால் இந்த பதினைந்து பேர்களை அனுப்பியிருக்கிறவர்களோ பதினேழு லட்சம் வாக்காளர்கள். காங்கிரசுக்கு அடுத்தபடியாக அதிக வாக்காளர்களை– அதிக ஆதரவைப் பெற்றிருப்பவர்கள் நாம்தாம். இந்தத் தேர்தலிலே மூன்று பெரிய இயக்கங்கள் போட்டியிட்டன. காங்கிரசு, திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டுகள். காங்கிரசு சீர்திருத்தக் கட்சியைப்பற்றிக் கவலையில்லை பதவி இல்லாத காரணத்தால் உற்பத்தியான கட்சி அது. பதவி கிடைத்தால் ஒட்டிக்கொண்டாலும் கொள்ளும். முன் சொன்ன மூன்று இயக்கங்களில் காங்கிரசுக்காரர்கள் இழந்ததைப் பெற்றவர்கள். திராவிட முன்னேற்றக்

கழகத்தார் இல்லாததைப் பெற்றவர்கள். கம்யூனிஸ்டுகள் இருந்ததை இழந்தவர்கள். இதுதான் தமிழ் நாட்டினுடைய அரசியல் கணக்கு.

இன்றைய நிலையில், அதை எப்படிச் சொல்லுகிறேனென்றால் நாம் இல்லாததைப் பெற்றோம். இதுவரையில் சட்டமன்றத்திற்குச் செல்வதில்லை என்ற முடிவுடன் இருந்தோம். இப்போது எடுத்த எடுப்பிலேயே பதினைந்து பேர்கள் சென்றிருக்கிறோம். கம்யூனிஸ்டுகள் சென்ற தடவை முப்பது பேர்களோ நாற்பது பேர்களோ இருந்தார்கள் சட்டமன்றத்தில். இன்றைய தினம் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்கு – ஒரு கைகூடத் தேவையில்லை, விரலை மடக்கி விடலாம். நான்கே பேர்கள் இன்றைய தினம் இருக்கிறார்கள், ஆகவே, அவர்கள் இருந்ததை இழந்தவர்கள் என்று குறிப்பிடுகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல் மூன்றாவது, காங்கிரசுக்காரர்கள். சென்ற தேர்தலில் இவர்கள் பெற்ற இடங்கள் மிகமிகக் குறைவு. குறைந்த இடங்களைப்பெற்று மந்திரிசபை அமைக்கமுடியாமல், யார் யாரை இணைக்கலாமென்று தேடி பிரகாசத்தினுடைய ஐக்கிய முன்னணிக்கு எதிராகப் பலரை, பல இடங்களிலிருந்து வர வழைத்து உனக்கு மந்திரிப்பதவி தருகிறேன் — உனக்கு இன்னின்ன சலுகைகள் தருகிறேன், என்று ஆட்களைப் பொறுக்கி, எலும்புத் துண்டுகளுக்கும், பதவி இறைச்சிக்கும் ஆசைப்படுபவர்களை யெல்லாம் தன்னோடு இழுத்துக்கொண்டு – ஒரு பக்கத்திலே மாணிக்கவேலரை—இன்னொரு பக்கத்திலே வேறு பல சுயேச்சைகளை—சொல்லப்போனால் துரோகிகளை தன்பால் இழுத்துக்கொண்டு திக்கித்திணறி—வக்கு

வழியின்றி — அம்மாதிரி அவமானகரமான செயலைச் செய்து மந்திரி சபையை அமைத்தார்கள். காங்கிரசு எதிர்ப்பாளர்களை எல்லாம், காங்கிரசுக்காரர்களாக ஆக்கி, அவர்கள் போட்டிருந்த அழகான பட்டுச் சொக்காய்களைக் கழற்றிவிட்டு, கதர் சட்டைகளை மாட்டி தலையிலே இருக்கிற கோளாறு தெரியாமலிருப் பதற்காக — தொப்பிகளையும் கவிழ்த்து ஆட்சிபீடம் ஏறினர்.

இன்றைய தினம் அதே காங்கிரசு அதிக இடங் களைப் பெற்று, மந்திரி சபை அமைத்திருக்கிறது. அதனால் தான் இழந்ததைப் பெற்றவர்கள் என்கி றேன். ஆனால், உயர்ந்தவர்கள் – மதிப்புள்ளவர் கள் பெருமைப்படத்தக்க அளவுக்கு நடந்து கொண்டு பெற்றுர்கள் அதிக இடங்களை என்று சொல்ல முடியாது.

ரஷ்யா போன்ற மேல் நாடுகளிலே, இப்போது விஞ்ஞான ரீதியிலே புதியதொரு மருத்துவ முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். ஐம்பது வயதோ, அறுபது வயதோ ஆன, குடும்பத்தின் தலைவன் ஒரு வன் திடீரென்று அகால மரணமடைந்து விட்டால், சொத்துக்களைப் பற்றி எந்த விதமான உயிலும் எழு தாமல் மறைந்து விட்டால், ' ஐயோ! சொத்துக் களைப்பற்றி விவரம் சொல்லாமல் போய்விட்டாரே ?" என்று கவலைப்படக் கூடிய நிலைமையை மாற்றியிருக் கிறார்கள். விஞ்ஞான ரீதியிலே, புதிய கண்டுபிடிப் பின் மூலமாக, இறந்து போனவனுக்கு அரைமணி நேரமோ – ஒருமணி நேரமேர உயிரை வரவழைத்து, அயர்ந்து கிடக்கின்ற சுவாசப் பையிலும், நிரந்தர

மாகத் தூங்கிவிட்ட இருதயத்திலும் – கொஞ்சம் சூடேற்றி, உயிர் கொடுத்து அந்தக் குறுகிய இடைக் காலத்திலே, யார் யாருக்கு எப்படி யெப்படி சொத்துக் களைப் பங்கு பிரிக்க வேண்டுமென்று எழுதி வாங்கிக் கொண்டு, பிறகு அவனைச் சாக விட்டுவிடுவார்களாம். அதே போன்ற விஞ்ஞான முறையில் தான், சென்ற தடவை இறந்து விட்ட காங்கிரசு, ஐந்துவருட காலத்திற்கு உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே, இப்போது இழந்ததையும் பெற்றிருக் கிறது. இறந்தவன் உயிர் பெற்றிருக்கிறான். ஐந்து வருடங்களுக்குப் பிறகு நிச்சயமாகச் செத்துவிடுவதற் காகத்தான் என்பதை, அவர்கள் தேர்தலிலே நடந்து கொண்ட முறைகளினாலும் – தமிழர்களைப் புறக் கணிக்கின்ற தன்மையாலும் — திராவிடர்களை அலட் சியப்படுத்துகிற — துச்சமெனக்கருதுகிற காரணத் தாலும் நன்கு புலப்பட்டுவிட்டது. நிச்சயமாக அவர் கள் இனிமேல் தொடர்ந்து இந்த நாட்டை ஆள முடியாது — தென்னாட்டைப் பொறுத்தவரை — திராவிட நாட்டைப் பொறுத்தவரை!

சுதந்திரம் பெற்றவர்கள் நாங்கள்தானே! உங்க ளுக்கு உரிமைகளை வழங்கியவர்கள் நாங்கள்தானே, என்று சட்ட மன்றத்திலே கூவிக் கேட்கிறார்கள், இது எப்படி இருக்கிறது? நான்தானடி பெற்றேனடி மகளே உன்னை–நான் அழைக்கிறேன் கட்டிலறைக்கு —வர மறுக்கிறாயே என்று ஒரு அப்பன் கேட்டால், அது எவ்வளவு அவமானகரமானதோ — அதைப் போலிருக்கிறது–நாங்கள்தானே உரிமையை வழங்கி னேம், அடங்கி நடவுங்கள் என்று கேட்கிறார்கள். வெள்ளைக்காரன் கேட்டான்; முசோலினி கேட்டான்;

ஹிட்லர் கேட்டான்; சர்வாதிகார வெறியர்கள் எல்லாம் கேட்டார்கள் — இப்போது காங்கிரசார்களும் கேட்கிறார்கள்! என்ன அர்த்தம் அதற்கு? அது மாத்திரமல்ல, எதிரிலே உட்கார்ந்திருக்கிற எதிர்க் கட்சிக்காரர்கள் எல்லாம் யார் தெரியுமா? இவர்க ளெல்லாம் வெள்ளைக்காரன்–அயல் நாட்டுக்காரர்கள் இந்த நாட்டிலே தங்க வேண்டுமென்று சொன்னவர் கள், என்று குறிப்பிட்டார்கள்—அதற்கு நம்முடைய அறிஞர் பெருந்தகை அண்ணு அவர்கள் இன்று காலையிலே சட்ட மன்றத்திலே; வெகு அழகாகப் பதில் சொன்னார்கள். ''காங்கிரசு நண்பர்கள் எதிர்க் கட்சிக்காரர்கள் எல்லாம், ஆங்கிலேயனது அடிவருடி கள் என்று குறிப்பிட்டார்கள். அப்படி அவர்கள் சொல்லிய நேரத்தில் எதிர்க் கட்சியிலிருந்த எங்கள் முகங்கள், சுருங்கியதைவிட—காங்கிரசுக் கட்சியிலே யிருந்த பலருடைய முகங்கள் சுருங்கியதைச் கண் டோம்'' என்று, அங்கேதான் வெள்ளைக்காரனுடைய நிரந்தர ஏஜண்டாக இருந்த செட்டி நாட்டரசர் இருக்கிறார்; ஜஸ்டிஸ் கட்சியினுடைய தலைவராக இருந்த சாமியப்ப முதலியாருடைய மகன் இராம லிங்கம் உட்கார்ந்திருக்கிறார். ஆர் கே. சண்முகஞ் செட்டியாருடைய அருந்தவப் புதல்வி சாவித்திரி சண்முகம் அமர்ந்திருக்கிறார். நூற்றைம்பது பேர் களில், நூறு பேர்கள் காங்கிரசை எதிர்த்தவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். மீதி ஐம்பது பேர்களிலோ மில் முதலாளி இருபது பேர்கள் இருப்பார்கள். ஒரு காமராசர், ஒரு சர்தார் வேதரத்னம், இப்படிப் பொறுக்கி விடலாம் உண்மையான காங்கிரசுக்கார் கள் இவர்களென்று.

தில்லையாடி வள்ளியம்மை பரம்பரை அங்கு இருக்கிறதா? செக்கிழுத்த சிதம்பரனாரின் வம்சம் இருக்கிறதா அங்கே? பகவத்சிங்கின் பரம்பரையைக் காணமுடியுமா அங்கே? திருப்பூர் குமரனின் சந்ததி இருக்கிறதா? கிடையாது, கிடையாது. தேர்தலிலே பத்து லட்சம் வரை செலவழிக்கும் தகுதி பெற்றவர்களும்; ராஜாக்களும்; சர்களாக இருந்தவர்களும்; திவானுகப் பவனி வந்தவர்களும் இன்றைய தினம் காங்கிரசு கொலுமண்டபத்தில் வீற்றிருக்கிறார்களே ஒழிய, உண்மையான காங்கிரசுக்காரர்கள் அங்கு எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? ஆகவேதான் சொல்லுகிறேன்—இந்த விஞ்ஞான முறை இருதயம் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தாங்காது, தாங்காது என்று. ஆனல். திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கிற இந்தப் பதினைந்தும் வளரக் கூடிய வித்தைக் கொண்டது — வளரக் கூடிய ஆற்றல் பெற்றது – அப்படி வளர்ந்து இந்தப் பதினைந்து. நிச்சயமாக நூற்றைம்பதாகும் அதற்கு மேலுமாகும். அதை அப்படி ஆக்குகிற பெருமை – ஆக்குகின்ற கடமை – உங்கள் கையில் இருக்கிறது. பதினேழு லட்சம், கோடியாக மாறவேண்டும் – கோடானு கோடியாக மாறவேண்டும். தென்புலத்திலே இருக்கிற திராவிட மக்கள் அத்தனை பேர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய விடுதலைச் சேனைக்குத் தங்களுடைய கையை உயர்த்தி ஆதரவு கொடுத்து விட்டார்கள், சிகப்பும், கருப்பும் கலந்த அந்தக் கொடியின் கீழே, திராவிடப் படை வீரர்களுடைய அணிவகுப்பு – திராவிடத்தைப் பெற்றே தீர்வோம் என்று வடக்கு நோக்கிக் குரல்

எழுப்பிவிட்டது. அப்படிக் கிளம்பியிருக்கிற அந்தக் குரல் – நேருவே வந்தாலும் — அவரைவிடப் பெரிய மேருவே வந்தாலும், அகிலம் எதிர்த்தாலும்– ஆழ்கடலே கொந்தளித்து எழுந்தாலும்—எரிமலைகள் சீறினாலும்—புலி பாய்ந்தாலும்—சிங்கம் உறுமினாலும் திராவிட நாட்டின் விடுதலையிலிருந்து பின் தங்கோம் பின் தங்கோம் என்ற முறையிலே, இந்தக் குரலெழும் பட்டும். நாங்கள் படை வீரர்களே தவிர, படாடோபக் காரர்களல்ல. சட்டமன்றத்திலே, திராவிடம்—திராவிடம்—திராவிடம என்றே கூறிக்கொண்டிருப்போம் என்று உறுதியளித்து உங்களிடமிருந்து விடை பெற்றுக்கொள்ளுகிறேன்.

வணக்கம்!

(அமைந்தகரை 6—7—57)

கழகம் கைத்தறியாளரின் துணைவன்!

கைத்தறிவாரம் கொண்டாடப்படுகிற இந்த நேரத்தில் கைத்தறி நெசவாளர்கள் களிப்போடும், குதூகலத்தோடும், பேருவகையோடும் இதில் கலந்து கொள்ளுகிறார்கள் என்று உறுதியாகச் சொல்ல முடியாது.

தமிழர்கள் – திராவிடர்கள் மானத்திற்கு மிக, மிக மதிப்பளிக்கக் கூடிய சந்ததியினர், அத்தகைய திராவிடப் பெருங்குடி மக்கள் முதலிலே இந்த நாட்டிலே நாகரீகம் உதயமான நேரத்தில், நாகரீகத்தோடும், மானத்தோடும் வாழ்வதற்காகத் தான் தங்களுடைய முதல் முயற்சியை எடுத்துக் கொண்டனர் என்பதை உலகவரலாறு–மனிதன் தோன்றிய காலத்திலிருந்து நாம் படிக்கும் வரலாறு நல்ல முறையிலே தெரிவிக்கின்றது. காடுகளிலும், குகைகளிலும், மரப் பொந்துகளிலும், மலையடிவாரங்களிலும் மனிதன் வாழ்ந்த காலத்தில் - பச்சை மாமிசத்தை உண்ட நேரத்தில் – இனம், முறை, சாதி பாகுபாடு இவைகளெல்லாம் இல்லாத மனித சமுதாயமாக இருந்த நேரத்தில் – மனிதன் தான் உண்ணுவதற்கு உணவு எவ்வளவு அவசியம் என்று கருதினானே; அதைவிட அதிகமாக மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுகின்ற முயற்சிலே ஈடுபட்டான்.

இன்றைய தினம் மிகமிக, எழில் தரக்கூடிய பட்டாடைகளையும், பருத்தி ஆடைகளையும் உடுத்துகின்ற மனிதன், அன்றைய தினம் அந்த அளவுக்கு நாகரீக

மேம்பாடு அடையாவிட்டாலும், மரப்பட்டைகளையோ இலைதழைகளையோ தன்னுடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுகிற சாதனமாகக் கருதி அவைகளை ஆடைகளாக ஆக்கிக்கொண்டிருந்தான். அந்தக் காலத்திலேயிருந்து பகட்டோடு பட்டாடைகளை உடுத்திக்கொள்ளுகிற இந்தக் காலம் வரையில் மனிதன், தன்னுடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு உதவிய பெருந்தொழில், இந்த ஆடை நெய்கின்ற தொழில்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. அத்தகைய மானத்தைக் காப்பாற்றுகின்ற—ஆடை தருகின்ற—அருமைத் தொழிலாள நண்பர்கள் இன்றையதினம் எவ்வளவு வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள்? எப்படி விசனக்கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாள்தோறும் ஏடுகள் மூலமாகவும்; அவர்களுடைய கூக்குரல் மூலமாகவும்; நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். குளித்தலையிலே கைத்தறி வாரம் கொண்டாடப்படுவதைப் போலவே, சென்னையிலேயும் கொண்டாடப்படுகிறது. இதை விட ஆடம்பரமான—எழிலான மண்டபம் ஜோடிக்கப்பட்டு, அதிகமான பேச்சாளர்கள்--ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தலைவர்கள்—அமைச்சர்கள் வரவழைக்கப்பட்டு—நடன நிகழ்ச்சிகளும், நாடக நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு — கொண்டாடப்படுகிறது. ஆனலும் அங்கே கூடி, அந்த விழாவிலே கலந்து கொள்ளுகின்ற கைத்தறியாளர்கள் உற்சாகத்துடனிருக்கின்றார்களா?—என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு அமைச்சர்களை வரவழைத்து இருக்கிறோம்! அமைச்சர்கள் கேட்காவிட்டாலும்; வந்திருக்கின்ற

தலைவர்கள் நம்முடைய குறைகளை எடுத்துச் சொல்ல மாட்டார்களா?—என்ற நம்பிக்கையில்தான் அவர்கள் விழாவிலே குழுமி யிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுடைய குறைகள் துடைக்கப்படவில்லை என்பதையும், அதற்கான குரல் அங்கிங்கெனாதபடி எங்கும் எழும்பிக் கொண்டிருக்கிறது என்பதையும் அரசியல் அறிவு படைத்தோர் மறுக்க முடியாது.

சென்ற தடவை கூடிக் கலைந்திருக்கின்ற சென்னை சட்ட மன்றத்தில் கவர்னர் பெருமான் அவர்கள், தன்னுடைய உரையை நிகழ்த்திய நேரத்தில், எதிர்க் கட்சியிலே உட்கார்ந்திருக்கிற நாங்களெல்லாம் அந்த உரையிலே யிருக்கின்ற விஷயங்களை எடுத்து ஆய்ந்து, அறிந்து காங்கிரசு சட்ட மன்ற உறுப்பினர் களுக்கு எதிரே,—ஆளும் அமைச்சர்களுக்கு எதிரே—விவாதித்துப் பேசிய நேரத்தில், அவரது நீண்ட உரையிலே எந்தெந்த பிரச்னைகளைப் பற்றியோ பேசப்பட்டிருந்தாலும்—இரண்டாயிரம் பொலி காளைகளைப் பற்றியும் கோழிப் பண்ணைகளைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தாலும், கைத்தறி நெசவாளர்களைப் பற்றி ஏதோ ஒன்றிரண்டு வார்த்தைகளே காணப் படுகின்றன என்று சுட்டிக்காட்டி உணர்த்தினேம். நாடெங்கிலும் கைத்தறி வாரம் கொண்டாடப்படு கின்ற நேரத்திலே, கைத்தறி நெசவாளர்களுடைய துயர் துடைப்பதற்காக இருக்கின்ற திட்டங்கள் என்னென்ன என்று கவர்னர் உரையிலே எடுத்துச் சொல்லப்படவில்லை — என்பதை திராவிட முன் னேற்றக் கழகத்தின் சார்பாக அங்கே நாங்கள் எடுத்து உரைத்தோம்.

கைத்தறி நெசவாளர்களுக்கும், திராவிட முன் னேற்றக் கழகத்திற்கும் மிகமிக நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை நான் இங்கே பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் கைத்தறி நெசவாளர்களுடன் இரண்டற ஒன்றிப் பழகியிருக் கிறோம். அவர்களுடைய வேதனைகளைப் பகிர்ந்து கொண்டிருக்கிறோம் அவர்களுக்காக வெறும் கூச்சல் போடுகிறவர்களாக இல்லாமல், அவர்களுக்கென சில பல ஆக்க வேலைகளிலும் ஈடுபட்டிருக்கிறோம். மூன்று, நான்கு ஆண்டுகளுக்குமுன், கைத்தறிக்கு மார்க்கட் இல்லாமல் போய்—கைத்தறித் துணிகளை மதிப்பாரில்லை என்கின்ற அளவுக்கு நாட்டிலே நிலைமை வளர்ந்து—சேலம், கோவை, துறையூர், உறையூர் போன்ற இடங்களிலே கைத்தறி நெச வாளர்கள் குடும்பம், குடும்பமாகப் பட்டினிச் சுமை யைத் தாங்க முடியாமல் சென்னை போன்ற இடங் களுக்குப் படையெடுத்து வருகிறார்கள்; மந்திரிமார் களுடைய வீட்டு வாசலிலே முகாமிடுகிறார்கள்; தங்க ளுடைய அவலக் குரலை அவர்களுடைய காது வலிக்க, வலிக்க எடுத்துச் சொல்லுகிறார்கள்; என்ற வேதனை யான செய்தியை நாம் கேட்டோம்! அந்த நேரத் திலே, தேங்கிக் கிடக்கிற கைத்தறித் துணிகளுக்கு நல்லதொரு மார்க்கட்டை உண்டாக்கித் தரவேண் டும்; நல்லதொரு மதிப்பை ஏற்படுத்தவேண்டும் என் கிற காரணத்திற்காக, கழகத்திலுள்ள அத்தனை பேர் களும்—முன்னணி வீரர்களும்—தலைவர்களும்-கிளைக் கழகங்களின் செயலாளர்களும் — மாவட்டச் செய லாளர்களும் கைத்தறி துணிகளைத் தோளிலே சுமந்து ஒவ்வொரு ஊரிலும் தெருத் தெருவாகச் சென்று

விற்றிருக்கிறார்கள், நான் சென்னையிலே மட்டும் பத்தாயிரம் ரூபாய்களுக்குக் கைத்தறி துணிகளைத் தெருத் தெருவாகச் சென்று விற்பனை செய்தேன். அதைப்போலவே அறிஞர் அண்ணு அவர்கள் திருச்சியிலும்; பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் காரைக்குடியிலும்; தோழர் ஈ. வி. கே சம்பத் அவர்கள் கோவையிலும் துணிகளை விற்று ஒரே நாளில்; ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள துணிகளை நாட்டிலே விற்றுக் காட்டி, அதற்கு இருக்கிற மதிப்பை — கைத்தறித் துணியிடத்தே மக்கள் காட்டவேண்டிய அக்கரையை நாட்டிற்கு வலியுறுத்திச் சொன்னேம். அன்று முதல் கைத்தறித் துணியைத்தான் கூடுமான வரையில் கழகத்திலே உள்ளவர்கள் உடுத்துவது என்கிற வேண்டுகோளையும் விடுத்தோம்.

இன்றைய தினம் கைத்தறி நெசவாளர்களுக்காகச் செய்யப்பட்ட திட்டங்களும், தீர்மானங்களும் கேட்பாரற்றுக் கிடக்கின்றன என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இராசகோபாலாச்சாரியார் அவர்கள் மந்திரியாய் இருந்த நேரத்தில் கைத்தறி நெசவாளருக்காக நல்லதொரு திட்டமொன்று தீட்டப்பட்டு வடநாட்டு சர்க்காரிடத்திலே வைக்கப் பட்டது. கரைபோட்ட வேட்டியும், சேலையும் கைத்தறி நெசவுக்கே தரப்படவேண்டும்; மில்களுக்குத் தரக்கூடாது; வழங்கப்படக்கூடாது — என்கிற யோசனை வடநாட்டுக்குக் கூறப்பட்டது. ஆனால், மத்திய சர்க்கார் அதைக் காதில் போட்டுக்கொள்ளாத காரணத்தால் இன்றைய தினம் ஆலைத் துணிகள், கைத்தறி துணிகளோடு போட்டியிட்டு அதன்

வளர்ச்சியைச் சீரழித்துவிட்டதால், கைத்தறி நெச வாளிகள் மிக மிகக் கஷ்டத்துக்குள்ளாகி இருக்கிறார் கள். அது மாத்திரமல்ல, கரைபோட்ட வேட்டி, சேலையை நெய்யும் உரிமையைக் கைத்தறிக்கு வழங் காதது மட்டுமல்ல — தறிக்கே உள்ள தனி உரிமை யான லுங்கி நெய்யும் உரிமையை இன்றைய தினம் ஆலைத் தொழிலுக்கு — மில் தொழிலுக்குத் தந்து விட்டார்கள்.

ஒரு காலத்திலே தமிழகத்துக் கைத்தறித் துணிக்கு, உலகத்திலே இருந்த மதிப்பும், உலக வாணிபத்திலே இருந்த பெருமையும் இன்றைக் கெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கலாம்! சரித்திர மும் சொல்லிச் சொல்லிப் பெருமையடைகிறது. ஔரங்கசீப்பினுடைய மகள், தமிழ்நாட்டு ஏழு கைத் தறிச் சேலைகளை ஒரே நேரத்தில் உடுத்தியிருந் தாலும் — அவளுடைய அங்கங்கள் வெளியிலே தெரிந்ததாம்! அவ்வளவு மெல்லிய ஆடைகளை நெய்து பெருமைபெற்றிருந்த தமிழகம் — ஒரு கணை யாழிக்குள்ளே, ஒரு சேலையை வைத்து மூடிவிட முடி யும் — பத்தீரப்படுத்திவிட முடியும் என்ற அளவுக்கு ஆடைகள் நெய்த தமிழகம் — பாம்பினுடைய தோல்; அது உரித்துப் போடுகிறதே சட்டை; அதைவிட மெல்லிய ஆடையைத் தரக்கூடும் என்ற பெருமை யைப் பெற்றிருந்த தமிழகம் — இன்றைய தினம் வாடிக்கிடக்கிறது. ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் பெறுமான ஜரிகைச் சேலைகளை நெய்து தருகின்ற கைத்தறி நெசவாளி, தன்னுடைய மனைவிக்கு ஒரு ரூபாய் செலவழித்து துணி எடுத்துத் தரமுடியாத அளவுக்கு கந்தல் துணிகளையே அணிந்து, மனைவி

மக்களுடன் வாழுகின்ற கொடிய வாழ்க்கையைத் தான் அமைத்துக்கொள்ள முடிகிறது பட்டு தருகின்ற பட்டுப் பூச்சி வதைக்கப்படுவது போலவே; பட்டாடை தருகின்ற நெசவாளியும் வதைக்கப் படுகிறான்.

நான் இந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினன் என்ற முறையிலே எனக்குத் தரப்பட்டு இருக்கின்ற மனுக்கள் பலவற்றைப் படித்த நேரத்தில் அவைகளில் கைத்தறி நெசவாளர்கள் வீடு கட்டிக் கொள்ள முடியாத நிலைமையில் - ஒரு வீட்டிலே பல குடும்பங்கள் நெருக்கியடித்துக் கொண்டு வாழுகிறோம்; அவதிப்படுகிறோம்; கண்ணீர் வடிக்கிறோம் எங்களுக்கென வீடு கட்டிக்கொள்ளக்கூட உரிமை இல்லை; எவ்வளவோ காலி நிலங்கள், தரிசு இடங்கள் கிடக்கின்றனவே; அவைகளாவது எங்களுக்குப் பயன் பட – உரிமை கிடைக்க அதிகாரிகளைக் கலந்து உறு துணை செய்வீர்களா?–என்று பல வேண்டுகோள்கள் என்னிடம் குவிந்திருக்கின்றன!

இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன? இந்த நாட்டில் தொழிலாளர் வர்க்கம் சரியானபடி கவனிக் கப்படவில்லை. நாட்டு மானத்தைக் காக்கும் அவர் கள் நலனில் அக்கறை கொள்ள ஆளுங்கட்சியினர் தயங்குகிறார்கள். இந்தத் தயக்க நிலைமையிலே இருந்து இந்த நாட்டுக் கைத்தறி நெசவாளர்களை விடுவிப்பதற்கான முயற்சியிலே ஆட்சியாளர் ஈடுபட வேண்டும் என்பதைத்தான், இந்த விழாவில் நெச வாளர்களின் சார்பிலே சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம், கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னையை அடிக்கடி அமைச்சர்களிடத்திலும், சட்டமன்றத்தினரிடமும் எடுத்து எடுத்துச் சொல்லும். அவர்கள் உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்து தருகிற வரையிலே கோரிக்கைகளைச் சமர்ப்பித்துக் கொண்டேயிருக்கும். அதுபோலவே இந்த வட்டார அதிகாரிகளிடத்தில் – இந்தக் கூட்டத்துத் தலைவர் போன்றவரிடத்தில் – கைத்தறியாளர்களின் கஷ்டங்களை எடுத்துச் சொல்லுவோம். அவர்களோடு கூடி – கலந்துபேசி – கைத்தறியாளர்களின் தொல்லைகளை நீக்கப்பாடுபடுவோம் என்று இவ்விழாவில் உறுதி கூறுகிறேன்.

"குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் பறித்தது" என்று சொல்லுகிற பழமொழி போல— விசைத்தறி என்கின்ற பெயரால் ஒரு புதிய முறை இன்றைய தினம் கைத்தறி நெசவாளர்களுடைய கழுத்தையறுப்பதற்காகப் புகுத்தப்படுகிறது. அந்த விசைத்தறி புகுத்தப்பட்டால் கைத்தறியையே நம்பி வாழும் ஏராளமான குடும்பங்கள் வேதனைக்குள்ளாகும் என்பது நன்றாகத் தெரிந்து விட்டிருக்கிறது. ஒரு விசைத்தறி புகுத்தப்படுகின்ற நேரத்தில் அதனால் பத்துக்கைத்தறிகள் அழிக்கப்படும்! நாம் இதை விளக்கமான முறையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம் அரசாங்கத்துக்கு. நாம் மாத்திரமல்ல நாடெங்கிலும் உள்ள கைத்தறி நெசவாளர்கள் அத்தனைபேர்களும்–"விசைத்தறியைப் புகுத்த வேண்டாம்" என்று பொதுக்கூட்டங்கள், மூலமாகவும்; மாநாடுகள் வாயிலாகவும், தலைவர்கள் மூலமாகவும் எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். அப்படி எடுத்துச் சொல்லியுங்கூட

அரசாங்கம் கொஞ்சங்கூடத் தங்கு தடையில்லாமல்—மிகவேகமாக விசைத்தறியைப் புகுத்திவிடும் காரியத்தில் ஈடுபட்டு வருகிறது.

கோவை நகரம்போன்ற இடங்களிலே விசைத்தறி மெள்ளப் புகுந்து கொண்டிருக்கிறது. அதன் காரணத்தால் வேலை வேண்டுமானல் சுலபமாக முடியலாம். ஆனல், பல்லாயிரம் நெசவாளர்கள் பட்டினியால் சுருண்டு மடிந்து போவார்கள் என்பது மட்டும் நிச்சயம். மனிதனின் வேலையைக் குறைக்கின்ற—சிரமத்தைக் குறைக்கின்ற புதிய முறைகள்; புதிய விஞ்ஞான முறைகள் புகுத்தப்படக் கூடாது—என்கிற கருத்தை நான் அடிப்படையாகக் கொண்டு இதைக் கூறவில்லை கைத்தறி முறை இந்த நாட்டிலே இருந்துதான் தீரவேண்டும் என்றும் வாதாடவில்லை. கலையழகு மிக்க கைத்தறி ஆடைகளை அளிக்கின்ற சக்தி ஆலைகளுக்கு இல்லாததால்.....பெரும் பாலோர் ஈடுபடுகிற தொழிலாக இல்லாமற் போயினும், "கைத்தறி" அறவே நசித்துவிட யாரும் விரும்பமாட்டார்கள். அது மட்டுமின்றி "தற்காலிகமாகக் கைத்தறியாளர்கள்—தறியை மட்டுமே நம்பி வாழுகின்ற பாட்டாளி மக்கள்—திராவிடப் பெருங்குடியினர் வாழ்வு பெற—தங்களுக்கென அமைத்துக் கொண்டிருக்கிற தொழிலைச் சர்க்கார் அழித்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறேம். இந்தத் தொழிலே எப்போதும் நிரந்தரமாக இருக்கவேண்டும், கடல் உள்ள அளவும்—நிலம் உள்ள அளவும்—சூரிய சந்திரர்கள் உள்ள அளவும், "இந்தா விபீஷண! லங்காபுரி ராஜ்யம்!" என்று கொடுத்தாளுமே இராமன் விபீஷணனிடத்தில் லங்கா

புரியை–அதைப்போல இந்த உலகம் உள்ள அளவும் கைத்தறிதான் இருக்கவேண்டும். மில் தொழிலையும், விஞ்ஞான முறைகளையும் எதிர்க்கிறோம் — என்று நாங்கள் சொல்லவில்லை நாங்கள் கூறுவதெல்லாம் தற்காலிகமாக கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் தங்களுக்கென அந்தத் தொழிலை ஆக்கிக் கொண்டார்கள். அந்தத் தொழிலை விட்டு விட்டு வேறு வேலையோ—தொழிலிலோ புகமுடியாத அளவுக்கு வழியற்றவர்களாகி விட்டார்கள். ஆகவே, அத்தகையோர் தற்காலிகமாக—அவர்களது சந்ததி வேறு தொழிலிலே ஈடுபடுகிற வரை வாழவேண்டாமா? அதற்கு வகைசெய்ய வேண்டாமா? என்றுதான் கேட்கிறோம்.

திடீரென விசைத் தறி புகுத்தப்பட்டால் — மில் துணிகளுக்கு ஆக்கமளிக்கப்பட்டால் — கைத்தறியை மட்டுமே நம்பி வாழுகின்ற பல்லாயிரம் குடும்பங்களின் கதி என்னவென்று கணக்குப்போட்டுப் பார்க்கச் சொல்லுகின்றோம். சர்க்காரும் அவர்களது கண்ணீரைத் துடைப்பதற்கான முழு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லையேல் கைத்தறியாளர்கள் குடும்பம் குடும்பமாகச் சாகின்ற பாதகத்துக்கு – பழிக்கு சர்க்கார் தன்னை ஆளாக்கிக்கொள்ள நேரிடும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்

கைத்தறி நெசவாளருக்காக செய்யப்படும் நன்மைகள் அத்தனையும் "அம்புலியைப் பிடித்துத் தா" என்று கூறி அழுகின்ற பிள்ளையிடம்; "இந்தா பிடித்துத் தருகிறேன்" என்று தாயார் கூறி, ஒரு கண்ணாடியைக் கையிலே கொடுத்து, அதிலே

அம்புலியைக் காட்டி, "இதோ! பார். அம்புலி" என்று சொல்வதுபோல, "எங்களுக்கு உரிமைதர வேண்டும்; வாழ்வுதர வேண்டும்" என்று அழுகின்ற கைத்தறி நெசவாளர்களிடத்திலே, ஆட்சியாளர்கள் ஏதேதோ குருட்டு சமாதானங்களைச் சொல்லி "நாங்கள் உங்களுக்காக இன்னின்ன விழாக்களை நடத்துகிறோம்; கைத்தறி வாரங்களைக் கொண்டாடுகிறோம்; அவைகளிலே அமைச்சர்களாகிய நாங்களே கலந்து கொள்ளுகிறோம்" என்கிற கண்ணுடியை மட்டும் காட்டுகிறார்கள். அழுகின்ற கைத்தறி நெசவாளன் இதனால் திருப்திபெற முடிகிறதா? அழுகின்ற நெசவாளி — குடும்பம் — குடும்பமாகச் சாகின்ற நெசவாளி — தற்கொலை செய்துகொள்ளுகின்ற நெசவாளி — அத்தனை பேர்களும் அந்த வேதனையிலிருந்து விடுபட வேண்டுமேயானால், வட நாட்டு ஆலைகளும், துணிகளும் ஒடுக்கும் நிலையிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமே யானால், விசைத்தறி போன்ற திட்டங்களை வாபஸ்பெற்று — லுங்கி, கரைபோட்ட வேட்டி, சேலை நெய்கின்ற உரிமையைக் கைத்தறி நெசவாளருக்கே தருகின்ற சட்டங்களைத் துணிவோடு கொண்டுவர வேண்டும். ஆனால், நாம் பலமுறை கேட்டுவிட்டோம் — சட்ட மன்றத்திலும் கேட்டுவிட்டோம் — அந்தத் திட்டம் என்னவாயிற்று என்று? அதற்கு மௌனந்தான் பதிலாகத் தரப்படுகிறது. பேசா மடந்தைகளாகத்தான் மந்திரிகள் காட்சியளிக்கிறார்கள், கவர்னருடைய உரையிலும் அதைப்பற்றிய ஜாடைமாடை கூடக் காணப்படவில்லை.

ஆகவேதான், நான் சொல்லுகிறேன், கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய குறைகளைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு இந்த சர்க்காரை மாத்திரம் நம்பிப் பயனில்லை, தங்களுடைய ஒற்றுமையை அதிகமாக வளர்த்துக்கொண்டு, கைத்தறி இயக்கத்தை வலு வோடு வளர்த்துக் கொண்டு, அதன் காரணமாக எழுப்புகின்ற உரிமைக் குரல் மத்திய சர்க்காருடைய காதிலே ஏகமனதாக ஒலிக்கும்படி — அவர்களது நெஞ்சிலும் தைக்கும்படிச் செய்யவேண்டும்,

மேலும் பொதுமக்கள் காட்டவேண்டிய கடமை ஒன்று உண்டு. கூடுமானவரையில் தாங்கள் உடுக் கின்ற உடைகள் — குடும்பத்திற்கு எடுக்கின்ற ஆடைகள் — நண்பர்களுக்கும் சிபார்சு செய்கின்ற ஆடைகள் – அத்தனையும் கைத்தறி ஆடைகளாகவே இருக்கவேண்டும். கைத்தறி துணிகளாகவே உடுப் போம் என்று உறுதிசெய்துகொண்டு ஒத்துழைப்பை நல்குவார்களே யானால், நிச்சயமாகக் கைத்தறியாளர் களுடைய துயர் துடைப்பதற்கு ஒரு மார்க்கம் கண்ட வர்களாவோம் – என்பதைக் கைத்தறி நெசவாளர் களது சார்பாக நான் பொதுமக்களுக்கு சிபார்சு செய்கிறேன். நாம் அவர்களைக் காப்பாற்றவேண்டும். அவர்கள் நம்முடைய மானத்தைக் காப்பாற்றுவார் கள், இன்றைய தினம் அத்தனை பேர்களும் வலுவில் மரணத்தை அணைத்துக்கொள்பவர்களாக இருக்கிறார் கள்! ஓட்டைக் குடிசையிலே, ஒன்பது குடும்பங்கள் ஒன்றுக இருக்கிறோம் என்று ஓலமிடுபவர்களை — அந்த வேதனையிலிருந்து காப்பாற்றுவதற்கு – அவர் களை விடுவிப்பதற்கு — அவர்கள் நம்மிலே ஒரு அங்கம்; நமது சமுதாயத்திலே அவர்கள் ஒரு பிரிவு;

அவர்களே நாம், நாமே அவர்கள் — என்கிற அளவுக்கு அந்த பரந்த உள்ளத்தோடு பொதுமக்கள் அத்தனை பேர்களும், கூடுமானவரை "கைத்தறி துணிகளையே அணிவோம்" என்பதைத்தான் இந்த கைத்தறி வாரத்திலே உறுதியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தத் தொகுதியிலே இருக்கிற கைத்தறி நெசவாளர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு கூடுமான வரையில் நம்முடைய தாசில்தார் அவர்களும், இன்னும் இந்த வட்டாரத்திலே இருக்கிற அதிகாரிகளும், அந்த முயற்சியிலே ஈடுபடவேண்டும். தண்ணீர்ப்பள்ளி, ராசேந்திரம் போன்ற இடங்களிலே யுள்ள நெசவாளர்கள் தாங்கள் இருப்பதற்கு வீடில்லை சில இடங்களிலே வீடுகட்டிக் கொள்ளுவதற்கு அனுமதி வேண்டும் — என்று கேட்கிறார்கள். அதற்கான முயற்சியிலே நம்முடைய தாசில்தார் போன்றவர்களெல்லாம் உறுதுணையாக இருந்து அவர்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு "கைத்தறி நெசவு ஓங்குக! கைத்தறியாளர் வாழ்க!" என்றுகூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

(குளித்தலை 11—5—57 கைத்தறி வாரவிழா)

கலையும் — மனிதனும்

பணிபுரியும் பாவையர் பாசறையைச் சேர்ந்த அருமைச் சகோதரிகளே! இந்தப் பாசறையின் சார்பில் என்னை அழைத்துச் சிறப்புரை நிகழ்த்துமாறு கேட்டுக்கொண்ட அனைவருக்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் கிருட்டிணமூர்த்தி அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிடும்போது நான் சார்ந்திருக்கும் கழகத்தின் சார்பாக பலமுறை கூப்பிட்டும் அதற்கெல்லாம் வராத கருணாநிதி இப்போது வந்திருக்கிறார் — என்று பெருமையோடும் — ஜாடையாக என்னைக் குற்றம் சாட்டவேண்டுமென்ற தோரணையிலும் குறிப்பிட்டார். இம்மாதிரியான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுகிற நேரத்தில், உள்ளூரில் என்னுடைய கழகத்தைச் சேர்ந்தவர்களைக் கேளாது ஒப்புதல் தருவதில்லை. அதைப்போலவே, முறைப்படி நண்பர் கிருட்டிணமூர்த்தி அவர்களைக் கேட்டுக் கொண்டு – அவரும் ஒப்புதல் அளித்த பிறகே இந்த விழாவிலே நான் கலந்து கொள்ளுகிறேன். சொந்தப் பிள்ளையை நாமே கொஞ்சிக் கொண்டிருப்பதைவிட, அடுத்த வீட்டுக்காரரையும் கொஞ்ச விடுவது தான் முறை; நல்லது. இந்த நாட்டிலே பரம்பரை பரம்பரையாக தமிழ்க் குடும்பங்களிலே வளர்ந்து வருகிற ஒருநிலையும் ஆகும். தோட்டம் வளைத்த தோட்டக்காரன் நம்முடைய தோட்டத்திலே விளைந்த ரோஜா மலர்தானே இதை அடுத்தவர்கள் வைத்துகொள்ளக் கூடாது; தானும், தன்னுடைய வீட்டிலே இருப்பவர்

களுந்தான் வைத்துக்கொள்ள வேண்டும்—என்று கூறுவது சுத்த சுய நலமாகிவிடும். அடுத்தவர்கள் சூடிக்கொண்டு "உன்னுடைய தோட்டத்து மலர் மிக மிக மென்மையான மலர். மிகமிக எழிலான ரோஜா!" என்று பாராட்டும்போது தோட்டக்காரனுக்கு ஏற்படு கிற மகிழ்ச்சி நண்பர் கிருட்டிணமூர்த்திக்கும் இப் போது ஏற்படவேண்டும். அது ஏற்படவும் செய்கிறது ஆனல், அதை மறைத்துக்கொண்டு என்னைக் குற்றம் சாட்டவேண்டும் என்பதற்காக வேடிக்கையுரை கூறி னர் என்று நான் கருதுகிறேன்.

இன்றைய தினம் என்னை வரவேற்று, இந்த விழாவினை ஏற்பாடு செய்தவர்கள் மிகமிக அழகான கலைநிகழ்ச்சிகளையும், கருத்துப் பொதிந்த இசை நிகழ்ச்சிகளையும் இந்த நாட்டுக்குத் தேவையான சீர் திருத்தக் கருத்துக்களையும், சிறு ஓரங்க நிகழ்ச்சி மூல மாகவும், நடனம் மூலமாகவும் எடுத்துக்காட்டினர்கள் மதுவிலக்கு நடன நிகழ்ச்சி நடைபெறுகிற நேரத்தில் நான் கொஞ்சம் ஆச்சரியப்பட்டுக் கொண்டேன். இந்த நாட்டிலே மதுவிலக்கு வந்து வெற்றிகரமாக நடைபெறுகிற—அல்ல; அல்ல; நடைபெறுவதாகச் சொல்லப்படுகிற — நேரத்தில் கூட இப்படி ஒரு நிகழ்ச்சி தேவைதானு? — என்று. ஆனல், அந்த நடன நிகழ்ச்சி இங்கே நடிக்கப்பட்டதிலிருந்து, இந்த நாட்டிலே மதுவிலக்கு சரியானபடி அமுலாகவில்லை என்பதும், மதுவிலக்கு சரியானபடி பெற்றிபெற வேண்டுமேயானல் மக்களின் மனத்தெளிவுதான் மிகமிக முக்யம் என்பதையும் இந்தப் பாசறையிலுள்ள பெண்மணிகள் ஜாடையாகச் சுட்டி காட்டியிருக்கிருர் கள் என்றுதான் நான் எண்ணிக்கொண்டேன்.

மதுவிலக்கு நடனத்திலே பாடிய தோழியர் பாட்டை மறந்துவிட்ட காரணத்தால் பாடியதையே திரும்பத் திரும்பப் பாடினர்கள் என்றாலும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தலைப்பு "கலையும் — மனிதனும்" என்ற காரணத்தால், அதையும் ஒரு கலையாக நான் எடுத்துக் கொண்டேன். ஏனென்றால், அந்தப் பாட்டைத் திரும்பத் திரும்பப் பாடியவர் ஆண் வேடத்திலே இருக்கிற குடிகாரர். அவர் குடித்திருக்கிற காரணத்தால் தான் திரும்பத் திரும்பப் பாடினர் என்று நான் கருதினேனே தவிர, மறந்து விட்டார் என்று நான் எண்ணவில்லை. இது இந்த நாட்டிலே பரம்பரை பரம்பரையாகக் குற்றங்களைக் கூட — தவறுகளைக் கூட — கலையுணர்ச்சியோடும், கலைக் கண்ணோடும் பார்க்கின்ற நிலைமை வளர்ந்து வருகிற தன்மையையுங் காண்பிப்பதாகும்.

உதாரணமாக சென்ற மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, இராமனுதபுரத்தில் நடைபெற்ற ஒரு அமெச்சூர் நாடகத்துக்கு நான் தலைமைவகித்தேன். நாடகத்தை நான் காணுகிற நேரத்தில் அதில் பல நிகழ்ச்சிகளை மக்கள் அதிருப்தியோடு வரவேற்றார்கள் — மிக மிகப் புதிய நடிகர்கள் — மேடைக்குப் பழக்கமே இல்லாதவர்கள் என்கின்ற காரணங்களால் அவர்களிடையே அநேகக் குறைபாடுகள் காணப்பட்டன. அவைகளில் மிக மிக முக்யமான குறைபாடு என்னவென்றால், அந்த நாடகத்திலே ஒரு முதலாளி வருகிறார். ஆத்திரமடைந்த ஒரு தொழிலாளி ஒரு புரட்சிக் கட்டத்தின்போது தன் கையிலே உள்ள தடியால் அந்த முதலாளியின் தலையிலே ஓங்கி அடிக்கிறான். முதலாளி சுருண்டு கீழே விழுந்தார். உடனே நாடக

டெக்னிக்படி விளக்குகள் அணைக்கப்பட்டு, திரை கீழே விடப்பட்டது. திரை விழுந்த பிறகு விளக்கு போட்டார்கள் அடுத்த சீனுக்காக. ஆனல், விழுந்த திரை முழுவதும் விழவில்லை ஆனலும் மக்களுக்கு நேராக இறந்துவிட்டதாகக் காட்டப்பட்ட முதலாளி திடீரென்று எழுந்து உள்ளே ஓடினர். அவர் ஓடுவது விளக்கு போடப்பட்ட காரணத்தால் மக்களுக்குத் தெரிந்தது; ஓடுகிற நேரத்திலே, "ஐயோ! எழுந்துவிட்டானே" என்று பயந்துகொண்டு திரை விடுகிற சீன்காரன் மறுபடியும் திரையை விட்டான்; அது ஓடிய முதலாளியின் தலையிலே விழுந்து அடிபட்டு மீண்டும் முதலாளி வேடக்காரன் கீழே விழுந்தான். மக்கள் நகைச்சுவைக்கு நல்ல கட்டம் கிடைத்தது என்று கருதவே நாடகக் கொட்டகையில் சிறு சிறு கூச்சலும், குழப்பமும் தொடர்ந்தது. அதற்குப் பிறகு நான் அவசர அவசரமாக நாடகமேடைக்குச் சென்று தலைமையுரையை நானே வலுவிலே ஆற்றத் தொடங்கினேன். அப்போது மக்களிடையே சொன்னேன், "நீங்கள் ஏதோ தவறுதலாகப் புரிந்து கொண்டீர்கள். இந்த முதலாளியைத் தொழிலாளி அடித்தான். அடிபட்ட முதலாளி கீழே விழுந்து செத்தான். செத்த பிறகு மறுபடியும் உயிர்பெற்று எழுந்தான். ஓடுகிற நேரத்திலே திரைக் கம்பு தலையிலே விழ மறுபடியும் கீழே விழுந்தான் அது எதற்காக வென்ருல், ஏதும் தவறுதலாக நடந்துவிடவில்லை. தொழிலாளி அடித்துங் கூடச், சாகாத முதலாளி, மறுபடியும் மறுபடியும் இந்த முதலாளி வர்க்கம் சாகாது என்று காட்டுவதற்காக எழுந்தார்; அப்படி எழுந்தாலும் இந்த உலகம் அவர்களை விடாது

என்று காட்டுவதற்காகத் திரைக் கம்பு மேலே விழுந்தது. இப்படித்தான் நாம் விளக்கம் பெறவேண்டும்" என்று எடுத்துக் காட்டினேன்.

ஆகவே, தவறுகளையும் — குறைகளையும்கூட கலைக் கண்களோடு பார்க்கின்ற தன்மை தமிழருக்குரிய மிக மிக நல்ல வழக்கமாக இருக்கிறது. அதற்காகத் தவறுகளையே கலைக் கண்களோடு பார்த்து, அப்படிப் பார்க்கிற காரணத்தால் தவறுகளை எல்லாம் சரியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமா? — என்பதும் முழுவதும் ஒப்புக்கொள்ளக் கூடிய தல்ல. இம்மாதிரியான தவறுகள் — மன்னிக்கக் கூடிய பிழைகள் — நமக்கு நாமே சரி செய்துகொள்ளக் கூடியவைகள். சமுதாயத்திற்கும், அறிவுக்கும் கேடு பயக்கக் கூடிய தவறுகள் பலவற்றை கலைக் கண்ணேடு நோக்கி — நாட்டுக்கே தீமையை உண்டாக்குகிற மனப்பான்மை தொலையவேண்டு மென்பதிலே அக்கரை கொண்டவன் நான். எனக்குத் தரப்பட்ட தலைப்புக்கு ஒத்து வருகிற காரணத்தால் இதைக் குறிப்பிடலானேன்.

எனக்குத் தரப்பட்டிருக்கிற தலைப்பு "கலையும் மனிதனும்' என்பது-இந்தத் தலைப்பு பல இடங்களிலே தருவதுபோல நானே தந்த தலைப்பு அல்ல. இந்தப் பாசறையில் உள்ளவர்கள் தந்த தலைப்பாகும் இந்த உலகத்து உயிர்ப்பொருள்கள் அத்தனையிலும் மனிதன் ஒருவன்தான் கலையை உணருகிறவன்; அச்சக்தி படைத்தவன்; கலைகளைப் பலவிதமாகப் பாகுபடுத்தி—அப்படிப் பாகுபடுத்திய கலையிலே ஓவியக்கலை, சிற்பக்கலை, இலக்கியக்கலை என்று மிகமிக நுட்பமாக ஆராய்கிறவன் மனிதன் ஒருவன்தான்.

"மிருகங்களும் — கலையும்" என்றுஏன் போட்டிருக்கக்கூடாது? காரணம், மிருகங்கள் கலையுணர்ச்சியற்றவைகள்; அவைகள் கலையுணர்வோடு தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றவைகள் அல்ல; மிருகங்கள் உயிர்வாழுகின்றன. மனிதனே வாழ்க்கை நடத்துகிறான். மிருகங்களுக்கும் வாழ்க்கையுண்டு; வாழ்க்கை என்பது மனிதனுக்கும், மிருகங்களுக்கும் பொதுவான ஒன்று — என்றாலும் மனிதன் வாழ்க்கை நடத்துகிறான்; மிருகங்கள் வாழ்க்கை நடத்துவதில்லை. உயிர் வாழ்கின்றன.

மனிதன் வாழ்க்கை நடத்துகின்ற நேரத்தில் வாழ்க்கைக்குத் தேவையானவைகளை — வசதியானவைகளைச் செய்து கொள்ளுகிற நேரத்தில், முதலிலே அவைகளைக் கரடுமுரடாகச் செய்தாலும்—நாகரீக மற்ற முறையிலே செய்தாலும் — வாழ்க்கை நடத்துகிற நேரத்தில் கலையுணர்வும் அவனோடு சேர்ந்து சேர்ந்து—இணைந்து இணைந்து — பொருந்திப் பொருந்தி—வாழத்தலைப்பட்டான். நாம் உலக சரித்திரத்திலே மனிதனுடைய வாழ்க்கை, ஆரம்பமாகிற கட்டத்திலேயிருந்து பார்ப்போமேயானால் — பச்சை மாமிசத்தைச் சாப்பிட்டு—மரப்பட்டைகளிலே எழுதி-குகைகளிலே வாழ்ந்து — புதர்களிலே படுத்துத் தூங்கி—ஆகாயத்தையே கூரையாகவும், தரையையே தன்வீட்டுக் கூடமாகவும் கருதிக்கொண்டு வாழ்ந்த மனிதனின் வரலாறு—மனிதன் கலையுணர்ச்சியோடு வாழத்தலைப்பட்டதை எடுத்துக்காட்டுகிறது.

முதலில் அவனுக்கு உணவுதான் தேவைப் பட்டது என்றாலும், அடுத்து அவனுக்கு வேறு ஒன்று

தேவைப்பட்டது. அவனது வயிற்றுப்பசி அடங்கிய பிறகு, அவன் சிந்திக்கத்தொடங்கினான். சிந்திக்கத் தொடங்கிய காலத்திலேயே, கலையுணர்வும் அதோடு சேர்ந்து எழத்தொடங்கி விட்டது. நீங்கள் படித்திருக் கலாம் சிலர் — கேட்டிருக்கலாம் பலர்; இன்று நாம் காணுகிற பலபல அதிசயப்பொருள்களுக்கெல்லாம் வித்திட்டதுபோல பழைய கலையுணர்ச்சியோடு கூடிய நாகரீகங்கள் அந்தக் காலத்திலேயே தோன்றியிருக் கின்றன.

மனிதன் ஒரு மிருகத்தை வேட்டையாடித் தின்று விட்டு அதன் தோலை ஒரு மரத்திலே போட்டிருக் கிறான் — காயவைப்பதற்காக -- என்று அங்கு அவன் போடாவிட்டாலும், ஏதோ அங்கு போடு வோம் என்று வீசி எறிய -- அந்தத் தோல் நன்ற காக் காய்ந்து -- காற்றடித்த காரணத்தால் மரக் கிளை பட்டு பட்டு -- படுகிற நேரத்திலே ஒரு ஒலி உண் டாக -- அதைப் பார்த்துக்கொண்டிருக்கிற மனிதன் அந்த நிகழ்ச்சியைப் பற்றிச் சிந்திக்கிறான். அதன் பிறகு அத்தகைய தோல்களை தானே காயவைத்து, கொம்புகளைத் தானே ஒடித்து, காய்ந்து இருக்கிற தோலிலே தானே தட்டிப்பார்த்து ஒலி உண்டாக்கு கிறான். பிறகு அப்படி ஒலி உண்டாகிற காய்ந்த தோலை இன்னொரு பொருளிலே கட்டி -- மரக் கிளை யிலில் அடித்து, அடித்து ஒலி உண்டாக்கினான். அது தான் — பறையாக — போர்முரசாக-ஒரு காலத்தில் அரசர்கள், பகைவர்கள் தங்கள் நாட்டின்மீது படை யெடுத்து வருகின்ற நேரத்தில், மற்றவர்களுக்கு அறி விக்கின்ற முரசமாகவும்; இன்னொரு நாட்டிலே பெற்ற வெற்றியை நாட்டு மக்களுக்கு அறிவிக்கின்ற

வெற்றி முரசமாகவும் — மகிழ்ச்சி நாட்களைக் கொண் டாடுகின்ற மங்கல முரசமாகவும்— பயன்பட்டது என் பதை நாம் அறிகிறோம்.

இதற்குக் காரணம் மனிதன் சிந்தித்தான். அந்த சிந்தனையிலே விளைந்த கலைஉணர்வு காய்ந்த தோலை ஒரு பொருளிலே கட்டச்செய்தது. கட்டப்பட்ட தோல் கடைசியிலே முரசமாக மாறியது.

மூங்கில் கம்பிலே வண்டு துளைக்க—துளைத்த காரணத்தால் துவாரங்கள் ஏற்பட—அந்தத் துவாரங் களிலே தென்றல் நுழைய — நுழைந்த தென்றல் அங்கிருந்து வெளிக்கிளம்பிப் போகிற நேரத்திலே ஒரு ஒலி உண்டாக—" இது எப்படி உண்டாகிறது?" என்று யோசித்துப்பார்த்து, காதை வைத்துக்கேட்டு அந்த ஒலி எங்கேயிருந்து வருகிறது என்று ஆராய்ந்து மூங்கில் குழாயில் காற்று நுழைந்து வெளி வருகிற காரணத்தால் — அதிலிருந்து ஒலி உண்டா கிறது என்று கண்டுபிடித்து அவனும் அதைப்போல மூங்கில்களை வெட்டி, துளைபோட்டு, தன்னுடைய வாயில் வைத்து, அதை ஊதிக்காட்டிய நேரத்தில் அங்கிருந்து நாதம் எழும்பியது! ஒலி கிளம்பியது!! அதையே அவன் குழலாக — புல்லாங்குழலாக மாற் றிக் கொண்டான்.

இப்படி இயற்கையைக் கண்ட மனிதன், அதிலே கலையம்சத்தையும் சேர்த்த காரணத்தால், மக்களுக்குத் தேவையான பலபல நல்ல பொருள்களைத் தரக்கூடிய அளவுக்குப் பக்குவம் பெற்றான்.

மனிதன் கலா உணர்ச்சியோடு வாழுகிற நேரத் தில் தான் அவன் மற்றவர்களோடு பழக முடிகிறது.

இங்கே இருக்கின்ற பெண்மக்கள் சேரிக்குச் சென்று, அங்கே, நாகரீகமற்று இருக்கின்ற ஆதிதிராவிடப் பெண்மணிகளையும், அவர்கள் வீட்டு அரும்புச் செல்வங்களையும், அழைத்து நிறுத்தி, பரட்டையாக இருக்கின்ற தலைகளிலே எண்ணெயிட்டு, சீவி, அவர்களுடைய கருத்திருக்கிற முகங்களிலே அழகான பொட்டுகளை இட்டு, நல்ல வெள்ளை உடைகளை உடுக்கச் செய்கிறார்கள் என்றால் அதிலே சுத்தமாக இருக்க வேண்டுமென்பது மாத்திரம் பொதிந்து கிடக்கவில்லை. அங்கே கலையழகும் மின்னுவதைக் காண்கிறோம். ஆகவேதான், "கலையும் — மனிதனும்" என்ற தலைப்பு. மனிதன் கலையம்சத்தோடு தான் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்திக் காட்டுகிறது.

கிரேக்கத்திலே ஓவியக்கலை பன்னெடு நாட்களுக்கு முன்பு நல்ல முறையிலே பரவி வளரத் தொடங்கியது. அங்கு இருந்த ஓவியர்கள் இயற்கைக்கு முரண்படாத அளவிலே ஓவியங்களைத் தீட்டிக் காட்டினர்கள். நம் நாவலர் அவர்கள் தீட்டியுள்ள "பண்டைக் கிரேக்கம்" எனும் நூலில் கிரேக்கத்திலே இருந்த ஓவியர்களிலே சிறப்பு வாய்ந்த இருவரான, "சுக்ஸிஸ்; பாராசியஸ்" என்கின்றவர்களிடையே ஒரு காலத்திலே போட்டியே ஏற்பட்டது எனக் குறிப்பிடப்படுகிறது. என்ன போட்டி? ஓவியம் வரைவதிலே யார் நிபுணன் என்கிற பெரிய தொரு போட்டி! போட்டிக்காக, ஒரு பெரிய மன்றமே அமைக்கப்பட்டது. ஒருவன் ஒரு அழகான திராட்சைக் குலையை எழுதிக் காட்டி அதை மன்றத்திலே தொங்கவிட்டான். எழுதிய திராட்சைக் குலை

யைக் கண்டதும் பக்கத்திலே மரங்களிலே இருந்த பசுங்கிளிகளெல்லாம் ஓடிவந்து அந்தத் திராட்சைப் பழத்தைக் கொத்த ஆரம்பித்தன. அவைகளுக்கு அது ஓவியம் என்று தெரியவில்லை. அவ்வளவு இயற்கையாகவே எழுதியிருந்தான், அதைக் கண்ட ஓவியன் சுக்ஸிஸ், பாராசியஸ் என்கின்ற மற்றவனைப் பார்த்து, "பார்த்தாயா, என்னுடைய மகத்துவத்தை? திராட்சைக்கும் ஓவியத்திற்கும்கூட வித்தியாசம் தெரியாத கிளிகள் பறந்து வந்து கொத்துகின்றன, இதை மிஞ்சுகின்ற உன்னுடைய ஓவியம் எங்கே?" என்று இறுமாப்போடு கேட்டான்.

உடனே, பாராசியஸ் அவனைக் கூப்பிட்டு "எங்கே என்று கேட்கிறாயா? அதோ இருக்கிறது என்னுடைய ஓவியம்! அந்தத் திரைச் சீலையை நீக்கிவிட்டுப் பார்!" என்று சொன்னான். உடனே திராட்சைக் குலையைத் தீட்டிய ஓவியன் ஓடோடிச் சென்று தூரத்தில் இருந்த திரைச் சீலையை நீக்கினான். ஆனால் நீக்க முடியவில்லை, அந்தத் திரையே ஒரு ஓவியமாக இருந்தது. அத்தகைய ஓவியர்களது பரம்பரை — கிரேக்கத்திலிருந்து வளர்ந்த அந்தப் பரம்பரை, உலகத்திலே, நாலா பகுதிகளிலேயும் பரவியது. தமிழகத்திலும் அத்தகைய ஓவியர்கள் இருந்தார்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஓவியர்கள் இயற்கைக்கு முரண்படாத ஓவியங்களைத் தீட்டினர்களா என்றால், ஒரு சிலர் தீட்டினர்கள்; மிகப்பலர் இயற்கைக்கு முரண்பாடான ஓவியங்களைத்தான் கலை வடிவத்திலே மக்களுக்குத் தந்தார்கள்

ஒரு பெண், கையிலே ஒரு தாமரை மலரை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாள் என்று ஓவியம் தீட்டினால், அதிலே இயற்கை இருக்கிறது. அதைப் பார்த்த ஒரு கவிஞனுக்கு, அதிலிருந்து ஒரு கவிதையும் தோன்றும். கையிலே வைத்திருக்கிறாளே தாமரை மலர், அந்த மலருக்கும், அவள் முகத்துக்கும் கொஞ்சம்கூட வித்தியாசந் தெரியவில்லை; பார்த்தாயா? எந்த அளவுக்கு அந்தச் சித்திரத்தைத் தீட்டியிருக்கிறான் பார்த்தாயா? என்று அந்தக் கவிஞன் அங்கே ஒரு கவிதை எழுதிவிடுவான். அது இயற்கைக்கு முரண்படாத கலை. ஆனால், நமது தமிழ்நாட்டு ஓவியர்கள் மனிதனுக்குத் தேவையான கலையை, இயற்கைக்கு முரண்பட்ட அளவிலே பிறகு எழுதத் தொடங்கினார்கள், கையிலே தாமரை மலரை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிற பெண்ணை, அந்தத் தாமரை மலரிலேயே நிற்கவைத்து, தண்ணீரிலே மிதக்கவிட்டார்கள், அப்படி நிறுத்தப் பட்ட பெண்ணுக்கு இரண்டு கைகளல்ல நான்கு கைகள் என்றும் சொன்னார்கள், அந்தப் பெண்ணுக்கு, "இலக்குமி" என்று பெயரிட்டார்கள். இதுதான் இயற்கைக்கு முரண்பட்ட கலை. இயற்கையோடு இணையாத கலை — என்று அறிவியக்கத்தவர்கள் கூறுகிறார்கள். நானும் கூறுகிறேன், எங்கும் என்னுடைய கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்ற அத்தகைய நெஞ்சுறுதி படைத்துவிட்ட காரணத்தால்.

இராமாயணத்திலே ஒரு அம்பு; அதைப் போலவே சங்க இலக்கியத்திலே ஒரு அம்பு. இந்த இரண்டு அம்புகளும் நம்முடைய நாட்டிலே தேவைப் படுகிற கலையை எவ்வளவு அழகாகச் சொல்லுகின்றன

என்று பாருங்கள். சங்க இலக்கியத்திலிருந்து கிடைக்கின்ற அந்த அம்பு, ஒரு வீரனுடைய அம்புருத்தூணியிலிருந்து புறப்பட்டு ஒரு புலியினுடைய வயிற்றைக் கிழித்து — அதாவது ஒரு விலாப்புறத்திலே நுழைந்து, இன்னொரு விலாப்புறத்தின் வழியே வெளிப்பட்டு — பக்கத்திலே இருக்கிற வாழைமரத்திலே தொத்திக்கொள்ளுகிறது. இது சங்க இலக்கியத்து அம்பு! நீங்கள் கேட்கலாம், புலியினுடைய ஒரு விலாவினைக் கிழித்து, இன்னொரு விலாவின் வழியாக வெளிப்பட்ட அம்பு எப்படியப்பா வாழை மரத்திலே தொத்திக் கொள்ளும்?" என்று. அங்கே தான் கவிதை நயமும்; கலை அழகும் ஒன்றை யொன்று பின்னிக் கொண்டு கிடக்கின்றன, புலியினுடைய விலாவிலே நுழைந்துவிட்ட காரணத்தால், அம்பினுடைய வேகம் குறைந்து வாழை மரத்திலே தொத்திக் கொள்ளுகிறது. அம்பினுடைய வேகம் எப்படிக் குறைந்தது என்பதை — அதை வாழை மரத்திலே தொத்த வைத்து அந்தக் கவிஞன் அழகாகக் காட்டியிருக்கிறான். கலையைச் சமைத்திருக்கிறான்.

அதே நேரத்தில் இராமாயணத்திலும் ஒரு அம்பு புறப்படுகிறது. இராமனுடைய அம்புருத் தூணியிலிருந்து புறப்பட்ட அம்பு, எதிரே இருக்கிற இராவணனுடைய சேனைகளையெல்லாம் அழித்துவிட்டு, பிறகு அங்கிருந்து புறப்பட்டு, இராவணனுடைய பத்து தலைகளையும் அறுத்து எறிந்துவிட்டு, இராவணன் சீதையைப்பற்றி நினைத்திருக்கிறானே—என்பதற்காக அவனுடைய இரத்தத்திலே நீந்தி—எலும்புகளில்—நரம்புகளில் எல்லாம் நுழைந்து சென்று, சீதையி

னுடைய நினைவுகளை அழித்துவிட்டு, பிறகு தன் மேலிருக்கிற இரத்தத்தைக் கழுவிக் கொள்ளுவற் காக வங்காளக்குடாக் கடலிலோ, இந்துமகா சமுத் திரத்திலோ சென்று குளித்துவிட்டு, மறுபடியும் இராமனுடைய அம்புருத் தூணிக்கே வந்து உட்காரு கிறது; அல்லது படுக்கிறது; அல்லது தூங்குகிறது அது இராமாயணத்திலே வருகிற ஒரு அம்பு! அங்கே கலை இயற்கைக்கு முரண்பட்ட கலையாகி விடுகிறது. சங்க இலக்கியத்தில் மிகைபடுத்திக் கூறப்பட்டாலும் இயற்கையோடு இணைந்த கலையாக; இயற்கைக்கு முரண்படாத கலையாக இருக்கிறது. "கலையும் மனித னும்" என்று நினைக்கிற நேரத்தில், மனிதனுக்குத் தேவையான கலை இயற்கைக்கு முரண்படாத கலை யாக இருக்கவேண்டும். இயற்கையோடு இணைந்த கலையாக இருக்கவேண்டும்—என்று நாம் சொல்லு கிறோம். கலையிலே இத்தகைய நிகழ்ச்சிகள் மாத்திர மல்ல, ஓவியம் மாத்திரமல்ல; சிற்பம் மாத்திரமல்ல; நான் குறிப்பிட்டேனே அம்புகளைப்பற்றி—அதைப் போன்ற இலக்கியச் சுவைகள் ஏராளம்! ஏராளம்!

திருவள்ளுவர் தன்னுடைய திருக்குறளை இவ் வளவு எழிலோடு எழுதியிருக்கிறார் என்றால், அதிலே இருக்கிற அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால்—இந்த முப்பாலையும் படித்துணர்ந்தோர் அவர் எவ்வளவு கலைச் சுவையோடு, எவ்வளவு கலையழகு சொட்டச் சொட்ட குறளை யாத்திருக்கிறார் என்பதை அறிவுள்ளோர்—கலாரசிகர்கள்—அத்தனை பேர்களும் நல்ல முறையிலே உணரமுடியும்! இங்கே பாடிக் காட்டப்பட்ட குறட் பாக்களும்; நடனமாடிக் காட்டப்

பட்ட குறட்பாக்களும் எவ்வளவு கலையழகோடு பொறுத்தப்பட்டவைகள் என்பதை நீங்கள் உணர முடியும்.

எங்களுக்கு கலையுலகத்திலே தொடர்பு இருக்கிறது. இல்லே, நாங்களும் கலையுலகத்திலே இருக்கிறோம். தொடர்பு இருக்கிறது என்று சொன்னால் கூட அது வேறு; இது வேறு என்றாகிவிடும். மனிதனுடைய வாழ்க்கையிலே அத்தனையும் கலைதான். குழந்தையின் மழலைமொழி கலையாக்கப்படுகின்றது வள்ளுவரால், யாழைவிட — குழலைவிட இனியது என்று சொல்லப்படுகிறது. குழந்தையின் மழலைக் குரலிலிருந்து சாகிற போது கேட்கிற மரணக்குரல் வரையிலே கலையம்சம் நிரம்பியதாகத்தான் இருக்கிறது; ஆகவே மனிதனுடைய வாழ்க்கையில் கலை இல்லாது எதுவுமில்லே. மனிதன் — கலை = காட்டுமிராண்டித்தனம்.

சிலர் கேட்கிறார்கள், "கலை, கலைக்காக இருக்க வேண்டுமா? கலை, வாழ்வுக்காக இருக்க வேண்டுமா?" என்று. இந்தப் பாசறையைப் பொறுத்த வரை கலை, கலைக்காகவே இருக்க வேண்டுமென்று நினைப்பவர்கள் அல்ல. கலை வாழ்க்கைக்காக இருக்க வேண்டுமென்று கருதுகிறவர்கள்தான் நிறைந்திருக்கிறார்கள், என்பதற்கடையாளமாகவே, "கலையும் மனிதனும்" என்று தலைப்பு தந்திருக்கிறார்கள்.

இன்னுமொரு குரல் எங்கிருந்தோ கிளம்பும். "கலையைப் பிரச்சாரத்திற்குப் பயன் படுத்தலாமா?" என்று. "பிரச்சாரம்" என்பதற்கு அவர்கள் என்ன

பொருள் கொள்ளுகிறார்கள் என்பதை நாம் அந்த நேரங்களில் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

ஒருவனிடத்திலே சென்று, "நீ கள் குடிக் காதே!" என்று சொல்லுவது கூட பிரச்சாரம்தான், இங்கு நடிக்கப்பட்ட நாடகத்திலே "கள் குடிக்கக் கூடாது" என்று எடுத்துச் சொன்னார்கள். அதுவும் கூடப் பிரச்சாரந்தான்! அந்தப் பிரச்சாரத்தைப் பரப்ப இங்கு கலை பயன்படுத்தப்பட்டது. ஆகவே, கலையை எப்படிப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தாது இருக்க முடியும்? மத மார்க்கங்களைப் பரப்ப இராமா யணம் போன்ற—மகாபாரதம் போன்ற இதிகாச நூல்களும் அவைகளை எடுத்துக் காட்ட நாடக மேடைகளும் இருந்தன. கந்தபுராணம் சைவத்தை யும்; இராமாயண நாடகங்கள் வைணவத்தையும் பரப்ப உண்டாக்கிய பிரச்சார சாதனங்கள்தான். அதைப்போலவே ஒரு எழுத்தாளன் — ஒரு அறி வியக்கவாதி தன் கருத்துக்களைச் சொல்ல எப்படித் தன் பேனுவை எடுக்கிறானே, அந்தப் பேனுமுனை எழுப்புகின்ற குரல் நாட்டுமக்களுக்கான அறிவுரை யாக இருக்குமேயானால் பிரச்சாரம் என்று சொல்லு கின்ற வார்த்தையால் அவைகளை மூடிவிடக் கூடாது. கலையிலே பிரச்சாரம் தேவை.

அதே நேரத்தில், எதுவும் அளவுக்கு மீறக் கூடாது என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அதை உணராதவர்கள் அல்ல; எந்த இடத்திலே, எப்படி யெப்படி, எந்தெந்தக் கருத்துக்களை — எந் தெந்தப் பாணியிலே, "கேட்டார் பிணிக்கும் தகைய வாய், கேளாரும் வேட்ப" எங்களுடைய வார்த்தை

களைச் சொல்ல வேண்டும் என்பதையும் நாங்கள் உணர்ந்திருக்கிறோம். "இவர்கள் பேச்சாளர்கள்; இந்தப் பேச்சுக் கலையால் என்ன சாதித்துவிடமுடியும்?" — கேட்டார்கள் தேர்தல் நேரத்திலே! இப்போதும்கேட்பார்கள். ஆனால், அந்த பேச்சுக்கலையைப் பற்றி வள்ளுவர் சொல்லுகிறார் – இங்கே பாடிக்கூடக் காட்டினர்கள், "வில்லேருழவர் பகைகொளினும் கொள்ளற்க சொல்லேருழவர் பகை" வில்பிடித் திருக்கும் வீரனுடைய பகையைக் கொண்டாலும் கொள்ளலாம்; சொல்லால் அடிக்கின்ற அந்த உழவன் இருக்கிறானே — பேச்சாளன் — பேச்சுக் கலையிலே வல்லவன் — அவனுடைய பகையை யாரும் கொள்ளாதீர்கள் என்ற அறிவுரையை வள்ளுவர் சொல்லியிருக்கிறார். நாங்கள் சொல்லே ருழவர்கள் என்பதற்காக எதை வேண்டுமானாலும் சொல்லிவிடலாமா? — என்றால், அதற்கும் திரு வள்ளுவர் கூறுகிறார், "இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" மேடையிலே பேசுகிறவர்கள் எல்லாம், பேச்சாளர் கள் அல்ல; அதிலே காய் பறிப்பவர்களும் இருக் கிறார்கள். மேடையிலிருந்து மற்றவர்களை வசைமாரி பொழிகிறவர்களும், இவர்கள் இன்ன ஜாதியினர்; இவர்கள் இன்னாருக்குப் பிறந்தவர்கள்; இவர்கள் இப்படிப்பட்டவர்கள்; இவர்கள் அதைச் செய்தார் கள்; இதைச் செய்தார்கள் என்று தனிப்பட்ட முறை யிலே தாக்குபவர்களும் பேச்சாளர்கள் என்றுதான் சொல்லப்படுகிறார்கள் நாட்டிலே. அதே நேரத்திலே "இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" என்ற குறளை உணர்ந்த பேச்சா

ளர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். கனியை விட்டு விட்டுக் காயைப் பறிக்கிற பேச்சாளர்கள் பல மேடைகளிலே ஏறுகிறார்கள். அந்தப் பரிதாபமான — அபாக்யமான — துர்ப்பாக்யமான நிலைமையை இந்த நாட்டுப் பொதுமக்கள் பலப் பல நேரங்களிலே அனுபவிக்கவே வேண்டியிருக்கிறது.

கனி பொழிகின்ற பேச்சாளர்கள் தமிழக மெங்கிலும் இருக்கிறார்கள், அவர்களுக்கு வழிகாட்டி "காஞ்சியிலே" இருக்கிறார்கள் – அத்தகைய பேச்சாளர்கள் – அந்தக் கனி மூலம் கருத்தைத் தருகின்ற பேச்சாளர்கள் — பேச்சைத் தங்களுடைய கலையாக வைத்துக் கொண்டு, அந்தக் கலை மூலம் நாட்டுக்குத் தேவையான கருத்துக்களைச் சொல்லுவதும்; "கலையும் – மனிதனும்" என்ற பொருளுக்குக் கீழ் நிச்சயமாக அடங்கும் என்கின்ற காரணத்தால் அதை நான் சொல்லத் துணிகின்றேன். இந்த அளவிலே கலை, மனிதனுக்கு நாகரீகப் பாதையில் செம்மையோடு நடக்க மிக மிகத் தேவைப்படுகிற ஒன்று என்பதை உங்களிடத்திலே கூறிக்கொண்டு, "அந்தக் கலை வாழ்க! அந்தக்கலை கருத்தோடு வளர்க! அந்தக்கலை செழித்து ஓங்குக!" என்று கூறி சமூகப்பணி புரிகின்ற சகோதரிகள் கலைப் பணியையும் தங்களுடைய பணிகளிலே ஒன்றுகக் கருதி — தேனிலே மருந்து கலந்திடுதல் போல், கலைப்பணியோடு நல்ல நல்ல கருத்துக்களைக் குழைத்துத் தருவார்களேயானால், நாட்டுக்கு நல்லதோர் சேவை புரிந்தவர்கள் ஆவார்கள்.

சேவைபுரிவதிலே தேர்ந்தவர்கள் பெண்கள். ஆகவேதான் இந்தப் பணிபுரியும் பாவையர் முகாம் மிக மிக நாட்டுக்கு அவசியமாகின்ற ஒரு முகாம்.

ஒரு காலத்தில் பெண்கள்தான் நாட்டினுடைய கண்களாக இருந்தார்கள். ஒரு காலத்திலே ஔவை போன்ற கவிஞர்களும்; அவரைப்போன்ற பல தமிழ்ப் பெண்மணிகளும் கவிதா மண்டலத்தைத் தருகின்ற வர்களாக இருந்தார்கள். கையினில் வாளெடுத்துப் போர்புரியவும், சூளுரைத்து நாடு காக்கவும், தங்க ளுடைய நாட்டுக்குத் தேவையான நல்ல காரியங் களிலே ஈடுபடுகிறவர்களாயும் பெண்கள் இருந்தார் கள் என்பதை எடுத்துரைக்கின்ற புறநானூறு செய் யுள்கள் நம்மிடத்திலேதான் இருக்கின்றன. அந்தப் பெண்களுடைய புகழை உயர்த்துகிறது அகமும்— புறமும் — கலிங்கத்துப்பரணியும்—சங்க இலக்கியங் களும்—சிலப்பதிகாரமும், இத்தகைய அருமையான பைந்தமிழ் பனுவல்களை எல்லாம் பெற்றிருக்கிற தமிழகம், பெண்களால் உயரவேண்டும். நாட்டி னுடைய கண்களாகிய பெண்கள் தமிழகத்தினுடைய ஒளி விளக்குகளாகத் திகழ்ந்து, தங்களுடைய சந்த தியை இந்த நாட்டு மன்னர்களாக ஆக்குவதிவே முனையவேண்டும்.

"தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்று கூறுவார்கள். தொட்டிற் பழக்கத்திலேயே நல்ல வீரர்களை உற்பத்தி செய்கின்ற அந்தப் பண்பை வருங்காலத்திலே தரவேண்டிய பெண்கள் அதற் கான நல்ல கருத்துத் தெளிவை இப்போதே பெற வேண்டும், என்று கேட்டுக்கொண்டு அந்தப் 'பெண் சமுதாயம் வாழ்க! அவர்கள் பணி புரியும் இந்தப் பாசறை வாழ்க! இந்தப் பாசறைக்கு ஆக்கமளிக் கிற பெரியவர்கள் அனைவரும் வாழ்க! வாழ்க!!" என வாழ்த்துகிறேன்.

(கொடவாசல் "பாரத் சேவக் சமாஜ்" 26—5—'57)

விடுதலை வீரன் கூண்டிலே

ஆட்சிக் கொடியை நெருப்பிலே போட்டார்கள் — சட்டத்தைச் சுட்டெரித்தார்கள் — பாதுகாப்புப் படையின் மீதும் தங்கள் பாய்ச்சலே நடத்தினர்கள். பயங்கரமான நடவடிக்கைகள் — பாதைகள் பல பாழாக்கப்பட்டன — பாலங்கள் இடிக்கப்பட்டன — மந்திரிகள் கூடிப் பேசும் மாமன்றங்கள் மண்மேடாகி விட்டது. இவர்களது வெறிச் செயல்களால் விண் முட்ட நின்ற நமது கொடிக் கம்பத்திலே இவர்களது விடுதலைக் கொடியைப் பறக்கவிட்டு சுதந்திர கீதம் பாடினர்கள். பாசறைகளில் தீ கொழுந்து விடவும் — பாராளும் வேந்தன் ஓய்வுபெறும் மாளிகையில் வெள்ளம் நுழையவும் — கோட்டை கொத்தளங் களில் காவல் புரிந்த வீரர்கள் ஓட்டமெடுக்கவுமான மூர்க்கப் போராட்டம் மூட்டிவிடப்பட்டது. அடுத்த நாட்டு மன்னரின் அவசர உதவி உடனடியாக நமக் குக் கிடைக்காமற்போயிருந்தால் ஆட்சியும் கவிழ்ந் திருக்கும்; இந்த அராஜகவாதிகளும் ஆட்சிக்கரத்தை இந்நேரம் உருட்ட ஆரம்பித்திருப்பார்கள். நல்ல வேளை, நாம் செய்த பூஜாபலன் நமது உயிரும், நமது மன்னர் உயிரும் காப்பாற்றப்பட்டதோடு — கயவர்கள் பிடியில் நாடு சிக்காமலும் மீட்கப்பட்டது.

அவையோர்களே! புயலுக்குப்பின் எழுந்துள்ள அமைதியான நிலைமையை நினைந்து ஆறுதல் பெறு வது ஒருபுறமிருக்கட்டும், புயல் கிளம்பியதற்குக் காரணமாயிருந்த இந்தப் புரட்சிக்காரனை – விடுதலை.

இயக்கத்தின் தலைவனை விசாரணை செய்து தீர்ப்புக் கூறவேண்டிய அவசர, அவசியமான கட்டத்திலே யிருக்கிறோம் நாம். சொல்லப் போனால் இவன் புரட்சிக் காரன் மட்டுமல்ல — மகா பயங்கர வாதி ! பயங்கர வாதி மட்டுமல்ல — படுநாசப் வினைவிக்கச் சிறிதும் தயங்காத பரமபாதகன் — பாராளுமாமன்றத்திலே இவன் ஒரு பிரதிநிதி — தனி ஆளாக நின்று இது வரையில் நமது ஆட்சியைச் சட்டபூர்வமாகக் குறை கூறி வந்தவன் — தனக்குப் பின் லட்சோப லட்சம் பயங்கரவாதிகளை அணிவகுத்து நிறுத்தித் திடீரென ஆட்சியைக் கவிழ்ப்பதற்குப் பலாத்காரத்தின் துணையை நாடியிருக்கிறான் இவன் லட்சியம் நிறை வேறி நாமெல்லாம் இவன் கையிலே அகப்பட்டிருப் போமானால் நமது எலும்புகளைக்கூட நமது அன்புக் குரிய குடும்பத்தாரிடமோ, நண்பர்களிடமோ, தருவ தாக உத்தேசமில்லை இந்த விடுதலை இயக்கத்துக்கு! இந்த நாட்டுக்குரிய பெயரை அளிக்க மறுத்தோமாம். சாதி வெறிக்குத் தூபமிட்டோமாம். மொழியைப் பலியிடச் சதி செய்தோமாம். கலாச் சாரத்திலே கை வைத்தோமாம். அடுத்த நாட்டுக் காரனிடத்திலே இவர்களை யெல்லாம் சேர்த்து அடமானம் வைத்தோமாம், இப்படி ஆயிரக் கணக் கில் குற்றச்சாட்டுகள் விடுதலை இயக்கத்தினரால் நம்மீது சுமத்தப்படுகின்றன. இவைகளுக்கெல்லாம் ஆதாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஏன் என்று கேட்கும் அதிகாரத்தை இவன் எப்படிப்பெற முடியும்? இவன் நமது ஆட்சிக்குட்பட்டவன், இந் நாட்டில் நமது ஆட்சி வேரூன்றி நிலைக்கத் தேவை யான நல்ல யோசனைகளை அளிப்பதற்கு மட்டுமே

இவன் அனுமதிக்கப்படுவானே யன்றி ஆட்சியை மாற்றியமைக்க வேண்டுமென்ற ஆணவ எண்ணமும் —அதன் காரணமாக மிருக வெறிப் போராட்டமும் தோன்றுவதற்கு ஒருக்காலும் இடந்தராது இந்த ஆட்சிபீடம். ஆகவே, —

"புனிதமான நாட்டுக் கொடியைக் கிழித்தது —
போற்றுதற் குரிய நாட்டுப் பாடலை எரித்தது—
பெருமைக் குரிய சட்டத்தை நெருப்பிலிட்டது —
மாமன்றத்தைப் பாழாக்கியது —
ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்தது —

ஆகிய இத்தனை பயங்கர நடவடிக்கைகளையும் தூண்டிவிட்ட குற்றம் விடுதலை இயக்கத்தின் தலை வனுகிய இவனையே சேருகிறது—அதனல் இவன் தண்டிக்கப்பட வேண்டியவன்—தலை துண்டிக்கப்பட வேண்டியவன்.

—ஆவேசமும் துடிப்பும் மிகுந்த உரையை முடித்துவிட்டு நீண்ட பெருமூச்சுடன் இருக்கையில் அமர்ந்தார் மன்றப் பெரியவர்.

தும்பை மலர்போல வெளுத்து தொப்பூழ்வரை தொங்கிக் கொண்டிருக்கும் அழகிய தாடி. நீண்ட பெரு மூக்கு. அகன்ற கண்கள்! விரிந்த புருவம்! ஏறிய நெற்றி! ஏறு நடை! இளைஞனின் குரல்! இவ்வளவு லட்சணங்களும் கொண்ட அந்த முதியவர் தான் மன்றத்தின் மரியாதைக்குரியவர்.

அவரது நீண்ட பேச்சுக்குப் பிறகு, குற்றம் சாட்டப்பட்ட விடுதலைத் தலைவன் பேச்வேண்டும்.

தான் குற்றமற்றவன் என்று நிரூபிக்க வேண்டும். தவறினுல் மன்றம் அவனுக்கு மரண தண்டனை வழங்கத் தயாராக இருக்கின்றது.

அவன் என்னதான் முயன்ருலும் தன்னை நிரபராதி என்று சாதிக்க முடியாது. நியாயம் அவன் பக்கமிருந்தாலும்—நீதியின் தராசு அவன் பக்கம் சாய்ந்திருக்கவில்லை. அது அவனைத் தவருகவே எடை போடத் தயாரிக்கப்பட்டுவிட்டது.

மன்றத்துப் பெரியவராம் முது கிழவர், அவனைப் பற்றிய குற்றங்களை அடுக்கிக் காட்டி அவன் தண்டனைக்குரியவன் என்று வாதிடும்போது ஏனே தெரியவில்லை; அந்தக் கூண்டிலே நிற்கும் வீரனின் விழிகளிலே நீர் ததும்பியது, அவன் இறுதியாக பேச ஆரம்பித்தான்.

"அவையோரே! அவையோரே! இந்த அவையில் நாட்டுப் பிரதிநிதிகளில் ஒருவனுக அமர்ந்திருந்த நான், இன்றையதினம் கூண்டிலே நிறுத்தப்பட்டு—கோர விளையாட்டுகளுக்குக் காரணம் நானேதான் என்று குற்றம் சாற்றப்பட்டு "என்ன தண்டனை?" என்பதை மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன். மன்றத்துப் பெரியவர் என்மீது தூண்டுதல்—பலாத்காரம்—மிருக வெறிச் செயல்—ஆகிய குற்றங்களைச் சுமத்தியிருக்கிறூர். நாடு உங்கள் கையிலே யிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணத்தை இந்த மன்றத்தில் பலமுறை வெளியிட்டிருக்கிறேன். அதற்குப் பதிலாக உங்களுடைய கேலிப் பேச்சையும்—இழிவும் பழியும் மிகுந்த உரை

களையும் கேட்டிருக்கிறேன். சட்டத்தை மீறுத அளவில் எனது வாதங்களை எடுத்துரைத்து—எதிர்காலத்தைப் பற்றிய எச்சரிக்கையும் விடுத்து—நாட்டிலே சுதந்திரக்கனல் மூண்டெழுகிறது; விடுதலை உணர்வு அங்கிங்கெனுதபடி எங்கெங்கும் உடைப்பெடுக்கிறது—என்ற அறிவிப்பையும் காலா காலத்தில் தந்திருக்கிறேன். விடுதலை வேட்கை கொண்ட மக்களின் எழுச்சியை அலட்சியப்படுத்தினுல் ஆபத்தை அனைத்துக்கொள்ள நேருமென்றும் அறைகூவல் விடுத்திருக்கிறேன். அமைதியும் சமாதானமும் கலந்த கையிலேயே நாட்டுக்கு சுதந்திரத்தை அளித்து விட்டுப் போய்விடுங்கள்—அதுவே உங்களை உலகம் போற்றுவதற்குரிய சாலச்சிறந்த உபாயமாக யிருக்கு மென்றும் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

"எங்கள் நாட்டில் பிறர் ஆட்சி கூடாது!"

"எமது மண்ணில் எமது கொடியே பறக்க வேண்டும்".

"எமது கொற்றமே நிலவ வேண்டும்".

"எமது சட்டமே அமுலாக வேண்டும்!"

"எமது வளத்தை யாரும் பறிக்க உரிமை கிடையாது"—என்ற முழக்கத்தைக் கேட்டுக் கேட்டு இந்த மன்றத்தின் சுவர்களெல்லாம்கூட ஆட்டம் கொடுத்திருக்கின்றன. அறிவீர்கள் அத்தனையும்.

ஆனல் ஒன்று. அவையோர்களே! நான் உரிமை முழக்கமிடும் போதெல்லாம் என் பேச்சில் எள்ளளவு பலாத்கார வாடையும் வீசக் கண்டிருக்க மாட்டீர்கள்

நீங்கள்! ஆனால் என் தலைமையில் நடைபெற்ற அறப் போரில் உங்கள் கொடிகள் கொளுத்தப் பட்டன—உங்கள் சட்டம் தீயிடப்பட்டது—உங்கள் மாளிகைகள் சீரழிக்கப்பட்டன—அதற்காக நான் மிக மிக வருந்துகிறேன். எனக்கும் அந்த நிகழ்ச்சிகளுக் கும் எந்தவிதத் தொடர்பும் இல்லையென்று நான் கூறுவது தண்டனையிலேயிருந்து தப்பித்துக்கொள்வ தற்காக அல்ல. அல்லது உங்கள் கொடியையும்— சட்டத்தையும் நான் புனிதமாய்ப் போற்றி அதன்கீழ் வாழவேண்டுமென்று விரும்புகிறேன் என்ற பொருளை யும் நீங்கள் யாரும் தவருகக்கொண்டு விடக்கூடாது.

உங்கள் கொடியை மதிப்பேன்—அது உங்கள் நாட்டுக்கோட்டையிலே பறந்து, எங்கள் நாட்டுக் கொடியோடு உறவாடும்போது.

உங்கள் சட்டத்துக்கு மரியாதை தருவேன்—அது உங்கள் நாட்டு மாமன்றத்திலே அனுஷ்டிக்கப்பட்டு எங்கள் நாட்டுக்குத் தனிச்சட்டம் அமைந்துவிட்டதை ஆமோதிக்கிற நேரத்திலே.

இவைபோன்ற மாறுதல்கள் ஏற்படாத வரை யிலே உங்கள் கொடியும் சட்டமும் என் நாட்டுக்கும் எனக்கும் உகந்ததல்ல—அவை கொளுத்தப்பட்டதற் காக வருந்துகிறேன். ஆனால், கொளுத்தப்படக் கூடாத உயர்ந்த பொருள்கள் அவை என்று நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை!

கொளுத்தியவர்கள்—வெறீச் செயல்கள் நடத்தி யவர்கள் யார்? என் தலைமையில் இயங்கும் விடுதலைப் படையைச் சேர்ந்தவர்களா? அல்ல: அல்ல! ஆனா

லும் அவர்கள் என் மரியாதைக் குரியவர்கள். அவர் கள் தங்கள் உயிரையும் திரணமாக மதித்து நாட்டு விடுதலைக்காகத் தியாகத் தீயில் குதித்தவர்கள்!

அவர்களில் சிலர் மாண்டு விட்டார்கள். சிலர் அநியாயமாகத் தூக்கிலிடப்பட்டு விட்டார்கள்! சிலர் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்கள். அந்த வீரர் களுக்கு நான் வீர வணக்கம் செலுத்தக் கடமைப் பட்டவன்! அவர்கள் விடுதலைப் போராட்டத்தை எதிர்பார்த்து ஏங்கிக் கிடந்தவர்கள். தாயகத்தின்மீது படிந்துள்ள கரையை அகற்றுவதற்குத் துடியாய்த் துடித்தவர்கள். என்னைபோலவே, என் விடுதலைப் படையினரைப் போலவே எமது தாயகத்தின் சுதந் திரத்திற்காகத் தவங்கிடந்த உத்தமர்கள்.

அவர்கள் எல்லாம் யார்? என்னுடைய அறப் போரின் உச்ச கட்டத்திலே வெறிகொண்டு உம்மைத் தாக்கி—வெற்றியின் விளிம்பைத் தொடும் நேரத்தில் வீழ்ந்துபோன வீரர்கள் எல்லாம் யார்?

இந்த நாட்டு மண்ணுக்குரியவர்கள் மட்டுமல்ல; சொன்னுல் வெட்கம் – சொல்லாவிட்டால் என்வாதத் திற்கு வலுவில்லாமற் போய்விடும் – இதோ இருக் கிருரே, மன்றத்துப் பெரியவர், முதுகிழவர். இவர் ஒரு காலத்தில் தயாரித்து வைத்த சேனையாகும் அது! என் அன்புக்கும் பாராட்டுதலுக்கு முரிய அந்த சேனைக்குப் பயிற்சி தந்து வளர்த்த பெருமை, இதுவரையில் என்னையும், என் கிளர்ச்சியையும் எதிர்த்து வாதிட்ட பெரியவரையே சேரும்.

இந்த மன்றத்தில் நாடு விடுதலையடைய வேண்டிய அவசியத்தை எடுத்து நான் சொன்ன நேரங்களில் எல்லாம், இந்தப் பெரியவர் மன்றத்துக்கு வெளியே நின்று என்னை இழித்துரைத்து, "ஏடா! மூடா! வாய்ப் பேச்சால், வரப்போகும் ஆபத்தை எடுத்துரைத்து விடுவதால் நாடு கிடைத்துவிடுமா? இதோபார் என் திட்டத்தை –கொடியைப் பொசுக்கு வேன் – கோட்டையைப் பொடிசெய்வேன்!" – என் றெல்லாம் திட்டங்கள் தீட்டியவர்.

இந்த ஆட்சி பீடத்தின் அபூர்வ ராஜதந்திரத் தாலும், மிரட்டல்களாலும் இப்போது அவர் உங்கள் பக்கம் சாய்ந்து விட்டார். அதோடு விடுதலைப் போராட்டத்தின் புனிதத் தன்மையையும் இகழ்ந் துரைக்கும் தன்மையையும் பெற்றுவிட்டார், விடு தலைப் போரில் ஈடுபட்டுள்ள என்போன்ற வீரர்களை யும் காட்டிக் கொடுக்கும் அரிய காரியத்தை அட்டி யின்றிச் செய்து முடிக்கவும் கற்றுவிட்டார்.

அவர் தயாரித்த படை, என் தலைமைக்குப் பணிகிறதோ இல்லையோ – என் போராட்டத்தை ஊக்குவிக்க வேண்டுமென்ற ஆசையில் எனக்கு உறு துணையாக ஓடிவந்து விட்டது படை என்பக்கம்!– படை தயாரித்தவரோ, பகைவர்களாகிய உங்கள் பக்கம்!

இது நான் முன்பே எதிர்பார்த்தது தான். என்னை அழிக்க அவர் உங்கள் பக்கம் சேர்வார் என எண்ணியதுண்டு; ஆனால், மண்ணையே உங்களுக்கு நிரந்தர அடிமையாக்க அவர் நெஞ்சு எப்படித்தான் துணிந்ததோ! – யானறியேன்.

வஞ்சகர்களாகிய உங்களுக்கு வழக்கறிஞராக மாறி – விடுதலைப்போர் நடத்திய எனக்குத் தண்டனை தரவேண்டுமென்று மன்றத்தில் பிராார்த்திக்கும் அவரை, காலமும் – அவர் செய்த பழம்பெரும் பணிகளும் மன்னிக்குமாக!

இதோ நான் பயங்கரக் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகி நிற்கிறேன். அடுத்த நாட்டுப் படைகள் உங்கள் உதவிக்கு வர, சிறிது காலதாமதம் ஏற்பட்டிருந்தால் — என் முன்னே நீங்கள் எல்லாம் குற்றவாளிகளாக நிற்பீர்கள். அதை நான் மறுப்பதற்கில்லை. ஆனால் ஒன்று, ஆட்சியையே மாற்றவேண்டுமென்ற எண்ணம் எப்போது எங்களிடையே எழுந்ததோ — அப்போதே உங்கள் கொடி — கொற்றம் ஆகியவைகளை அலட்சியப்படுத்துகிற நிலையும் — ஒப்புக்காக அவைகளுக்கு அடங்கி நடக்க வேண்டிய நிர்ப்பந்தமும் மட்டுமே எங்களுக்கு ஏற்பட்டுவிட்டது என்பதை நான் சொல்லாமலே நீங்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

ஆட்சியை மாற்றுவோம்; எங்கள் நாட்டைப் பெறுவோம் என்ற முழக்கம் கிளம்பிவிட்ட பிறகு உங்கள் கொடியும் சட்டமும் எங்களுக்கு உயிரற்ற பிணம் போலத்தான். பிணங்களைக் கொளுத்தித் தான் தீரவேண்டும். அதற்கான சூழ்நிலை அரும்பாத காரணத்தால் — திராவகத்தில் பதம் செய்யப்பட்டு, அழுகாமல் கெடாமல் — பாதுகாக்கப்பட்ட சவங்களாகக் கொலுவீற்றிருந்தன உங்கள் கொடியும் சட்டமும். நீங்கள் அவ்வளவு பெருமை கொடுத்துப் பாதுகாத்தீர்கள் உங்கள் கொடியை! அது

அகற்றப்படவேண்டிய காலம் வந்துவிட்டது; இன்று எங்கள் முயற்சியில் நாங்கள் தோற்றுவிடலாம் — நாளை, அல்லது மறு நாள் நிச்சயமாக இந்தக் கோட்டையில் எங்கள் நாட்டுக் கொடிதான் பறக்கும். எங்களை அடிமைப்படுத்தும் கொடி நீண்ட நாள் பறக்க முடியாது. இந்த உறுதி நிறைந்த நம்பிக்கையோடு, உங்கள் தீர்ப்பை எதிர்பார்த்து நிற்கிறேன்.

— கூண்டிலே விடுதலை வீரன் இவ்வாறு முழக்கமிட்டு நின்றான்.

அவையினர் ஒருமுகமாகக் கூறினர். "இவனைத் தூக்கிலிடுக" என்று.

அதற்குள்—மன்றத்துக்கு வெளியே போர் முரசு ஒலித்ததை அனைவரும் திகைப்போடு கேட்டனர்.

"விடுதலை! விடுதலை!!" என்ற ஒலி வானைப் பிளந்தது.

அடுத்த நாட்டுப் படை ஓட்டம் பிடித்தது — "நாடே ஒன்று கூடி விடுதலை முழக்கம் செய்கிறது" என்ற செய்தியுடன் காவலன் உள்ளே நுழைந்து கீழே விழுந்து மாண்டான்.

முரசொலி வேகமாயிற்று.

மன்றத்துக்குள் மக்கள் புகுந்தனர் மடை திறந்த வெள்ளம் போல ... ...

விடுதலைத் தலைவன் காப்பாற்றப்பட்டான்.
மன்றம் மக்களால் வளைக்கப்பட்டது.
கோட்டையிலே புதிய கொடி ஏற்றப்பட்டது.
புதிய சுதந்திர கீதம் இசைக்கப்பட்டது.
அதுதான் நம்பிக்கை நட்சத்திரம்.

———

துறைமுகம் தாரீர்

தமிழ் நாட்டில் துறைமுகங்கள் தேவை என்று முன்பெல்லாம் வெள்ளைக்கார துரை முகங்களைப் பார்த்துக் கேட்டோம். இன்றைய தினம் நம்முடைய நாட்டு மந்திரிமார்களுடைய முகங்களைப் பார்த்து தமிழகத்தில் துறைமுகங்கள் நிரம்ப நிரம்ப வேண்டு மென்று கேட்கின்ற நிலைமையிலே இருக்கிறோம்.

தமிழகத்தில் ஒரு காலத்திலே எந்த அளவுக்கு நல்ல துறைமுகங்கள் இருந்தன என்பதையும், அத்தகைய துறைமுகங்கள் வாயிலாக யவனத்திற் கும்கிரேக்கத்திற்கும் தமிழகத்தினுடைய மயில் இறகு, மிளகு போன்ற பொருள்கள், தமிழகத்தினுடைய சிறப்பான முத்துக்கள் எந்த அளவுக்கு ஏற்றுமதி யாயின என்பதையும் நம்முடைய வரலாறுகள் விளக்கி நமக்குப் பெருமை அளித்துக்கொண்டிருக்கின்றன.

காவிரிப் பூம்பட்டணம் என்று இன்றைய தினம் வழங்கப்படும் ஊர் பூம்புகார் என்று வழங்கி வந்தது. நான் பூம்புகார் என்று சொல்லும்போது ஒருசில ருக்கு நான் ஏதோ "புகார்" கூறுகிறேன் என்று கூடத் தோன்றலாம்.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத் தாக்கமும்"

என்று சொல்லக்கூடிய இத்துணைக் கண்டத்தி னுடைய பொருள்கள் அத்தனையும் வந்து குவிகின்ற மாபெரும் துறைமுகப்பட்டணம் பூம்புகார். வெளி நாடுகளிலிருந்து சிறப்பான குதிரைகள் வந்து இறங் கும் பெருமை படைத்ததாகும். பூம்புகார் துறைமுகம் ஒரு காலத்தில் ஏற்றமும் வெற்றியும் பெற்று விளங்கி யது. அத்தகைய துறைமுகம் இன்றைய தினம் கட லால் அழிக்கப்பட்டுப் போய்விட்டாலுங்கூட இன்று நாட்டிலே முற்போக்கும், நல்ல வளமும் வேண்டு மென்று விரும்புகின்ற இந்த அமைச்சரவை நாக பட்டணத்துத் துறைமுகத்தை விருத்தி செய்வதோடு கூட, தமிழகத்தினுடைய கரையோரங்களில் உள்ள துறைமுகங்களை விருத்தி செய்வதோடுகூட, மாமல்ல புரத்தில் இருந்து அழிந்துவிட்ட துறைமுகங்களையும் மீண்டும் புதுப்பிக்க முயற்சி எடுத்துக்கொள்வதோடு கூட, பூம்புகார் எனும் பழைய துறைமுகத்தையும் மீண்டும் அங்கே தோற்றுவிக்கக்கூடிய முயற்சியையும் எடுத்துக்கொள்ளுமேயானால், இலக்கிய கால எழில் மிக்க துறைமுகம் ஒன்றை — தமிழகத்தினுடைய வாணிபத்தை உலகெங்கும் பரப்பிய -- அத்தகைய துறைமுகம் ஒன்றை மீண்டும் நாம் தோற்றுவித் தோம் என்ற பெருமைக்கும் உள்ளாவோம்,

துறைமுகங்களை இங்கு ஏற்படுத்த வேண்டு மென்று கூறுகின்ற நேரத்தில் அமைச்சரவை வழக்க மாக திராவிட முன்னேற்றக் கழகத்தாருடைய கோரிக் கைகளுக்குத் தருகிற பதிலைத் தர முடியாது என்று கருதுகிறேன். வடநாட்டிலே இருப்பதுபோல அணைக்கட்டுகள் தமிழ் நாட்டிலே வேண்டுமென்று கேட்டால்; இங்கே ஆறுகள் கிடையாதே எப்படி

அணைகட்ட முடியும் ?" என்று ஒரு வரியில் கூறி விடு வார்கள். இன்று அவர்கள் எங்கு நோக்கினும் விரிந்து பரந்து இருக்கிற நீலத்திரைக் கடலும்; அந்த நீலத்திரைக்கடலோரங்களில் எத்தகைய துறைமுகங் களைக் கட்டலாமென்பதற்கான கணக்கும்; அவர்கள் மறைத்தாலும் மறைக்க முடியாத அளவுக்கு விரிந்து, பரந்து இருக்கிறது. "ஆறு இல்லே அதனுல் அணைக் கட்டு கட்டவில்லே" என்று கூறுகிற அமைச்சர வைக்கு – கடல் இருக்கிறது; நல்ல கரை இருக்கிறது துறைமுகங்கள் இருந்த இடங்களிருக்கின்றன; நல்ல துறைமுகம் அமைக்கலாமே" என்ற யோசனையை நான் கூறுகிறேன்.

கன்யாகுமரி மாவட்டத்தில் குளச்சல் எனும் இடத்தில் ஒரு துறைமுகம் அமைக்க வேண்டும் என்று இங்கே யோசனை கூறப்பட்டது. கன்யாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்திருக்கிறது என்று பெருமையோடு கூறிக்கொள்ளும் அதே நேரத்தில், அந்த மாவட்டத்திலிருந்து ஒரு அம்மையாரும் நமக்கு அமைச்சராகக் கிடைத்திருக்கிறார்கள். அத்தகைய பெருமைக்குரிய மாவட்டத்தில் குளச்சல் தொகுதி அவ்வம்மையார் வெற்றிபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட இடமாகும். அந்தத் தொகுதியில் இருக்கும் குளச்சல் துறைமுகத்தை மீண்டும் நல்ல முறையிலே ஆக்கு வித்து, அந்தத் துறைமுகம் தமிழகத்தினுடைய பெருமையை நிலைநாட்டும் வகையிலே அமைவதற்கு இந்த அரசு நல்ல பல முயற்சிகளே மேற்கொள்ளும் என்று நான் நம்புகிறேன். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே மீண்டும் மீண்டும் நான் அந்த அம்மையைக் கேட்டுக் கொள்ளுகிறேன்—அமைச்சர் களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழகத்தினுடைய வாணிபம் ஒரு காலத்திலே ஏற்றம் பெற்று இருந்ததுபோலவே பல்வேறு நாடு களுடைய தொடர்பு கிட்டியது போலவே, மீண்டும் அந்தத் தொடர்பு வளர இந்த ஒருவகையிலாவது தமிழகம் முன்னேற—வளம்பெற, அந்தத் துறை முகங்களை விருத்தி செய்யவேண்டும் என்ற இந்தக் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள் வார்களென்று நான் கருதுகிறேன். ஏனென்றுல் இது எதிர்க் கட்சியிலே இருந்துகொண்டு வரக்கூடிய கோரிக்கையல்ல — காங்கிரசு வட்டாரத்திலிருந்து— அந்தப் பகுதியிலிருந்து—வந்திருக்கிற காரணத்தால் இது நிறைவேறும். ஆகவே, இந்தக் காரியத்தை விரைவில் செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கை யோடு—மீண்டும் அந்தப் பூம்புகார் துறைமுகத்தைத் தோற்றுவிக்கிற முயற்சியைக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

———

ஒரே யொரு போர் !

தோழர்களே ! தோழர்களே !! நெல்லை மாவட்டத்தின் மாநாட்டிலே தலைமை தாங்கும் பெரும் பொறுப்பை எனக்களித்த மாவட்டக் கழகத்தினருக்கு எனது நன்றி.

கோவில்பட்டியில் கூடும் இம்மாநாட்டிலே, தலைமை வகிப்பதிலே குறிப்பிடத்தக்க அம்ச மொன்றுளது. சென்ற ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாவில் கோவில்பட்டியில் நானேதான் கலந்து கொண்டேன், இப்போது அதே நகரின் மாநாட்டிலும் கலந்துகொள்ளுகிறேன் என்பதை நினைக்கும்போது மட்டிலா மகிழ்ச்சி கொள்ளுகிறேன். "மாநாட்டுக்கு நீங்கள் தலைமை வகிக்க வேண்டும் கருணாநிதி !" என்று மாவட்டக் கழகத்தினர் அன்புக் கட்டளை பிறப்பித்தபோது ஆயிரம் ஆச்சரியக்குறிகள் என் உள்ளத்திலே நடன மாட ஆரம்பித்தன. அவைகளோடு கேள்விக் குறிகளும் சேர்ந்து கொண்டன. என் இதயமே ஒரு அதிசய நாடகசாலையாகி விட்டது.

பெருமைக்காகச் சொல்லவில்லை தோழர்களே ! புதுச்சேரியிலே என்னை அடித்து நடுத்தெருவில் வீசி விட்டுப் போய்விட்டார்கள் ஐந்து ஆறு ஆண்டுகளுக்கு முன்பு. அப்போது – அந்த ஆண்டு – அல்லது இரண்டு ஆண்டுகள் கழித்து – நடந்த மாநாடு எதிலுமே என்னைத் தலைமை வகிக்க யாருமே கூப்பிடவில்லை. இப்போது திடீரென்று இப்புதுமை

எப்படி விளைந்தது என்று கருதினேன் – சிந்தித்தேன் – "புதுமை அழைத்ததில் இல்லையப்பா! – இயக்கத்திலேயே ஏற்பட்டு விட்டது இந்தப் புதுமை!" என்று அழுத்தமான பதில் கிடைத்தது. தலைவர் – மாநாடு – மாலை – மரியாதை – இவைகளுக்காக ஏங்கிக் கிடந்து – கவலைப்பட்டு – கண்ணீர் விட்டு இப்போது பதவியும் பாராட்டும் கிடைத்து விட்டது என்று எக்காளம் முழங்கிடும் சுயநலப்பதவி வேட்டைக்கும்பலல்ல நான் சார்ந்திருக்கும் இயக்கம்.

என் போன்றவர்களுக்கு இந்தச் சிறப்பு வழங்கப்படுவதின் நோக்கம் இயக்கம் இளைஞர்களின் சொத்து – உழைப்பாளிகள் அமைத்த மாளிகை – அதில் உல்லாச புரியினர் வாழ முடியாது என்பதை நாட்டுக்கும் – நாட்டிலே நம்மைப்பற்றி நச்சுக் கருத்துக்களை நடமாட விடுபவர்களுக்கும், எடுத்துக் காட்டத்தான் என்பது என் எண்ணம்.

தலைமை வகிப்பது என்பது கட்சியிலே ஒரு நட்சத்திரத்தை உண்டாக்குவது என்பதல்ல. அப்படி தலைமை வகிப்பவர்கள் கருதினாலும் — அல்லது தலைமை வகிப்பவரைப்பற்றிக் கருதினாலும்—கட்சிக்கும் கட்சித் தொண்டுக்கும் அற்ப ஆயுள்தான் என்று முடிவு கட்டிக்கொள்ள வேண்டும். வரப்போகும் போராட்டங்களிலே இதுவரை முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நடைபெற்ற மாவட்ட மாநாடுகளின் தலைவர்கள் வரிசைக் கிரமமாகக் களத்திலே நிறுத்தப்படவேண்டும். அந்தந்த மாவட்ட மாநாட்டுத் தலைவர்களின் சார்பாக நான் தலைமைக் கழகத்தைக் கேட்டுக் கொள்வதெல்லாம், "எங்களை எதிர்காலப்

போராட்டத்தின் துணைத் தளபதிகளாக ஆக்குங்கள்" என்பதுதான். மார்பிலே வேல் தாங்கி மரணத்தை அணைப்போமே தவிர மாற்றாரிடம் சரண்புக மாட்டோம். மானிக்கக் கொள்கைகளை எதிரிகட்குக் காணிக்கையாக்க மாட்டோம். இந்த உறுதியோடு தான் இன்றைய மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறேன்.

தென்னிந்திய நலஉரிமைச் சங்கமாக, ஜஸ்டிஸ் கட்சியாக — திராவிடர் கழகமாக — திராவிட முன்னேற்றக் கழகமாக நாம் வளர்ந்திருக்கிறோம். ஒவ்வொரு மாறுதலின்போதும், ஒவ்வொரு புதுமை ஏற்பட்டு வந்திருக்கிறது. சுயமரியாதைக் கொள்கைகளை தேயவிடாமல் — சுயநலத்திற்காக இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளாமல் தொண்டுபுரிந்த சுத்த வீரர்கள்தான் இன்று அணிவகுத்து நிற்கிறோம். ஆனல் இன்றைய மாறுதல் — அதாவது சென்ற ஆண்டு நமது இயக்கத்தில் ஏற்பட்ட மாறுதல் நாமாகத் தேடிக்கொண்டதல்ல. நமக்குத் தலைவராயிருந்த பெரியார் அவர்கள் கட்டாயப்படுத்தித் திணித்தது.

செப்டம்பர் பதினேழு! நாம் மறக்க முடியாத நாள்! பெரியார் அவர்கள் பிறந்த நாள். பெரியார் அவர்கள் பிறந்த நாளும் — நாம் அவர்களை விட்டுப் பிரிந்த நாளும் அதுதான். சிந்திய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மீண்டும் செயலில் இறங்கப் புறப்பட்ட நாள் — சிங்காரச் சென்னையிலே-புழுங்கிப் போன நமக்குப் புதுவாழ்வு சித்தரித்த நாள்! அந்த நாள் திராவிடம் உள்ளளவும் கொண்டாடப்பட வேண்டிய அருமைமிகு நாள்! அந்நாள் தோன்றி

ஒரு ஆண்டு நிறையப்போகிறது. இந்த ஒரு ஆண்டில் நாம் போட்ட திட்டங்கள் எத்தனை – நாம் புரிந்த செயல்கள் எத்தனை – நாம் அடைந்த வெற்றிகள் எத்தனை – நாம் செய்யாமல் விட்டுவிட்ட காரியங்கள் எத்தனை – என்பதை நன்ருகச் சிந்திக்கவேண்டும்.

பிரச்சாரக்குழு அமைத்தோம் சட்டதிட்டக்குழு அமைத்தோம். செயற்குழு அமைத்தோம். அமைப்புக்குழு அமைத்தோம். பொதுக்குழு அமைத்தோம். இந்த அமைப்புகள் எப்படியெப்படி வேலை செய்திருக்கின்றன என்பதை வரப்போகும் மாநில மாநாட்டிலே நினைக்கத்தான் போகிறேரும். நினைப்பின் விளைவு நிம்மதியாக இருக்காது. ஏனெனில் நாம் செய்யாமல் விட்ட பணிகள் ஏராளம்.

குறை சொல்லப் போகிறேன் என்று யாரும் கருத வேண்டாம். இயக்கம் குழந்தை யென்பதும் — அதன் குரல்வளையைப் பிடித்துக் கொல்ல, குள்ளநரிகள் சமயம் பார்த்திருப்பதும் யாரும் அறியாததல்ல. குழந்தை — ஓராண்டுக் குழந்தை — பேசிப் பாடவேண்டாம், ஆடியோட வேண்டாம், பாலாவது சாப்பிட்டு உடலைப் பலமாக்கிக் கொள்ளவேண்டாமா? என்பதுதான் கவலை. குழந்தைக்குப் பாலுண்ண ஆசைதான் — கொடுப்பவர்கள் எங்கே? என்று ஒரு குரல் கிளம்பலாம்! அந்தத் தாய் வேலையைச் செய்யவேண்டியவர்கள் இயக்கத்தில் தலைமை மன்றத்தில் இருப்பவர்கள் மட்டுமல்ல — இயக்கத்தின் தொண்டர்களுங் கூடத்தான். இயக்கத்திற்கு ஓர் கட்டடம் தேவை யென்று அறிவித்து அதற்காகப் பத்தாயிர ரூபாய் நிதி தேவை யென்று அறிக்கை புறப்பட்டது. பத்தாயிரம் சேரவில்லை.

நாட்டைப் பார்த்து நாம் கேட்டால் "எப்படி உங்களை நம்பிக் கொடுப்பது?" என்ற கேள்வியுங் கிளம்பலாம் "நாம் தூய்மையானவர்கள் — துரோகிகள் அல்ல — நீங்கள் தரும் பணத்திற்குப் பாதுகாப்பு உண்டு — அதைப் பயன்படுத்த ஒரு குழு உண்டு" என்றெல்லாம் கூறி நம்மீது நியாயமாக ஏற்பட வேண்டிய நல்லெண்ணத்தை மக்களிடமிருந்து பெற இவ்வளவு காலம் ஆகிவிட்டது. இந்தக் காலமும் போதாமலிருக்கிறது. ஆனல், இவ்வளவு நீண்ட காலம் தேவையில்லாதது — குறுகிய காலத்திலேயே அதை நாம் செய்யத் தவறி விட்டோம். மாவட்டக் கழகங்கள் முயற்சித்திருந்தால் — கிளைக் கழகங்கள் கிளம்பி யிருந்தால் — ஐந்நூறு கழகங்களும் ஐந்தே நாட்களில் ஐம்பதினாயிரம் ரூபாய் கூட அளித்திருக்க முடியும்.

"பார்த்தீர்களா .... பணம் வசூலாகவில்லை இதுகளுக்கு" என்று பண வசூலில் பழக்கப்பட்ட பரம்பரையினர் பல இடங்களில் பரிகசிக்கிறார்கள். அவர்கட்கு நாம் தரும் — பதில் — பணத்தைக் கொண்டு, பலத்தைக் கணக்குப் போடும் பாமர மதி உங்களுக்கு வேண்டாம். ஐந்நூறு கழகத்தினர்களும் சற்று நினைத்தாலே போதும், சென்னையிலே — திராவிடத்தின் தலைநகரிலே — இயக்கத்தின் மாளிகை எழுந்துவிடும், என்பதாகத்தானிருக்க வேண்டும்.

ஒரே ஆண்டில் ஐந்நூறு கிளைகளை நிறுவியிருக்கிறோம். எந்த இயக்கமும் செய்து காட்ட முடியாத அரும்பெரும் செயல்! ஐந்நூறு கிளைகள் ஐம்பதுக்கு

மேற்பட்ட பிரச்சாரக் காலாயர்கள், அன்ருட க் கூட்டங்கள். மாவட்டந்தோறும் மாநாடுகள். இது தித்திப்பான செய்திதான். ஆனல், பூரண திருப்தி யளிக்கக் கூடியதல்ல.

பல ஆண்டுகளாக இதைத்தான் செய்து பழக்கப் பட்டிருக்கிருேம். மேடைகள் அமைப்பதும் – பேச் சாளர்களை அழைத்து மேகமண்டல மதிரப் பேசச் செய்வதும் – அதன் விளைவாகப் பெரும் பகுதியினரை நம்மவராக்குவதும் தேவையற்ற வேலை யென்று கூறவில்லை. நம் கொள்கையைக் கீ தமாக்கிக் கொண்டவர்கள் – நம் பாதையில் நடந்து வரத் துணிந்தவர்கள் – நாலாபக்கங்களிலும் சிதறிக் கிடக் கிருர்கள். அவர்களை இணைக்க முடியவில்லை. இணைக் கும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஐந்நூறு கிளைகள். அந்தக் கிளைகளுக்கும், மத்ய கழகத்திற்கும் தொடர்பு அறுந்து தான் போயிருக்கிறது. ஒரு திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்ருல் – அந்தத் திட்டம் தீட்டப்பட்ட பிறகு – மத்ய கழகத்திலிருந்து மாவட்டக் கழகத் திற்குச் சென்று – மாவட்டக் கழகம் கிளைக் கழகங் களுக்கு அறிவித்து, கிளைக்கழகம் அளிக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஏற்பாடு இருக்கிறது. ஆனல், முறைப்படி நடக்கவில்லை. தலைமைக் கழகம் ஒரு சங்கிலியின் பதக்கமாகவும் கிளைகள் முத்துக்களாகவும் கோக்கப்படவில்லை. இந்தக் குறையை விரைவில் • களைய வேண்டும். இந்த இணைப்பு உறுதியாக இருந்தால்தான் கிளைக் கழகத்தின் சந்தேகங்கள் – நடவடிக்கைகள் – இவை

களை நல்ல முறையில் சீர்படுத்தி இயக்கத்தைச் செழிப்பாக்க முடியும். பிரச்சாரக் குழுமட்டும் வேலை செய்து பயன் இல்லவே இல்லை. சென்ற ஆண்டு போட்ட திட்டங்கள் அனைத்தும் செயல் முறைக்கு வந்தாக வேண்டும்.

இன்றைய நிலையில் கூட நாம் எந்தக் கட்சியினருக்கும் இளைத்தவரல்ல. காங்கிரசுக் கட்சிக்கு இருக்கும் மதிப்பைவிட; சோசலிஸ்டுகளைப்பற்றிய அபிப்பிராயத்தைவிட; இந்துமகாசபைக்குக் காட்டப் படும் மதிப்பைவிட; திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அதிகமாகவே வரவேற்பு இருக்கிறது தென்னாட்டில்.

நாம் வளர்ந்திருக்கிறோம், வளர்ந்துகொண்டே போகிறோம். அதற்கும் ஒரு கட்டுப்பாடு – ஒழுங்கு நியதி வேண்டுமென்பதுதான் பிரச்னை!

ஒருவனுக்கு லட்சம், லட்சமாய்ப் பணம் வருகிறது, அவனும் கணக்கு வழக்கின்றிச் செலவு செய்கிறான். செலவுக்குக் கட்டுப்பாடுமில்லை – கணக்குமில்லை. கடைசியாக ஒருநாள் அவன் சம்பாதித்தது எவ்வளவு என்று கணக்குப் போட்டு விஷயம் புரியாமல் கலங்கித் தவிக்கிறான், அந்தப் பணக்காரன் நிலைமை இயக்கத்திற்கு வரக்கூடாது. வரவிடக் கூடாது.

கல்லடியும் சொல்லடியும் பட்ட காலத்திலே கரையாத இயக்கம் — பணக்காரர்களின் செல்வாக்கென்ற ஈட்டிகள் எறியப்பட்ட நேரத்தில் இறந்து போகாத இயக்கம் — மடாதிபதிகளின் எதிர்ப்பு; மகந்துகள் —

ஜீயர்களின் கொதிப்பு இவைகளால் மாண்டுபோகாத இயக்கம் — பதவியும் பட்டமுமே தேவை யென்பவர்களின் பாசக்கயிற்றிலே யிருந்து விடுபட்ட இயக்கம்— சொந்த வாழ்வும் சுயநலமும் பெரிதென்போரின் பேய்ப்பிடியிலிருந்து தப்பிய இயக்கம் — கொள்கைக்காக வாழ்ந்த நாகை மணியை; மாயவரம் நடராசனே, ஆரூர் இராமனே, அழகிரிசாமியை அனைத்திருந்த இயக்கம் நமது இயக்கம்,

கோவை முத்தமிழ் மாநாட்டிலே அபாய அறிவிப்புச் சங்கம் முழங்கி அதன்பிறகு, ஆளவந்தவர் விழித்துப்பார்த்து, மொழிக்கு வந்த கொடுமைகளைத் தடுத்து விட்டனர். இந்த வெற்றியைக் கொண்டாடிய நேரத்திலேயே தான் நெஞ்சு கொதிக்கும் நெருப்புச் செய்தியொன்று நம்மை நெருங்கிற்று.

ஆம்! அதுதான் அல்லாடியாரின் ஆனந்தத் தாண்டவம்;—அக்ரகாரத்தின் வெற்றி முரசம்; இந்துக் கூட்டத்தாரின் இன்பச் சிந்து—திராவிடத்தின் முன்னுள் பழம்பெருந் தலைவர்கள் தியாகராயர்; டாக்டர் நாயர்; பானகல்; டாக்டர் நடேசன் முதலிய பல தலைவர்கள் ஒன்று சேர்ந்து உண்டாக்கிய வகுப்புவாரி பிரதிநிதித்துவ—கம்யூனல் ஜீ. வோ.,—முறையைக் குழியில் தள்ளிவிட்டு—பார்ப்பனீயம் பாடுகின்ற பள்ளுப் பாட்டைத்தான் தோழர்களே! குறிப்பிடுகின்றேன். முப்பது ஆண்டுகளாக அமுலிலிருந்து வரும் வகுப்புவாரி முறை அடியோடு சாய்கிறது. சட்டம் கம்யூனல் ஜீ. வோ.வுக்கு மாறுனதாக இருக்கிறதாம். அதற்காக சமூக நீதியைச் சாய்த்துவிட வேண்டுமாம்! சட்டத்தை இயற்றுபவர்கள் மக்கள்.

மக்கள் வாழ வகுத்தது சட்டம், சட்டத்திறகாக மக்களில்லை. கம்யூனல் ஜீ. வோ.வுக்கு மாறுதலாகச் சட்டமிருந்தால், சட்டத்தைச் சரிப்படுத்த வேண்டியது முறையா—அல்லது ஒரு பெரிய சமுதாயத்தின் உரிமையை உடைத்து நொறுக்கி உள்ளம் எரியச் செய்வது முறையா? என்றுதான் நாம் கேட்கிறோம்.

1920ம் ஆண்டில் எஸ். எஸ். எல். சி., பரீட்சைக்குச் சென்றவர்களின் தொகை இருபதாயிரம். இன்று 1950ஆம் ஆண்டில் அறுபத்தெட்டாயிரம்! இப்படி வளர்ந்து வந்த திராவிடரின் கல்வி உயர்வைக் கருவறுக்க சட்டத்தை வாளாக்குகிறார்கள் சட்டம் செய்தவர்கள் ஐந்து பேர்கள். அதிலே மூன்று பேர்கள் தென்னாட்டு நிலை தெரியாத வடநாட்டவர்கள். இருவர்கள் தென்னாட்டவர்கள். ஒருவர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்; மற்றவர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர். எங்கிருந்து நீதி கிடைக்கும்? இந்த நிரபராதி திராவிடருக்கு? எங்கிருந்து உரிமை கிடைக்கும்? — உளுத்துப்போன சமுதாயத்துக்கு! சமூக நீதி தேவை யென்றால்—பரந்த நோக்கம் பேசுகின்றார்கள். தகுதி திறமை பேசுகிறார்கள்

இந்தத் தகுதியும் — திறமையும் சமுதாயப் பிரச்னை வரும்போது காட்டப்படுகிறதா? கல்விச் சாலைகளுக்குச் செல்ல தகுதி திறமை யென்று கர்ஜிக்கின்ற கனவான்களைக் கேட்கிறேன் — காலையில் எழுந்து ஸ்நானம், நேமம், நிஷ்டை, விரதம், அளவில்லாத ஆண்டவன் பக்தி, பழுத்த ஆஸ்தீகம் இத்தனைத் திருக்குணங்களும் அமைந்த ஒரு திராவிடன், ஆலயத்துட் சென்று ஆண்டவனைத் தொட்டு அர்ச்

சிக்க, அபிஷேகிக்க முடியாதே. அதே நேரத்தில் இரவெல்லாம் இன்பவல்லியோடு கூடிக் கிடந்து வெற்றிலை காய்ந்த வாயுடனே ஆண்டவனைத் தொட்டுக் குளிப்பாட்டி, உணவூட்ட ஒரு பெரு வியாதி பிடித்த பார்ப்பனனுக்குக்கூட உரிமை இருக்கிறதே—இதில் எங்கே தகுதி—திறமை? யாரிடமிருக்கிறது தகுதி? ஆனால், யார் நுழைய முடிகிறது கோயிலில். இவைகளை ஒழித்துக்கட்டி விட்டு, பிறகு கம்யூனல் ஜீ. வோ.-வை ஒழிப்பதற்கு வந்தால்கூட அதில் அர்த்தமுண்டு. எப்படியோ அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள்.

நான் முன்பு கூறியபோது நையாண்டி பேசியவர்கள், இன்று நம்மோடு சேர்ந்து "அந்தோ அநீதி" என்று அலறுகிறார்கள். சென்னை அரசாங்கம் சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்றுவிட்டது நீதி கேட்க. அதுவும் நம் முயற்சியால்தான்! கிளர்ச்சியால்தான் முடிந்தது என்பதை நினைத்துப் பெருமை யடைகிறோம்; உயர்நீதி மன்றத்துத் தீர்ப்புக் கிடைத்ததும், அரசாங்கத்தின் அடுத்த திட்டம் என்ன என்பது அமுங்கித் தான் கிடந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சென்னையில் துவக்கிய கிளர்ச்சி, திராவிட முன்னேற்றக்கழக மாணவர்கள் காட்டிய உணர்ச்சி, மந்திரி மாதவமேனனை வாய் திறக்கச் செய்தது. சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறோம் என்றார்கள், அதன் பிறகு நாம், பொறுத்திருந்து பார்ப்போம்—போகா விட்டால் கிளர்ச்சி துவக்குவோம்—அதுவும் பொதுவான முறையில் போராட்டம் அமைப்போம் என்று கிளர்ச்சியின் வேகத்தைச் சற்று தளர்த்தினோம். நமது எண்ணமே சர்க்காருக்கு இருக்கும்போது நாம்

யாரோடு மோதுவது என்ற நிலையில் சமூக நீதிபற்றிய விளக்கவுரைகளோடு கிளர்ச்சியை நிறுத்தி—சமூக நீதிக்காகப் போராடுபவர் யாராயிருப்பினும் அவர் கட்கு உதவி செய்வது என்ற அளவோடு இருந்து கொண்டோம். நமது முயற்சி கருகிவிட்டதாக யாரும் கருதவேண்டாம்.

அப்பீலுக்கு போயிருக்கிறவர்கள் அங்கும் தோல்வி கண்டால் — அதன் பிறகு அரசியல் சட்டம் திருத்தப்படாவிட்டால் அப்போது எரிமலையாகக் குமுறப்போகிறது நமது கிளர்ச்சி. மூன்று கடல் களும் பொங்கி இமயத்தை மூழ்கடிக்கும் கிளர்ச்சி! விந்தியமும், இமயமும் மோதிக்கொள்ளுகிற கிளர்ச்சி! சாவா? வாழ்வா? என்று முடிவுகட்டுகிற கிளர்ச்சி! அந்தக் கிளர்ச்சியின் முடிவுதான் திராவிடநாடு திரா விடருக்கே என்று தென்னுட்டவரின் ஏகோபித்த குரல் எதிரொலிக்கும் காட்சியாக மாறப்போகிறது.

ஆளவந்தார் சுப்ரீம் கோர்ட்டிலிருந்து திரும்பு கிறவரையில் நமக்கு வேறு பல வேலைகளுண்டு. சமூக நீதிகள் பற்றிய விளக்கவுரைகளாற்றி மக்களை விழிக்கச் செய்யவேண்டும். மக்கள் விழிப்படைவார் கள், ஆனல் செயலாற்ற உடலில் வலுவில்லை. காரணந்தான் தெரியுமே — கொடுமையான காரணம் பசி — பசி — பருத்திக்கொட்டையைச் சாப்பிடு என முன்ஷி சிபார்சு செய்யு மளவுக்கு வளர்ந்துவிட்ட பசி — திருநெல்வேலியிலும் வேறிடங்களிலும் தான் பெற்ற செல்வத்தைத் தன் வயிற்றில் கிடந்த வைடூ ரியத்தை, தாயார் விலை கூறி வயிற்றைக் கழுவிக் கொள்ளும்படி செய்த கோரப்பசி — இந்தப் பசி

நீக்க பாராள வந்தவர் எடுத்துக்கொண்ட முயற்சி எட்டு அவுன்சு அரிசியை ஆறு அவுன்சு அரிசியாக் கியதுதான். இந்தப் பசி போக்கும் கைங்கர்யத்தைச் செவ்வனே செய்ய யாரும் முன்வரவில்லை. நாமோ நாட்டு மக்களின் ஒரு பகுதி. ஆனாலும் வாயில்லாப் பூச்சிகளல்ல. நமது வார்த்தைகள் முதலில் அலட் சியப் படுத்தப்பட்டாலும் பிறகு அதுதான் "வேத வாக்" காக மாறியிருக்கிறது பலருக்கு.

பசியால் மக்கள் மாளும் நேரத்தில் பாராமுகமா யிருக்கும் சர்க்காருக்கு — ஒருமுறை நினைவுபடுத் தும் நிகழ்ச்சியை நாம் நடத்திக் காட்ட வேண்டும்! சென்னையிலே, பட்டினிப் பட்டாள ஊர்வலம் நடந்த பிறகு நல்லதொரு எதிரொலி ஏற்பட்டது. அது போல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, நாடெங்கும் ஒரு நாள் குறிக்கப்பட்டு பசியால் மாளும் மக்களின் பட்டியலை சர்க்காருக்குத் தர வேண்டும். அந்த நாள் சர்க்காரின் மந்தப் போக்கைக் குறைக்கு மென்ற நம்பிக்கையோடு இதைச் செய்யலாமா, செய்யக் கூடாதா என்ற முடிவை — செய்யலாமென் றால் நாள் குறிப்பிடுங்கள் என்ற தாழ்மையான வேண்டுகோளை மத்ய கழகத்தின் முன் வைக்கிறேன்.

நம்முடைய கிளர்ச்சிகள் என்றும் தோற்றதில்லை அடக்குமுறைகளை வீசிய போதும் — சிறைச்சாலை யிலே அடைத்தபோதும் — சிரச்சேதம் செய்வோம் என்று மிரட்டியபோதும் நாம் பயந்து பின்னடைந்தது இல்லை.

அந்த அஞ்சா நெஞ்சத்துடன் – அழகிரிசாமியை நினைத்துக்கொண்டு அண்ணாவின் படை வரிசையிலே

சேர வேண்டுமென்று தான் திராவிடப் பெருமக்களை அழைக்கின்றேரும். அப்படி அழைக்கும்போது தான் அழைக்கப்பட்டவர்களை அமைப்பு முறையில் நடத்திச் செல்லக் கழகம் இன்னும் செப்பனிடப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். செயல்முறைத் திட்டங்களில் சிறிது அயர்ந்து விட்டது கழகம். என்னும் போது அந்தக் குற்றவாளிப் பட்டியலிலே நானும் அடங்கியிருக்கிறேன் என்பதை நினைவுபடுத்திக் கொண்டுதான் சொல்லுகிறேன். நம் குற்றம் கொள்கையை மீறியதல்ல — சிதறிக் கிடக்கும் சக்தியை ஒன்றுபடுத்தாதது தான் — சிந்திக் கிடக்கும் மலர்களை மாலையாக ஆக்காததுதான் — அந்த அருமையான செயல் இந்த ஆண்டு தொடங்கி விடுமென்று நம்புகிறேன். அதற்கான விடிவெள்ளி முளைத்திருக்கிறதாக உணர்கிறேன். சென்னை தங்கசாலை வீதியிலே தலைமை நிலையம் பணிபுரியத் தொடங்கி விட்டதையும் நீங்கள் அறியவேண்டுமென்று கூறுகிறேன். இந்த ஆண்டிலே நாம் வளர்ந்து விட்டோம். வரும் ஆண்டிலே நம் கையிலே வேலேந்திப் புறப்படப்போகிரேரும். தோழர்களே ! இந்த வேலேந்தி என்ற வார்த்தைகூட எதிரிகட்கும் சர்க்காருக்கும் பயங்கரமாகத் தோன்றும். பயப்படத் தேவையில்லை. கொள்கையை வேலாக்கி அறப்போர் ஆரம்பமாகப்போகிறது; என்பதை அறிவுறுத்துகிறேன் உங்கள் சார்பாக அரசியலாருக்கு.

அடக்குமுறையை எதிர்த்து ஒரு போர் ! புத்தகங்களின் தடையை எதிர்த்து ஒரு போர் ! நாடகத் தடைகளை மீறி ஒரு போர் ! இப்படிப் போர்கள் நடக்கப் போவதில்லை. எல்லாவற்றையும் சேர்த்து

ஒரே யொரு போர்! அந்தப் போரிலே கலந்து வாகை மாலை சூடவாரீர் தோழர்களே! பாண்டியன் பரம்பரையினரே! சேரன் சந்ததியினரே! சோழனின் சொந்தக்காரரே! வாரீர்! சிறுத்தையின் உறுமல் – சிங்கத்தின் சீற்றம் – கறுத்த கழுதையே அங்கேன் கனைக்கின்றாய் என்று கேட்டிடவாரீர்! ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை – மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று என்று மார்தட்டிட வாரீர்! குடித்திடுவோம் உயிர் – கொடுத்திடுங்கள் நாட்டை, பிரிவினை வேண்டா மெனும் பெரும் உபதேசம் நரிகளின் ஊளை! நாட்டு வெறிபிடித்த காளைகளே! கிலிபிடித்த மனிதர்களைக் கீறி யெறியுங்கள்! புலிவாழ்வின் உச்சியிலே புதுமைகளைப் பொறித்திடுவோம்! என்று புரட்சிப்பண்பாடவாரீர்!

வாரீர்! வாரீர்! வாலிப வீரர்களே! வைர நெஞ்சுடைத் தோழியர்களே! வன்மை நிறை பெரியோர்களே! என அழைக்கிறேன். வணக்கம்.

(தலைமையுரை கோவில்பட்டி மாநாடு 26–8–50)

———

தமிழகம் தெரியாதாம்!

திலகர் பிறந்து ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தீரக்குரல் கொடுத்த பிரதேசத்தில் சம்யுக்த மகாராஷ்டிரம் கேட்டு மக்கள் போர் தொடுத்திருக்கின்றனர்.

காங்கிரசின் காவலர் காந்தி பிறந்த இடத்திலிருந்து "மகாகுஜராத்" கோஷம்!

பகவத்சிங் பிறந்த பூமியில் சீக்கிஸ்தான் பிரச்னை!

தாதாபாய் நெளரோஜியைக் கொடுத்த மண்ணில் இப்போது பம்பாய் நகர் மாநிலக் கோரிக்கை.

இப்படி இந்த உபகண்டம் முழுவதும் மொழியின் அடிப்படையில் மாநிலம் வகுத்துக்கொண்டு வாழத் துடிதுடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மொழி வழிக் கொள்கை எங்கு பாரத பூமியில் ஒரு உள்நாட்டுப் போருக்கு வித்திட்டு விடுமோ என்று வேற்று நாட்டினரெல்லாம் எண்ணிடும் வகையில் அரசியல் நிகழ்ச்சிகள் உருவாகிக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலே தான் புதுமாநில அமைப்பு மசோதா ஒவ்வொரு பிராந்தியத்து சட்டசபை வாயிலையும் தட்டிப் பார்த்து, தேசீய வீரர்களின் கணக்கைப் பைசல் செய்யப் போகிறது.

சென்னையைப் பொறுத்த வரையிலே சட்டசபை காங்கிரசுக் கட்சியினர் மார்ச் 26ந் தேதியன்று கூடி சுயமரியாதை உணர்வு பெற்றிருப்போர் அனைவரும் திடுக்கிடத்தக்க சில முடிவுகளை உருவாக்கியிருக்கின்றனர்.

தேவிகுளம், பீர்மேடு – சர்ச்சைகுரிய பிரச்சனை, என்று அவர்களே பலமுறை சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதைத் தவிர்த்து எல்லோரும் ஒரு மன தாய் அங்கீகரிக்கக் கூடிய தன்மை பெற்றிருக்கும் சென்னைக்கு ‘‘தமிழ்நாடு’’ எனப் பெயரிடும் விஷயத் திலும் சட்டசபைக் காங்கிரஸ் கட்சி தன்னுடைய குருட்டுப் போக்கை வெளிப்படுத்திக் கொண்டிருக் கிறது.

பெயர் மாற்றத்துக்கு இப்போது அவசியமில்லை யாம்! – சொல்லியிருக்கிறார் காமராசர்.

தன்னுடைய கட்சிப் பிரிவிற்குத் ‘தமிழ்நாடு’ காங்கிரசு கமிட்டி’’ என்று பெயர் வைத்துக் கொண் டிருப்பவர் –

தன்னைத் ‘‘தமிழ் நாட்டு நேரு’’ என்று தொண் டர்கள் கூறுவதைக் காதாரக் கேட்டு மகிழ்பவர் —

அந்தக் காமராசர் தான் சென்னையைத் ‘தமிழ் நாடு’ என்று அழைப்பதற்குத் தடைபோடுகிறார்.

‘தமிழ்நாடு’ — இந்தப் பெயரிலே என்ன குறை கண்டுவிட்டார் காமராசர் ?

‘‘தமிழ் — தமிழன் — தமிழ்நாடு’’என்று சொல்ல ஏன் அச்சப்படுகிறார் ? — அந்தப் பச்சைத் தமிழர் ?

அவர் கூறும் நொண்டிக் காரணத்தையும் கேளுங்கள்.

‘‘சென்னை (மெட்ராஸ்) என்ற பெயர் நாடு முழு மைக்கும் மட்டுமல்லாமல் உலகம் முழுமைக்கும்

தெரிந்த பெயராகிவிட்டது. எனவே, அப்படிப்பட்ட ஒரு பெயரை இப்போது மாற்றிவிடுவதால் எவ்வித லாபமும் கிடையாது."

தமிழ்நாடு என்ற பெயர் உலகத்துக்குத் தெரியாதாம்! —

ஒரு மாநிலத்து அமைச்சர் பேசவேண்டிய பேச்சா இது?

தமிழகத்தின் பெயர் — இந்த உபகண்டத்து எல்லைக்கு அப்பால் தெரியாதாம்! சொல்லுகிறார் காமராசர்.

வரலாற்றுப் புத்தகத்தின் முதல் ஏட்டிலே தமிழ்; தமிழ்நாடு என்ற பெயர். கல்தோன்றி மண்தோன்றுக் காலத்திலேயே வாளொடு வாழ்ந்தவன் — என்ற புகழ்! அகிலும், தேக்கும், அழகுச் சந்தனமும் கிரேக்க நாட்டுக் கடற்கரையை பரிமள பூமியாக மாற்றியிருக்கிறதே — அப்போது அவர்களெல்லாம் பேசிப் பேசித் தீர்த்திருக்கிறார்கள், உல்லாசச் செலவுகளால் நம் செல்வம் தமிழ்நாட்டுக்குப் போகிறதே — என்று.

மலை நிகர்த்த யானைக் கொம்பினுல் செய்யப்பட்ட கோப்பையிலே திராட்சை ரசத்தை ஊற்றிவிட்டு "எங்கேயடி அந்தத் தமிழ்நாட்டு முத்து?" என்று தன் சேடியரை நோக்கி உத்திரவிட்டபோது உலகப் பேரழகி கிளியோபட்ரா தன் கிள்ளை மொழியால் பன்முறை குறிப்பிட்டிருக்கிறாள் — தமிழ்நாடு — தமிழ் நாடு என்று.

கடாரம் கொண்டவன் — ஈழத்தை வென்றவன் — வியாபாரப் பெருக்கத்தால் யவனத்தை அணைத்தவன் — என்று சரித்திரம் படிக்கும் ஒவ்வொரு நேரத்திலும் தமிழ் — தமிழகம் — தமிழ்நாடு — என்ற வார்த்தைகள் கண்ணையும், கருத்தையும் கவர்ந்து வருகின்றன. இது கூடத் தெரியவில்லை ஊமை வேஷம் போடும் ஊராள வந்தவருக்கு!

சென்னை என்ற பெயர் பிறக்காததற்கு முன்பே தமிழ் நாடு உலகறிந்த பெயராய்த் திகழ்ந்திருக்கிறது.

நாற்றமெடுத்து ஓடும் கூவத்தை அணைத்துக் கொண்டு நான்கைந்து மீனவர் குடிசைகளோடு திகழ்ந்த குக்கிராமத்தை சென்னப்ப நாய்க்கனிடமிருந்து ஆங்கிலேயர் பெற்றதற்குப் பிறகுதானே இந்தப் பெயர் உருவாயிற்று. அதை மாற்றியமைப்பதிலே என்ன தவறு உண்டாகிவிடும்?

அழகான நவரத்னமாலை; அதிலே இச்சைக்குகந்த பச்சை; விழிகளைப் பறிக்கும் வைரம்; முழு நிலவுபோன்ற முத்து; குளுமை தரும் கோமேதகம்; மற்றும் புஷ்பராகம்; வைடூரியம்; பவளம், நீலம் போன்ற கற்கள் பதிந்திருக்கின்றன. அவைகளில் வைரத்தைத் தவிர மற்றவைகள் உதிர்ந்து விட்டபின் அதை நவரத்னமாலை என்று அழைப்பதிலே பொருளென்ன இருக்கமுடியும்?

அதைப் போலத்தான் நிர்வாக வசதிக்குமட்டுமே முதன்மை தந்து—இந்த நாட்டு மக்களின் மொழி உணர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டு—வெள்ளைத் துரைத்தனத்தார் ஆந்திரா, கன்னட, கேரளத்தின்

சில பகுதிகள், தமிழகம் போன்ற பிராந்தியங்களைச் சென்னை மாநிலம் என்ற பெயரிலே இணைத்து வைத்திருந்தனர்.

அன்னியன் செய்து வைத்துப்போன ஏற்பாடு தவறு — என்பதை உணர்ந்த ஆந்திர — கன்னட — கேரளத்து மக்கள் தனித்தனியே சென்று விட்டனர். இனியும் எஞ்சியுள்ள பகுதியை தமிழ்நாடு என்று அழைப்பது தானே நியாயமும், நேர்மையுங்கொண்ட செயலாக இருக்கமுடியும் ?

இவர்கள் மாநிலங்களின் பெயர்களை மாற்றியமைத்ததே கிடையாதா ?

ஐக்ய மாகாணம் (யுனைடெட் பிராவின்ஸ்) நாடு அறிந்த பெயர்தானே !

வெள்ளைக்காரன் காலத்திலிருந்து உலகத்திற்கும் தெரிந்த பெயர்தான் இது !

அதை ஒருநொடிக்குள் மாற்றினர்களே உத்தரப் பிரதேசம் என்று !

பெசவாடா நகரம்—விஜயவாடா என்று வழங்குகிறதே !

அப்போது இந்தக் காமராசர் எங்கே போயிருந்தார் ? நாடறிந்த பெயர், உலகறிந்த பெயர் அதை மாற்றலாமா என்று அந்த நேரம் யாரும் பிலாக்கணம் படிக்கவில்லையே !

இப்போதுதான் ஞாயேபதேசம் பெற்றிருக்கிறார் உலகறிந்த பெயரை மாற்றக்கூடாது என்று.

அய்யா காமராசரே! எதிர்க்கட்சிக்காரர்கள் கரும்பு இனிக்கிறது என்று சொல்வதற்காக...அது கசக்கும் என்று கதையளக்கும் காவலரே!

அவசியம் நேரும்போது — பொதுமக்கள் விரும்பும்போது — ஒரு மாநிலத்துப் பெயரை மட்டுமல்ல; பெரிய நாடுகளின் பெயரையே மாற்றியிருக்கிறார்கள்.

அயர்லாந்து—பல நூறு ஆண்டுகளாக உலகத்துக்கு அறிமுகமான இந்தப் பெயர் பிறகு 'அயர்' என்று மாற்றப்பட்டிருக்கிறது.

இப்படி மாறியதால் அயர்பூமியின் செல்வாக்கு செல்லாக் காசாகி விடவில்லை.

இந்த உபகண்டத்து அரசியல் நிகழ்ச்சிகளிலும் பெயர் மாற்ற சம்பவங்கள் புதிதல்ல.

தென்னகத்தைப் பொறுத்தவரையில் மக்கள் குரலுக்கு மதிப்பு வைத்து பெயர் மாற்றுவதிலே இந்த ஆட்சிபீடம் ஆணவப் போக்கைத்தான் உரிமையாக்கிக் கொண்டிருக்கிறது.

பிணங்கள் பலவிழுந்த பிறகுதான் பித்து மனம் கொண்டோரின் குணம் மாறியிருக்கக் காண்கிறோம்.

பொட்டி சீராமுலுவின் சவத்தைக் காட்டி எண்ணம் ஈடேறப் பெற்ற ஆந்திர மக்களைத் தான் உதாரணமாக்கிக் கொள்ளவேண்டுமென்று நிலைமை உருவாகு முன்பே, தம்மை அசையாத மேருமென்று நினைத்துக் கொண்டு – சோறுகேட்டோரின் வாயிலே புல்லைத் திணித்து, புசியென்று சொன்ன பிரஞ்சு

நாட்டு பௌலன் உருக்கொண்டிருக்கும் காமராசர் ஆட்சிபீடம் தமிழர் நெஞ்சம் தணலாகியிருப்பதை உணர்ந்து பார்க்க வேண்டும்! இவர்களோவிடக் கல் நெஞ்சும், மக்கள் சக்தி பற்றி சிறிதளவும் கவலைப் படாத நோக்கும் கொண்டு கொம்பேறி நின்று கர்ஜனை புரிந்தவர்களெல்லாம் பிறகு மணல்மேடு களாய்மாறி காலச்சூருவளியிலே ஊதிவிடப் பட்டிருக் கிறார்கள்!

எனவேதான் மீண்டும் அறிவிக்கிறேரும்--சென்னை "தமிழ்நாடு" ஆவதால் டில்லி செங்கோட்டை சரிந்து விடாது.

தமிழர் வீறுபெறுமுன் தரணி யாள்வோரே தன்மானம் பெறுங்கள்! இல்லையேல் தவிடுபொடி யாகிவிடும் உங்கள் இறுமாப்பு.

———

பணி புரிவோம்!

எந்த அரசியல் கட்சியின் தொடர்பும் கொள்ளா மல் தனித்துச் செயலாற்ற வேண்டுமென்று தபால் தந்தி ஊழியர்களுக்கு ஆலோசனை கூறிய அரசாங்கம் இன்று உங்களது கோரிக்கைகளை அலட்சியப்படுத்தி குரலுக்கும் மதிப்பளிக்காது போய்விட்ட காரணத் தால் இன்று நீங்கள் எங்களைப் போன்றவர்களிடம் குறைசொல்லி தேறுதல் வார்த்தைகளையாவது பெறு வோம் என்ற நம்பிக்கையுடன் என்னை இங்கு அழைத்திருக்கிறீர்கள்.

தீயுண்ட வீட்டுக்குள் திண்டாடுகிறவனின் நிலை மையைக் கண்டு தெருவிலே நின்றவாறு "அதோ அந்த உத்திரத்தில் ஏறி வெளியே குதித்து உயிர் தப்பிவிடு" என்று யோசனை கூறிவிட்டு வழிநடக்கும் கல்நெஞ்சம் படைத்தவர்களைச் சேர்ந்த கூட்டமல்ல நாங்கள். தீப்பட்டுத் தேகமெங்கும் வெந்து போயி னும் கவலையில்லையென நெருப்பிடையே பாய்ந்து தவித்திடுவோரைக் காப்பாற்றுவதையே கடமையாக கொண்டிருக்கும் குழுவினைச் சேர்ந்தவன் நான்.

தபால் தந்தி ஊழியர்கள் அரசாங்கத்திடம் தங் கள் வேண்டுகோளை வைத்திடும்போது இந்த இலாகா ஒரு சேவைக் கூடம் என அரசாங்கம் விமர் சனம் செய்து சேவையின் சிறப்பு பற்றி விளக்கமும் உரைக்கும்.

தபால் கார்டு, கவர் விலை உயரும்போது பொது மக்களின் கூக்குரலை அடக்குவதற்கு இந்த இலா

காவை வியாபார நோக்கோடுதான் நடத்தவேண்டி யிருக்கிறது என விமர்சனம் செய்யும்.

பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டுகிற ஒரு வகை மீனுண்டு. அதன் பெயர் விலாங்கு மீன். அந்த விலாங்கு மீன் நிலையில் தான் அரசாங்கம் தபால் ஊழியர்களோயும், பொதுமக்களோயும் மாறி மாறி ஏமாற்றி வருகிறது. பாம்பும், மீனும் ஏக காலத்தில் விலாங்கு மீனைச் சந்தித்து விட்டால் அந்த வேஷம் வெளிச்சமாகி விடும். அதுபோலவே தபால் தந்தி ஊழியர்களும், பொதுமக்களும் ஒருசேர அரசாங்கத் தின் நடிப்பைக் கண்டுவிட்டால் உண்மை புலனுகி விடும். அப்படி இருவரும் ஒன்று சேருவதற்கான சூழ்நிலை அமைவதற்கு எங்கள் உதவி தேவைப்படு மென்று கருதித்தான் போலும் என்னைப் போன்றவர் களை இங்கே அழைக்கிறீர்கள்.

நான் ஒரு உறுதி கூறுவேன். உங்களுக்கும், பொதுமக்களுக்குமிடையே நாங்கள் பாலமாக இருந்து இருவரையும் ஒன்று சேர்க்க எங்களால் ஆன பணிபுரியத் தயாராயிருக்கிறோம்.

முப்பது கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் ஒன்று பாராள்வோரிடம் நீட்டப்பட்டு, அது குப்பைக் கூடையிலே, உறங்கிக்கொண்டிருக்கிறது என்பதை நானறிவேன். உங்கள் கோரிக்கைகள் மட்டுமல்ல இந்த நாட்டில் எத்தனையோ வேண்டுகோள்கள் டில்லி மாநகரத்தின் பெரிய குப்பைக் கூடையிலே கேட்பாரற்றுத் தூங்கிக்கொண்டுதானிருக்கின்றன. சில ஆண்டுகளில் "குப்பைக் கூடை" என்ற பெயர்

மாற்றப்பட்டு அவைகள் "கோரிக்கைக் கூடை" என்று கூட அழைக்கப்படலாம்.

வாழ்க்கைப் புள்ளி 150 என்று இருந்தபோது முதல் சம்பளக் கமிஷன் வகுத்த சிபாரிசுகளை ஓரளவு ஏற்று உங்களுக்கு ஊதியம் அளவிடப்பட்டது. இப் போதோ, 150 ஆக இருந்த வாழ்க்கைப் புள்ளி, விலை வாசி உயர்வுகளால் — வேறு பல சூழ்நிலைகளால் 400 என்று ஆகிவிட்டது. வாழ்க்கைப் புள்ளி 400 என்றுகிவிட்டபோதிலும், முதல் சம்பளக் கமிஷன் சிபாரிசுப்படியே நடப்பது உசிதமல்ல. இரண்டாவது சம்பளக் கமிஷன் ஒன்றை அமைத்திட வேண்டு மென்பதே அந்த முப்பது கோரிக்கைப் பட்டியலில் முதன்மையானது என்றும் நான் உணர்கிறேன்.

இந்தக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டதும், நேருவைப் பேட்டி காண வேண்டுமென்று பலமுறை முயன்று தோற்றிருக்கிறீர்கள். பகவத் சந்நிதானம் பூட்டியிருக்கிறது என்றே டில்லி நந்திகள் தாக்கல் கொடுத்துவிட்டன. அய்யோ பாவம்! பஞ்சாப் மொழி வெறிக் கிளர்ச்சியில் ஈடுபட்ட பண்டாரங்களின் தலைவர் ஏதோ ஒரு பத்திரிகையில் எழுதிய திறந்த மடலுக்குப் பதில் மடலாகத் தனி மடல் எழுதிய தயாபரராம் பண்டித நேரு பெருமான், பாடுபடும் நாடி நரம்புகளாம் உங்களது முகத்தைப் பார்க்கவும் இயலாது எனக் கூறி பறந்துவிட்டார்—வெளி நாடு! இதற்குமேல் என்ன? வேலை நிறுத்தம் செய்யலாமா என யோசனை கேட்டு, அதற்கான ஆதரவைப் பெரு வாரியாகப் பெற்று வருகிறீர்கள்.

தபால்காரர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அது எவ்வளவு பயங்கரமாயிருக்கு மென்று யாரும் கற்பனைகூடச் செய்யமுடியாது. பொது மக்களின் ஆதரவைப் பெறமுடியுமா என்று சிலர் ஐயுறலாம். எந்தத் தொழிலாளிக்கும் இல்லாத பிரச்சார வசதியும். வாய்ப்பும் தபால் தந்தி தொழிலாளர்களுக்குத்தான் இருக்கிறது என்பேன் நான். ஆலைத் தொழிலாளி வேலைநிறுத்தம் செய்வதெனில் ஆயிரமக்களைக் கூட்டி தங்கள் அருமருந்தன்ன தலைவனை அழைத்து வேலை நிறுத்தக் காரணத்தை விளக்குவான், நீங்களோ அப்படியல்ல. தேர்தல் நேரத்தில் அபேட்சகன் வீட்டுக்கு வீடுபோய் ஓட்டு கேட்பதுபோல— தபால் ஏந்திச் செல்லும் தொழிலாளத் தோழர்கள் தபாலைக் கொடுத்துவிட்டு அந்த வீட்டாரிடம் வேலை நிறுத்தத் தகவலையும் கூறிவிட்டு வரலாம்.

நாளை முதல் சில நாளைக்குக் கடிதம் வராது என்று துவங்கி, காரணத்தை விளக்கி, காதலனின் கடிதம் பார்த்து நிற்கும் காரிகையானாலும் – மைந் தனின் மடல் நோக்கும் மாதாவானாலும் அவர்களைத் தங்களுக்காக பத்து நாளைக்குத் தபால்களைத் தியாகம் செய்யுமாறு கேட்டுக்கொண்டு அவர்களது ஆதரவைப் பெற இயலும்

இதை நான் சொல்லுவது, இவ்வளவு வசதி இருக்கிறது. ஆகவே வேலை நிறுத்தம் செய்யுங்கள் என்று தூண்டிவிட அல்ல.

இவ்வளவு ஆற்றல் படைத்தவர்கள். ஆகவே, அரசாங்கமே ! அவர்களது குறைகளைக்கேள். என்று அரசுக்கு அச்சுறுத்துவதற்காகவே.

கிளர்ச்சிப்புகை கிளம்புகிற இடமெல்லாம் ஓடி எங்களை விளம்பரப் படுத்திக்கொள்ளும் நப்பாசைப் படைத்தவர்களல்ல நாங்கள். அதற்காக அல்லலுறு வோர் பக்கம் நிற்காமல் ஓடிவிடுகிறவர்களும் அல்ல.

போருக்கு அகழ்கடந்து அரணுக்குள் நுழைய வேண்டுமாயின் அந்த அகழில் பாலமாக இருந்து உங்களுக்குப் பணிபுரிகிறோம்.

பொதுமக்கள் தொடர்புக்கும் அவ்வாறே! அமைதி வழியில் அரசினருடன் கலந்துபேசி நன் முடிவு காண்பதாயின் அதற்கும் அவ்வாறே உதவிட என்றும் தயாராயிருப்போம் என உறுதியளிக்கிறேன்.

(சென்னையில் 3-7-57-ல் தந்தி நிர்வாக ஊழியர் கூட்டப்பேச்சு)

———

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்

அன்பளிப்பு